விலை: ரூபா 20 பக்கங்கள் 28

உதயன்

சுடர் 30 கதிர் 233 வள்ளுவர் ஆண்டு 2046 ஆடி 1, வெள்ளிக்கிழமை 17.07.2015

17 JUL 2015

# மஹிந்த இன்று மீண்டும் களம்



## மஹிந்தவுக்கு அறை ரணிலுக்கோ குட்டு

### இதுதான் மைத்திரியின் உரை என்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூலை 17

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது விசேட உரையின் மூலம் மஹிந்த ராஜபக்ஷவின் கன்னத்தில் அறைந்துள்ளார். பிரதமர் ரணிலுக்கும் தொண்டை வரை இரத்தம் வருமளவுக்கு நடு மண்டையில் ஓங்கி குட்டியுள்ளார்" - இவ்வாறு தெரிவித்துள்ள ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க அது எப்படி நடந்தது எனவும் விவரித்தார்.



ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது, மஹிந்த ராஜபக்ஷ

பக்கம் 24

## ரூ. 1 லட்சம் செலுத்தி வாகனம் பாவிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

தேர்தல் நடவடிக்கைகளுக்கு அரச வாகனங்களைப் பயன்படுத்தும் பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களும் குறித்த அமைச்சுக்கு மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அரச தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்

பக்கம் 24

## மஹிந்தவுக்கு எதிராக இன்று ஜே.வி.பி. முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 17

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஜே.வி.பி. இன்று மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு

பக்கம் 24

## அ'புரத்தில் கன்னிப் பரப்புரைக் கூட்டம்

கொழும்பு, ஜூலை 17

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேர்தல் பரப்புரைக் கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது. 'தேசத்துக்கு உயிர் கொடுப்போம்; மஹிந்தவுடன் இணைவோம்." என்ற தொனிப்பொருளில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர். ஆயினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கலாவெவ தொகுதி அமைப் பாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இதில் பங்கேற்கமாட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மைத்திரிபால சிறிசேன

பக்கம் 24

"ஜனாதிபதி மைத்திரிபாலவின் உரை தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த மஹிந்த அதற்கு 17ஆம் திகதி (இன்று ) பதில் கிடைக்கும் என்று கூறியிருந்தார்.

## காணாமல்போனோர் விடயத்தில் எந்த முன்னேற்றமுமே இல்லை

### மனித உரிமைகள் நிலைமை தற்போது சற்றுப் பரவாயில்லை என்கிறது பிரிட்டன்

யாழ்ப்பாணம், ஜூலை 17

போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனதாகக் கூறப்படும் முன்னாள் போராளிகள் உட்பட காணாமற்போனோர் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

ஆயினும் நடப்பு ஆண்டின் முதல் அரையாண்டில் இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை சற்று முன்னேற்றம் அடைந்துள்ளது என்றும்

பக்கம் 24

## மஹிந்தவை கொண்டுவர சதியா? இல்லையென மறுக்கின்றார் சுசில்

யாழ்ப்பாணம், ஜூலை 17



மஹிந்த ராஜபக்ஷவைத் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர சதித் திட்டம் தீட்டப்பட்டது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுமத்திய குற்றச்சாட்டை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் சுசில் பிரேமஜயந்த முற்றாக நிராகரித்தார்.

பக்கம் 24

## பிரதமரை ஜனாதிபதியே தேரிவார்!

*அமைச்சர் ராஜித கூறுகின்றார்*

கொழும்பு, ஜூலை 17

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் புதிய பிரதமராக பதவியேற்பவர் யார் என்பதை தீர்மானிப்பவர் ஜனாதிபதியே என அமைச்சரவைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான

பக்கம் 24

## மீள்குடியமர்வை ஆராய யாழ்.வருகிறார் பஸநாயக்க

யாழ்ப்பாணம், ஜூலை 17

மீள்குடியமர்வு தொடர்பில் ஆராய்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பஸநாயக்க நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. வலி.வடக்கில் மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்பட்ட பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை

பக்கம் 24

## மைத்திரி உரையின் சூட்டால் சு.க. உறுப்பினர்கள் கொதிப்பு

### பிரதியமைச்சர் மூவர் நேற்று பதவி துறந்தனர்



கொழும்பு, ஜூலை 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக இருந்துகொண்டு கட்சிக்கு எதிரான கருத்துகளை முன்வைத்தமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அரசுக்குள் அங்கம் வகித்த மூன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதியமைச்

பக்கம் 24

→

யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்களது விருப்பு இலக்கங்கள் 10,15 ஆம் பக்கங்களில்...

## வேட்பாளர் இலக்கங்கள் நேற்று வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 17

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்குரிய விருப்பு இலக்கங்கள் தேர்தல்கள் திணைக்களத்தால் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

பக்கம் 24

## அரச சொத்துக்கள் பயன்படுத்த தடை

யாழ்ப்பாணம், ஜூலை 17

வடக்கு உட்பட நாடளாவிய ரீதியில் அரச சொத்துகள் தேர்தல் பரப்புரைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், எவ்வகையிலும் அவற்றைத் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த வேண்டாமென

பக்கம் 24

நாளைய தலைவர்களான இளைஞர், யுவதிகளின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக

தொழில் முயற்சியாண்மை கொண்ட புதிய சந்ததியை உருவாக்குவதற்கு....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஈ. சரவணபவன் 5

(இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி)



# தங்கமான குழந்தைகள் கொண்டுவரும் எந்தப் பதக்கமும் எமக்கு தங்கப் பதக்கமே

## சிவபூமி சிறுவர்களை ஒலிம்பிக் தொடருக்கு வழியனுப்பும் நிகழ்வில் யாழ் இந்தியத் துணைத்தூதர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 17

எந்தப் பதக்கமாக இருந்தாலும் இந்த தங்கமான குழந்தைகள் கொண்டு வந்தால் அது எமக்குத் தங்கப் பதக்கமே இவ்வாறு தெரிவித்தார் யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆறுமுகம் நடராஜன்.

அமெரிக்காவில் இம்மாதம் 26ஆம் திகதி நடைபெறவிருக்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான ஒலிம்பிக் தொடரில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் மாணவர்கள் அரசகுலசூரியர் மயூரன், ஜெயச்சந்திரன் மனோஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு நேற்று பாடசாலையில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுவாக பாடசாலைகளிலேயே போட்டிகளில் கலந்துகொண்டு முதல்மாணவனாக கல்வியிலோ விளையாட்டிலோ வருவதென்பதும் அதேபோன்று மாகாண ரீதியில் வருவதென்பதும் தேசிய ரீதியில்கூட போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவதற்கு அப்பால் அந்தப் போட்டியிலே கலந்து கொள்வதையே நாம் சாதனையாக எண்ணுகின்றோம்.

ஆனால் கடவுளின் இந்த இரண்டு செல்லக்குழந்தைகள் எமது நாட்டை விட்டு கடல்கடந்த இன்னோர் நாட்டுக்கு போய் ஒலிம்பிக் தொடரில் கலந்து கொள்வதென்பது சாதாரண விடயமல்ல. இது ஒரு மிகமிகப் பெரிய சாதனை. ஏனெனில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பல ஆண்டு காலம் போரினால் பாதிக்கப்பட்டவை. இருந்தபோதும் அமெரிக்க நாட்டில் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளச் செல்வது என்பது உண்மையிலே இமாலய சாதனை.

இதற்கு உறுதுணையாக இருந்த இந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மதிக்கப்படவேண்டியவர்கள்.

இந்த இரு மாணவர்கள் மட்டுமல்ல இங்கு கல்வி கற்கும் எல்லா மாணவர்களும் சாதனை புரிய வேண்டும். இவர்களை நாம் ஊனமுற்ற குழந்தைகள், காதுகேட்காத, கண்தெரியாத குழந்தைகள் எனக் கூறுவதை ஓரம்கட்டி இந்தக் குழந்தைகளை நமக்குச் சமமாக வைத்துப் பாதுகாக்க வேண்டும். இவர்கள் அமெரிக்காவில் இருந்து திரும்பி வரும்போது பதக்கங்களுடன்தான் திரும்பி வருவார்கள். எந்தப் பதக்கமாக இருந்தாலும் இந்த தங்கமான குழந்தைகள் கொண்டு வந்தால் அது எமக்குத் தங்கப்பதக்கமே. இவர்கள் எல்லோரும் விளையாட்டில் மாத்திரமன்றி கல்வியிலும் சிறந்து விளங்கவேண்டும். அதேபோன்று உதவி ஒத்தாசை, ஒத்துழைப்பு என்பனவும் வழங்கப்படவேண்டும். - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண இந்தியத் துணைத்தூதுவருடைய பாரியார் திருமதி ஆறுமுகம் நடராஜன், புகழ்பூத்த ஒலிம்பிக் வீரர் மற்றும் ஒலிம்பிக் ஆலோசகர் கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் தி.வேல்நம்பி, யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராசா, இளைப்பாறிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு விரிவுரையாளர் மற்றும் வடமாகாண விசேட ஒலிம்பிக் பணிப்பாளர் மா. இளம்பிறையன் ஆகியோர் வழங்கினர். (ற-ரி)

# 'ஆணையாளருக்கு கூறுங்கள்'

கொழும்பு, ஜூலை 17

எதிர்வரும் நாடளுமன்றத் தேர்தலில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகள் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு உடனடியாக அறிவிக்கும் வகையில் 'ஆணையாளருக்கு கூறுங்கள்' எனும் பெயரில் முகப் புத்தகக் கணக்கு திறக்கப்பட்டுள்ளது.

முகப்புத்தகமானது மக்கள் மத்தில் மிகவும் வேகமாகப் பரவி, தாக்கத்தை ஏற்படுத்துவதனாலேயே தேர்தல் ஆணையாளர் இதனைத் திறந்துள்ளார்.

குறித்த முகப்புத்தகக் கணக்கில் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் சட்டங்கள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் குறித்தும் அறிந்துகொள்ள முடியுமென தேர்தல்கள் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார். (த)



லண்டனில் பிறந்த தனது பேர்த்தியின் முதலாவது பிறந்த தினத்தை கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம சிறார்களுடன் கொண்டாடி மகிழ்தார் பாட்டனான மகாதேவன். இந்த நிகழ்வானது கிளிநொச்சியில் உள்ள மகாதேவ சிறுவர் இல்லத்தில் இல்லத்தின் தலைவர் இராசநாயகம் தலைமையில் நேற்று மாலை இடம்பெற்றது.

இப்பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது லண்டனில் பிறந்த நாளை கொண்டாடும் சாய்ரூபாவின் தந்தையான சத்தியரூபனால் வழங்கப்பட்ட புத்தாடைகளை பாட்டனான மகாதேவன் மகாதேவ சிறுவர் இல்லத்தை சேர்ந்த 406 சிறார்களுக்கும் வழங்கினார். அந்த ஆடைகளை அணிந்தபடியே சிறார்களும் பிறந்தநாள் கொண்டாட்டத்தை கண்டு மகிழ்ந்தனர்.அத்துடன் நேற்றுப் பிறந்தநாளை கொண்டாடும் மகாதேவ சிறுவர் இல்லத்தின் சிறுமிகள் இருவருக்கு அங்கே கேக் வெட்டப்பட்டு பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வானது அங்கே உள்ள சிறார்களை மிகவும் குதூகலிக்க செய்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. (ற-21)

# வாக்காளர்களுக்கு மது விநியோகம்

## கபே குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 17

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வாக்காளர்களுக்குப் போதைப் பொருள் மற்றும் மதுபானங்களை வழங்கி வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சி இடம்பெறுவது தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளது என்று கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

புத்தளம், பதுளை, மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலிருந்து இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் சட்டத்தில் இலஞ்ச ஊழல் அதிகரிப்பு குற்றமாகக் கருதப்படுவதுடன், மதுவரி கட்டளை சட்டத்தின் விதிகளை மீறும் நடவடிக்கை இது என்று கபே அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

எந்த வகையிலாவது பொருள்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் தேர்தல் சட்டத்தை மீறும் செயல் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதுபான வகைகளை இலவசமாகப் பெற்றுக்கொடுப்பதால் அதிக மான வாக்காளர்கள் மற்றும் ஆதரவாளர்களைக் குறித்த கட்சியில் இணைத்துக்கொள்வதற்கு வேட்பாளர் கள் முயல்வது பிரயோக தேர்தலுக்கு முரணானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கபே அமைப்பால் இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் மதுவரி திணைக்களத்திற்கும், தேர்தல்கள் திணைக்களத்திற்கும் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து கபே அமைப்பிடம் இதுவரை 244 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள் ளன என்று கூறப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாடுகளில் 224 முறைப்பாடுகள் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பிலும், மிகுதி 20 முறைப்பாடுகள் வன்முறைகள் தொடர் பிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று கபே அமைப்பு தெரிவித்துள்ளது. (த)

# சு.கவின் முடிவு நெருங்குகிறது

## சொல்கிறார் சம்பிக்க



கொழும்பு, ஜூலை 17

ஜனவரி 8 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியின் பின்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு முன்னேறிச் செல்ல பொன்னான வாய்ப்பு கிடைத்ததாகவும் அந்த கட்சியில் இருக்கும் அதிகார பேராசை கொண்ட சிலர் அதனை தடுத்ததன் காரணமாக சுதந் திரக் கட்சி தனது முடிவை நெருங்கியுள்ளதாகவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 58 லட்சம் வாக்கு வங்கி இருப்பதாக கூறும் நபர்களுக்கு ஓகஸ்ட் 18 ஆம் திகதி உண்மைதெரிய வரும்.

சிலர் போடும் கணக்குகளுக்கு பொதுத் தேர்தலில் மக்கள் சரியான பதிலை வழங்குவர். முந்தைய அரசாங்கம் சமூர்முத்தி உதவி பெறுவோரை தனது அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியது.

சமுர்த்தி உதவிபெறுவோர் தற்போதைய அரசுடன் இணைந்துள்ளனர் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய உட்பட அரசி யல் கட்சிகள்நல்லாட் சிக்கான ஐக்கிய தேசிய முன்ன ணியில் இணைந்தது மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதி ராக அல்ல எனவும் நடைமுறையில் இருந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காகவே இணைந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள் ளார். (த)

# எம்முடனேயே ஜனாதிபதி

## சொல்கிறார் ராஜித

ஜனாதிபதி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு தலைமை வகித்தாலும், எங்கள் நிலைப்பாட்டிலேயே அவர் இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிடுகின்றார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று வியாழக்கிழமை தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தச் செய்தியாளர் சந்திபில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள், தற்போது நீங்கள் எந்தக் கட்சி உறுப்பினர்?, ஜனாதிபதி மைத்திரியின் ஆசி உங்கள் அணிக்கு உள்ளதா? என கேள்விகளைத் தொடுத்தனர். குறித்த கேள்விகளுக்கு பதிலிளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இதன்போது அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

சிறிலாங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த நான் தற்போது நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினராக இருக்கின்றேன்.

முடிந்தால் எங்களை கட்சியிலிருந்து நீக்கிப் பார்க்கட்டும், கடந்த முறையும் அவர்கள் எங்களை கட்சியிலிருந்து நீக்கினார்கள். நீக்கியதன் பிறகு மீண்டும் எமக்கு உறுப்புரிமையைக் கொடுத்தார்கள்.

அதேபோல் அடுத்த மாதம் 18 ஆம் திகதி மீண்டும் எங்களுக்கு கட்சியின் உறுப்புரிமை கிடைக்கும். அவர்கள் விலகியவர்களை நோக்கி ஓடி வந்து இணைத்துக் கொள்வதுடன், அமைச்சரவையிலும் அமர்ந்து கொள்வார்கள்.

ஜனாதிபதியும் எங்கள் நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். அவருடைய உரையிலேயே அது நன்கு தெளிவாகின்றது. ஜனாதிபதியினால் போட்டியிட முடியாது என்பதால் போட்டியிடவில்லை என்பதைத் தவிர அவர் எங்களுடனேயே இருக்கின்றார்.

எனினும் நல்லாட்சிக்காக குரல் கொடுத்ததுடன், இந்த தேர்தலில் போட்டியிடுகின்ற ஏனைய உறுப்பினர்களுக்காகவே. ஜனாதிபதி தலைவர் என்ற ரீதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்றார். எனினும் அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் குழுவிற்கு தலைமை வகித்தாலும் அவர் இருப்பது எமது நிலைப்பாட்டிலேயே என்றும் கூறினார். (த)

# அம்பாந்தோட்டை மக்களுக்கு மஹிந்த சேவையாற்றினாரா?

## கேட்கிறார் அஜித் பெரேரா

கொழும்பு, ஜூலை 17

அம்பாந்தோட்டை மக்களுக்கு சேவையாற்றியிருந்தால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தப்பிச்சென்று குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட்டிருக்க வேண்டிய அவசியமில்லை என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அம்பாந்தோட்டை மக்களுக்கு சேவையாற்றவில்லை. அதன் காரணமாகவே தப்பிச் சென்று வேறு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட நேரிட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டு காலத்தை மக்கள் மறக்க மாட்டார்கள். ஒரு சொட்டு இரத்தம் கூட சிந்தாமல் கடந்த ஜனவரி மாதம் 8ம் திகதி இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

100 நாள் திட்டத்தில் இவ்வளவு சேவை செய்த நாம் ஐந்து ஆண்டுகள் கிடைத்தால் எவ்வளவு சேவைகளை மக்களுக்கு ஆற்ற முடியும். நிச்சயமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு 113 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றுத் தாருங்கள்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி மேலும் ஆறு பேரையும் அழைத்துக் கொண்டே களுத்துறை மாவட்டத்தில் நாடாளுமன்றம் செல்வேன் என அஜித் பெரேரா தெரிவித்துள்ளார். (த)

# அதிவேக நெடுஞ்சாலைகள் நாட்டுக்கு மிக முக்கியமல்ல

## மல்வத்து பீடாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

விமான நிலையங்களும் அதிவேக நெடுஞ்சாலைகளும் நாட்டுக்கு மிகவும் முக்கியமானவை யல்ல என்று மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்டத் தில் முன்னாள் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட சகல அபிவிருத்திப்பணிகளும் பிரயோசனமானவை எனக் கருதமுடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மக்கள் உணவும் குடிதண்ணீருமே கோருவதாகவும் விமான நிலையங்களை அல்ல எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, மல்வத்து பீடாதிபதியைச் சந்தித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிளவை ஏற்படுத்த முயற்சிப்பதாகவும், அபிவிருத்திப் பணிகளை இடைநிறுத்த முயற்சிப்பதாகவும் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியிருந்தார்.

முன்னணியில் அதிகளவு கட்சிகள் அங்கம் வகிப்பதாகவும் இதில் சில சுயலாப நோக்கில் செயற் பட்டு வருவதாகவும் மல்வத்து பீடாதிபதி தெரிவித்துள்ளார். (த)

# போதைப் பாவனையை கட்டுப்படுத்த வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 17

பெரும் பாதிப்பையும், ஆபத்தையும் விளைவிக்கக் கூடிய கஞ்சா மற்றும் போதைப் பொருள்களை இளைஞர்கள் உபயோகிப்பதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வகாப்தீன்.

நேற்றுமுன்தினம் இளைஞன் ஒருவன் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இளைஞர்கள் மத்தியில் காணப்படும் கஞ்சாப் பாவனை, மதுப் பாவனையை விடவும் மிக ஆபத்தானது என்று குறிப்பிட்ட நீதிவான் இது மிக விரைவில் மூளையைத் தாக்கும் ஒரு போதைப்பொருளாகக் காணப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

இளவயதினர் இதுபோன்ற போதைப் பொருள்களை உபயோகித்து தமது எதிர்காலத்தைப் பாழடிக்கின்றனர். கஞ்சாப் பாவனையை விரைவாகக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் மத்தியில் காணப்படும் கஞ்சாப் பாவனையால் அவர்கள் மட்டுமல்லாது அவர்களைச் சார்ந்தோர் – அவர்களது குடும்பங்களும் சீரழிகின்றன என்று குறிப்பிட்ட நீதிவான் அதிகளவில் இள வயதினரே போதைப் பொருள்களுடன் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர் என்றும் தெரிவித்தார்.

(ற–21)





கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் நேற்று போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் மதகுருமார், வைத்தியர்கள், கரைச்சி பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவையாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவிலான பாவனையில் உள்ள போதைப்பொருள்களை தடுக்கும் வகையிலும் குறித்த கருத்தரங்கு இடம்பெற்றிருந்தது. (ற–21)

# கஞ்சாவுடன் சிக்கியவருக்கு 6 மாதங்கள் கடூழியச் சிறை

## இராணுவத்தினருக்காகவே கொண்டு சென்றதாக வாக்குமூலம்

கிளிநொச்சி, ஜூலை 17

கிளிநொச்சி பாரதிபுரத்தில் இராணுவத்தினருக்குக் கஞ்சா வாங்கிச் சென்ற குற்றச்சாட்டிலும், வீடொன்றுக்குள் புகுந்து திருட முற்பட்ட குற்றச்சாட்டிலும் கைது செய்யப்பட்ட 18 வயது இளைஞனுக்கு ஆறுமாத கடூழிய சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ.வஹாப்தீன்.

குறித்த இளைஞன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தார். இரணைமடுச் சந்தியை அண்மித்த பாரதிபுரம் பகுதியில் முற்பகல் 11 மணியளவில் வீடொன்றின் கூரை பிரித்து இறங்கி குறித்த இளைஞன் திருட முற்பட்டுள்ளான். குறித்த வீட்டிலிருந்த பெண் கத்திக் கூக்குரலிட்டதை அடுத்து அயலவர்களால் குறித்த இளைஞன் மடக்கிப் பிடிக்கப்பட்டிருந்தான். குறித்த இளைஞனை சோதனையிட்டபோது அவனிடம் கஞ்சா இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து இளைஞன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

தான் அக்கராயன் முறிகண்டி வீதியின் 4 கட்டைப் பகுதியில் கடமையில் இருந்த இராணுவத்தினருக்கு கஞ்சா வாங்கிச் சென்றதாகவும், திருடும் நோக்குடன் வீட்டுக்குள் புகுந்ததாகவும் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் இளைஞன் தெரிவித்துள்ளான். அதையடுத்து குறித்த இளைஞன் மீது இரு வழக்குகளைப் பதிவு செய்த பொலிஸார் நேற்று இளைஞனை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தினர்.



5 ஆயிரத்து 860 மில்லிகிராம் கஞ்சாவைத் தனதுடைமையில் வைத்திருந்தமை தொடர்பான வழக்கில் குறித்த இளைஞனுக்கு ஆறுமாத கால கடூழியச் சிறைத் தண்டனையும் 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத்தைக் கட்டத் தவறின் மேலும் ஆறுமாத கால சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது.

வீட்டுக்குள் புகுந்து திருடமுற்பட்டமை மற்றும் வீட்டு உரிமையாளரைத் தாக்க முயன்றமை தொடர்பான இரண்டாவது வழக்கில் குறித்த இளைஞன், இளைஞனின் தாய், தந்தையர் ஆகியோர் நீதிவானால் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

அதன்போது குறித்த கஞ்சாவைத் தான் திருடச் சென்ற வீட்டிலேயே வாங்கியதாகக் கூறினான். இளைஞனின் தாய் தன் மகன் கஞ்சா உபயோகிப்பதாகவும், மனநிலை பாதிக்கப்பட்டுச் செயற்படுவதாகவும் நீதிமன்றில் வாக்குமூலம் வழங்கினார். அதையடுத்து குறித்த இளைஞரை எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த இளைஞனை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை உளநல மருத்துவரிடம் பரிசோதனைக்கு உட்படுத்தி மன்றுக்கு மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ற–21)

# யாழ்.தொழில்நுட்ப கல்லூரியில் சுகாதாரச் சீர்கேடுகள்

## நடவடிக்கை எடுப்பதில் நிர்வாகம் தாமதம் என மாணவர்கள், விரிவுரையாளர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 17

கொக்குவிலில் உள்ள யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் வகுப்பறைகளுக்குள் பல மாதங்களாகப் புறா எச்சங்கள், இறக்கைகள் கொட்டிக் கொண்டிருக்கின்றன. மலசல கூடங்களில் 10 இற்கும் மேற்பட்ட இறந்த புறாக்களின் உடலங்கள் சில வாரங்களாக அகற்றப்படாது நாற்றமெடுக்கின்றது. ஆனால் நிர்வாகத்தினர் எந்த நடவடிக்கையும் எடுக்காதுள்ளனர் என்று குற்றஞ்சாட்டுகின்றனர் மாணவர்களும் விரிவுரையாளர்களும்.


இவை உட்பட இன்னும் பல சீர்கேட்டுப் பிரச்சினைகள் அங்கு காணப்படுகின்றன என்றும் சுகாதாரத் துறையினர் அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வகுப்பறைகளுக்குள் புறாக்களின் எச்சங்கள், இறக்கைகள் ஒரு வருடமாகக் கொட்டிக் கொண்டிருக்கின்றன. வகுப்பறைகளின் லெவல் சீற்களும் ஒழுங்காக இல்லை. அதனூடாகவே அதிகளவில் அவை கொட்டுகின்றன. அவற்றுடன் இறக்கைகளில் உள்ள எறும்புகள், உண்ணி போன்றவைகளுக்கும் குறைவில்லை. தும்மல், தோல்பகுதியில சொறி, கடி என மாணவர்கள் நாளாந்தம் அவதிப்படுகின்றனர்.– என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மலசலகூடங்களுக்கு உரிய வகையில் தண்ணீர் கிடைப்பதில்லை. 2003 ஆம் ஆண்டு கட்டடத்தை உபயோகிக்கத் தொடங்கியதிலிருந்து இதுவரை உரிய சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என்பதே மாணவர்களதும் விரிவுரையாளர்களதும் குற்றச்சாட்டாக உள்ளது.

மலசல கூடத்தினுள் நுழைய முடியாதவாறு 10 இற்கும் மேற்பட்ட புறாக்கள் உயிரிழந்து நாற்றமெடுக்கின்றன. அங்கு போகமுடியாதவாறு நிலைமை உள்ளது. அங்கு மட்டுமன்றி அதன் அருகாக உள்ள மற்றைய மலசலகூடத்துக்குக்கூடச் செல்ல முடியாதவாறு நாறிக்கொண்டிருக்கிறது. அதனால் ஒரு மலசலகூடம் பூட்டப்பட்டுள்ளபோதும் அதனுள் உள்ள புறாக்களின் உடலங்கள் இன்னும் அகற்றப்படவில்லை. அதனால் அந்தப் பகுதி தொடர்ந்து நாறிக்கொண்டிருக்கிறது. அதனால் மற்றொரு கட்டடத் தொகுதிக்குச் செல்ல வேண்டிய அவல நிலையில் அங்கு பயிலும் ஆண்களும் பெண்களும் அவதிப்படுகின்றனர். – என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வாரநாள்களில் ஏராளமான மாணவர்கள் அங்கு கற்கின்றனர். வார இறுதிநாள்களிலும் 800 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 6 மணி வரையும் கல்வி கற்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் நிர்வாகத்தினர் அந்தக் குறைபாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கிறார்களில்லை என்று மாணவர்களும் விரிவுரையாளர்களும் குற்றம் சுமத்துகின்றனர்.



தண்ணீரும் அங்கு சிக்கலுக்குரியதாகவே உள்ளது. போதிய தண்ணீர் மலசல கூடங்களுக்குக் கூடக் கிடைப்பதில்லை. அதனால் தற்போது பாவனையில் உள்ள மலசலகூடமும் மோசமான நிலையில் உள்ளது. இந்தப் பிரச்சினை தொடர்பில் பல மாதங்களுக்கு முன்னரும் சுட்டிக் காட்டப்பட்டது. ஆனால் கல்லூரியின் நிர்வாகத்தினர் எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. வகுப்பறைகளின் மேற்புறமாக உள்ள பகுதியில் மிகமோசமான சுற்றாடல் நிலவுகிறது.


நேற்றும், இன்றும் அதே தொழில்நுட்பக் கல்லூரியில் சர்வதேச திறன்கள் தினத்தையொட்டி கண்காட்சி முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. கண்காட்சிக்கு வருபவர்களும் அங்குள்ள நாற்றத்தாலும் சீர்கேட்டாலும் அவதிப்பட்டனர் என்றும் மாணவர்கள் தெரிவித்தனர்.

சீர்கேடுகள் பற்றிப் பணிப்பாளரிடம் கூறினால் கவனத்தில் கொள்வதில்லை. சாட்டுப் போக்குக்கூறித் தட்டிக் கழித்துவிடுவார் என்கின்றனர் மாணவர்களும் விரிவுரையாளர்களும்.

இது தொடர்பில் தொழினுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் யோகராஜனுடன் தொடர்புகொண்டு கேட்டோம்.

குறித்த மலசலகூடங்களுக்கு தண்ணீர் அடிப்பதற்கான மின்மோட்டர் பழுதடைந்துள்ளது. முன்னரும் ஒரு மோட்டர் பழுதடைந்திருந்து திருத்தப்பட்டது. தற்போதுள்ளதனைத் திருத்துவதற்கு அனுப்பியுள்ளோம். புதிய மோட்டர் இன்று அல்லது நாளை பொருத்தப்பட்டுவிடும். கொரிய அரசு அந்தக் கட்டடத்தைக் கட்டியது. ஆனால் தண்ணீர் தாங்கி கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது தொடர்பில் அறிவித்துள்ளோம்.– என்று அவர் கூறினார்.

வகுப்பறைக்குள் கழிவுகள் கொட்டுவதால் அதனைச் சீர் செய்யுமாறு தொழிநுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளோம். அவர்கள் கல்லூரிக்கு வந்து பார்வையிட்டிருந்தனர். திருத்தம் செய்வதற்கான பண மதிப்பீடு செய்யப்பட்டு ஒரு மாதத்துக்கு முன்னர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுவிட்டது. ஆயிரம் பேர் வரையில் மாணவர்கள் கற்பதனால் தண்ணீர் வழங்குவது சற்றுக் கடினம்தான். அவை அனைத்தும் விரைவில் சீர் செய்யப்பட்டுவிடும். – என்றும் தெரிவித்தார். (ற–4)



யாழ்.நகரில் ஆரிய குளத்தில் இருந்து கடலுக்குச் செல்லும் பிரதான கழிவு நீர் கால்வாயின் நீரோட்டம் பல மாதங்களாகத் தடைப்பட்டுள்ளது. அதனால் கழிவு நீர் தேங்கிக் காணப்படுகின்றது. மணிக்கூட்டு வீதிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மாடிக் கட்டடம் ஒன்றின் முன்பாகப் பாலம் அமைப்பதற்காகப் போடப்பட்ட தடை இதுவரை அகற்றபடாததாலேயே நீரோட்டம் தடைப்பட்டுள்ளது. அதனால் துர்நாற்றம் வீசுவதோடு, நுளம்புப் பெருக்கமும் அதிகரித்து அசௌகரியம் ஏற்படுகின்றது என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
குறித்த கால்வாய் யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்.போதனா வைத்தியசாலை, வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஆகியவற்றின் அருகாகச் செல்கின்றது.
அதேவேளை, சுகதாரப் பகுதியினர் அவ்வப்போது டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அண்மையிலும் அதுபோன்ற செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன்போது நுளம்பு உற்பத்தியாகக் கூடிய – வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களை அடையாளம் காண்பதோடு அதற்கு ஏதுவாகச் செயற்பட்ட வீட்டு உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொண்டு வருகின்றனர் என்பது தெரிந்ததே. (ற-135)

## போதைப் பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி



யாழ்ப்பாணம், ஜூலை 17
போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு தொடர்பான ஜனாதிபதியின் செயற்றிட்டத்துக்கு அமைவாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை உடுவில் பிரதேச சபையின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது. அதில் உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி ஜெயக்குமார், பிரதேச சபைச் செயலாளர், பொதுச் சுகாதார பரிசோதகர், மதுவரித் திணைக்கள சுன்னாகப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.



பேரணி உடுவில் பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து சுன்னாகம் சந்திவரை நடைபெற்றது. போதைப் பொருளால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துக் காட்டும் வீதிநாடகமும் நடத்தப்பட்டது.
இதன்போது கருத்துத் தெரிவித்த உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், கலாசார சீரழிவுகள், இளந்தலை முறையின் எதிர்காலப் பாதிப்புக்கள், மிகவும் கஷ்ட நிலையில் உள்ள குடும்பங்கள் மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்படுதல் போன்ற பலதரப்பட்ட இன்னல்களுக்குக் காரணமாக விளங்குவது போதைப் பொருள் பாவனையே. ஒரு நல்ல எதிர்காலத்தை நோக்கி நகர வேண்டிய நாம் இது போன்ற தவறான பாதைகளைத் தேர்ந்தெடுத்து நமது நாட்டினதும் எதிர்காலத்தைச் சிதைப்பது குறித்து அனைத்து மக்களுமே விழிப்புணர்வு கொள்ள வேண்டும். போதைப் பொருள்களையும் மதுபான வகைகளையும் மக்கள் மத்தியில் இருந்து முழுமையாக அழித்தல் அவசியம்.– என்று தெரிவித்தார். (ற-7)

# கடற்கரை பிரதேசங்களை சுத்தப்படுத்தத் தீர்மானம்



கொழும்பு, ஜூலை 17
கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரைப் பிரதேசங்களை சுத்தப்படுத்துவதற்கு மாநகர சபை நேற்றுத் தீர்மானித்துள்ளது.
கல்முனை யானைப்பந்தி கோயில் வீதி உட்பட சில வீதிகளில் தினமும் குவிக்கப்படுகின்ற திண்மக் கழிவுகளை தினசரி கிரமமாக அகற்றுவதற்கும் இதன்போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.நிஸாம் காரியப்பர் தலைமையில் நேற்று நடைபெற்ற மாநகர சபையின் சுகாதாரப் பிரிவு உத்தியோகஸ்தர்களுடனான கலந்துரையாடலின் போதே இத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.
பெருநாள் தினத்தில் பொழுது போக்குகளுக்காக கடற்கரைப் பிரதேசங்களில் பொதுமக்கள் கூடுவதைக் கருத்திற்கொண்டே அப்பகுதிகளை சுத்தப்படுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இக்கலந்துரையாடலில் மாநகர ஆணையாளர் ஜே.லியாகத் அலி, நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.எம். அசுஹர் உட்பட மற்றும் பல அதிகாரிகளும்பங்கேற்றிருந்தனர். (ற)

## நூல் வெளியீடு

யாழ்பாணம்,ஜூலை 17
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியல்துறை விரிவுரையாளர் ஆ. நித்திலவர்ணன் எழுதிய 'பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி' எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. கலாநிதி. த.கலாமணி தலைமையில் நடை பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமார்கலந்துகொள்வார். (ஐ)

## இசைப் பேருரை

காரைநகர், ஜூலை 17
காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் மனோன்மனி கலையரங்கத்தில் இன்று மாலை 6 மணியளவில் சென்னைப் பல்கலைக்கழக இசைத்துறை பேராசிரியர் முனைவர் பிரமிளா குருமூர்த்தி அவர்களின் இசைப் பேருரை இடம்பெறும். அதன்போது திரு. கே.கஜனின் மிருதங்க வாசிப்பும் , திரு.கே. குகபரனின் வயலின் இன்னிசையும் இடம்பெறும். (ற)



மணியம் தோட்டம் 2 ஆம் குறுக்கு வீதியில் உள்ள மதகு முற்றாக சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக வாகனப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளமையால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறித்த வீதி கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட போது தகுந்த நிர்மாணப்பொறிமுறை பின்பற்றப்படாமையே விரைவில் சேதமடையக் காரணமென மக்கள் தெரிவிக்கின்றனர். (ற-135)

## 32 சுகாதாரத் தொண்டர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தம்

### நிரந்தரம் வழங்கக் கோரி அவர்கள் இன்று போராட்டம்

அளவெட்டி, ஜூலை 17
கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் காணப்பட்ட சிற்றூழியர் பற்றாக்குறை மாகாண சுகாதார சேவைகள் மற்றும்.யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடையே எட்டப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் நிரப்பப்பட்டிருந்த நிலையில் நேற்று இடம்பெற்ற மாகாண பிராந்திய சுகாதார நிறுவனத் தலைவர்களின் கூட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய 32 சுகாதாரத் தொண்டர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.
அதையடுத்து இடைநிறுத்தப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி இன்று காலை போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அதற்கு வைத்தியசாலையின் சகல தரப்பினரின் ஆதரவையும் தாம் வேண்டுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.
இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் தொடர்பு கொண்ட போது, வைத்தியசாலை ஆளணிப் பற்றாக்குறையுடன் இயங்கி வந்தது. ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் ஓரளவு சிறப்பான சேவையை வழங்க முடிந்திருந்தது. ஒப்பந்தப் பணியாளர்களின் ஒப்பந்தகாலம் முடிவடைந்துள்ள நிலையில் அதனைப் புதுப்பிப்பதற்கு மாகாண சுகாதார அமைச்சு மறுத்துள்ளது. – என்று அங்குள்ள தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
தொடர்ந்து ஆளணிப் பற்றாக்குறையுடன் வைத்தியசாலை இயங்குமாயின் புற்றுநோய் விடுதி, உளநல விடுதி என்பவற்றுடன் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளும் பாதிப்படையக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-36)

# குதிரை ஓடியதன் பின்னர் லாயத்தை பூட்டியுள்ளார் ஜனாதிபதி மைத்திரி

## ஜே.வி.பி. கூறுகின்றது



கொழும்பு, ஜூலை 17

குதிரை ஓடிய பின்னர் லாயத்தை பூட்டியமை போன்று, மஹிந்த தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி நேரத்தில் அறிவிப்பு விடுத்துள்ளார். இது காலம் தாமதித்த முடிவு என ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். காலம் தாழ்த்தியாவது ஜனாதிபதி சரியான முடிவை எடுத்துள்ளார். இதனை வரவேற்கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ரில்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளதாவது:–

மஹிந்த ராஜபக்ஷவுக்கும் திருடர் கூட்டத்துக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு வழங்காமல் ஜனாதிபதி தவிர்த்திருக்க வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இந்த முடிவை தைரியத்துடன் அன்று மேற்கொண்டிருந்தால், மஹிந்தவும் அவரது ஆதரவு அணியும் இந்த அளவுக்கு வளர்ச்சி கண்டிருக்க முடியாது. அந்த இடத்தில் ஜனாதிபதி விட்ட தவறு தான் மஹிந்தவுக்கு பிரபல்யத்தைத் தேடிக் கொடுத்தது. அத்தோடு 100 நாள்களின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தியிருந்தாலும் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது. ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டு தோல்வியடைந்த மஹிந்த செல்லாக் காசாகவே இருந்தார். அப்போதே கடும் தீர்மானங்களை கட்சி மட்டத்தில் ஜனாதிபதி எடுத்திருக்க வேண்டும். இன்று குதிரை ஓடிய பின்னர் லாயத்தைப் பூட்டியமை போன்று ஜனாதிபதி செயற்பட்டுள்ளார். காலம் கடந்தாவது ஜனாதிபதிக்கு ஞானம் பிறந்துள்ளதை வரவேற்கின்றோம்.– என்றார். (ற)

# மஹிந்தவுக்கான சலுகைகள் தடை செய்யப்பட வேண்டும்

## அகிலவிராஜ் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கடிதம்



கொழும்பு, ஜூலை 17

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்குள்ள சிறப்புச் சலுகைகளை பயன்படுத்துவது 1981ஆம் ஆண்டு 1ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் சட்டங்களை மீறும் செயலாகும். எனவே இதனைத் தடை செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி அமைச்சரும் ஐ.தே.கட்சியின் பேச்சாளருமான அகில விராஜ் காரியவசம் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் மஹிந்த தேர்தலில் போட்டியிடுவது சட்டவாக்கத்தின் தோற்றப்பாட்டை மீறும் செயலாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரும் ஐ.தே.க.வின் பேச்சாளருமான அகிலவிராஜ் காரியவசம் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த குருணாகல் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றார். எனவே அவர் ஒரு வேட்பாளர். ஆனால் சட்டங்களை மீறி அவர் முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்படும் பாதுகாப்பு உட்பட சிறப்புரிமைகளைப் பயன்படுத்துகிறார். இது அரசியலமைப்பின் 12ஆவது சரத்தை மீறும் செயலாகும். அத்தோடு ஏனைய வேட்பாளர்களுக்கு இதன் மூலம் அநீதி இழைக்கப்படுகின்றது.

பெரும் பாதுகாப்புப் பிரிவின ரோடு வலம் வரும் மஹிந்த, அரச அதிகாரிகளுக்கும் அச்சுறுத்தல் விடுக்கின்றார். அரச வளங்களையும் பயன்படுத்துகின்றார். இது தேர்தல்கள் மோசடிச் சட்டத்துக்கு எதிரானதாகும்.

19 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் மூலம் ஜனாதிபதியொருவர் இரண்டு முறைக்கு மேல் தேர்தலில் போட்டியிட முடியாது.ஆனால் மஹிந்த சட்டவாக்கத்தின் இந்தத் தோற்றப்பாட்டை மீறி தேர்தலில் போட்டியிடுவது ஏனைய வேட்பாளர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும். எனவே மஹிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ள விசேட சிறப்புரிமைகள் மீளப் பெறப்பட வேண்டும்– என்றுள்ளது. (ற)

# அ.இ.மக்கள் காங்கிரஸுக்கு 8 ஆசனங்கள் கிடைக்கும்

## அந்தக் கட்சித் தலைவர் ரிஷாத் தெரிவிப்பு



வவுனியா, ஜூலை 17

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எட்டு ஆசனங்களைப் பெற்று பேரம்பேசும் சக்தியாக விளங்கும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியு தீன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வவுனியாவில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவைக் கையளித்தபின் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஏழு மாவட்டங்களில் போட்டியிடுகின்றது. இந்தத் தேர்தலில் அதிகப்படியான உறுப்பினர்களைப் பெற்று ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக ஆக்குவதற்கான சக்தியாக திகழும். என்னையும் எனது கட்சியையும் தோற்கடிப்பதற்காகவும், அரசியலிலிருந்து ஓரம்கட்டுவதற்காகவும் நான் அறிமுகப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்னும் இரண்டு கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு இன்று களத்தில் இறங் கியுள்ளார்.

இந்தத் தேர்தலில் மக்கள் சதிகாரர்களுக்கு தகுந்த பாடம் புகட்டவுள்ளார்கள். அகதி மக்களால் தெரிவு செய்யப்பட்ட நான் அந்த மக்கள் அனுபவிக்கும் துயரங்களை நன்கு அறிவேன். நானும் அகதி முகாமிலிருந்து வந்தவன். இந்த மக்களின் துயரங்களை துடைப்பதற்காக அரசியலில் ஈடுபட்டு அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்டவன். எதிர்வரும் தேர்தலில் மக்கள் நன்கு சிந் தித்து வாக்களிக்க வேண்டும்.– என்றார். (ற–10)

# மஹிந்தவுடன் எந்தத் தொடர்பும் இல்லை

## மட்டு. மாவட்ட ஐ.மு.சு.கூ. முதன்மை வேட்பாளர் கூறுகின்றார்

மட்டக்களப்பு, ஜூலை 17

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எங்களுக்குமிடையில் எந்தத் தொடர்பும் கிடையாது என முன்னாள் பிரதியமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட தலைமை வேட்பாளருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

எங்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் எந்த தொடர்பும் கிடையாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலேயே நாங்கள் போட்டியிடுகின்றோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் எங்களது கட்சிக்குமிடையிலேயே நாங்கள் உடன்படிக்கை செய்துள்ளோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்த நாட்டில் 62 இலட்சம் மக்கள் வாக்களித்து நல்லாட்சியை உருவாக்குவதற்கான ஆணையை வழங்கியுள்ளார்கள். அந்த ஆணையை நாம் மதித்து அந்த புதிய நல்லாட்சியான ஊழலற்ற நேர்மையான நல்லாட்சியை உருவாக்க ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தலைமையில் அணி திரண் டுள்ளோம்.– என்று தெரிவித்துள்ளார். (ற–10)

பாராளுமன்றத் தேர்தல் - 2015

உதயன்



அன்றும் இன்றும் என்றென்றும்

சொந்த மண்ணில் உங்களுடன்

உரிமைப் பிரச்சினையை உலகறியச் செய்த

ஊடகப் போராளிக்கு உங்கள் வாக்குகள்

ஈ.சரவணபவன் 5

(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

[illegible]

**மேடம்:** எவருடனும் பேசுவதில் நிதானம் வேண்டும். அதனால், கருத்து வேறுபாடு வராமல் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் தேவையான மாற்றங்களை, அளவான செலவில் நிறைவேற்றுவது நல்லது. குடும்பத் தேவைக்குச் சேமிப்புப் பணம் பயன்படும்.

**இடபம்:** உங்களது தகுதி, திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். எதிரிகள் இடம் மாறிப் போகும் நன்னிலை உண்டு. தொழில், வியாபாரம் செழிக்கக் கூடுதல் பணி புரிவீர்கள். பணவரவு கிடைக்கும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**மிதுனம்:** நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். வாழ்வில் புதிய திருப்பம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உள்ள மந்த நிலை சரியாகும். போக்குவரத்தில் கவனம் நல்லது.

**கடகம்:** கருணை நிறைந்த மனதுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற தேவையான மாற்றத்தைப் பின் பற்றுவீர்கள். தாய் வழி உறவினர்கள் அன்பு பாராட் டுவார்கள் பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை எளிதில்கிடைக்கும்.

**சிங்கம்:** தொடர்பில்லாத பணி ஒன்றில் ஈடுபட நேரலாம். தொழில், வியாபார நடைமுறையில் ஆரவாரத் தன்மை கூடாது. எதிர்பார்த்த பணவரவு, கூடுதல் முயற்சியால் கிடைக்கும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும். மருத்துவச் செலவும் வரலாம்.

**கன்னி:** கருணை மனதுடன் செயற்படுவீர்கள்; முன்னர் அவமதித்துப் பேசிய சிலர், உங்களின் மென்மை உணர்ந்து அன்பு கொள்வர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறும். வெகுநாள் தேடிய பொருள் வந்து சேரும்.

**துலாம்:** செயல்களில் நியாய, தர்மத்தை அதிகம் பின்பற்றுவீர்கள். இஷ்ட தெய்வ அருள் துணை நின்று உதவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். நீண்ட நாள் சந்திக்காத நண்பர் உங்களை தேடி வருவார்.

**விருச்சிகம்:** உங்களைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளால், மனதில் குழப்பம் ஏற்படலாம். எவரிடமும் நிதானித்துப் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்ற அக்கறை கொள்வீர்கள்.

**தனுசு:** மனதில் இனம் புரியாத வருத்தம் ஏற்படலாம். உங்கள் நலம் விரும்புவோரின் உதவியும், ஊக்கமும் நல்வழி நடத்தும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை இலக்கை அடைய, கடும் உழைப்புத் தேவைப்படும்.

**மகரம்:** அன்புடன் நடந்து எதையும் சாதித்துக்கொள்வீர்கள். பணவரவில் எதிர்பார்த்ததை விட அதிக பயன் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். செயல்களில் சிறப்பான வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வளர்ச்சி ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். இல்லறத்துணைக்கு விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மீனம்:** சிலரைப் பற்றிய நம்பிக்கையில் மாற்றம் கொள்வீர்கள். பணியில் பொறுப்புணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்குத் தகுந்த பலன் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் பாதுகாப்பாக இருப்பது நல்லது.



# செல்பி பிரியர்களுக்கு எச்சரிக்கை

ஸ்மார்ட் போன் வைத்திருப்பவர்களிடம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் செல்பி மோகம், பலவித சிக்கல்களை உருவாக்கி வருகிறது. குறிப்பாக உயரமான கட்டடங்கள் மற்றும் ஆபத்தான பகுதிகளில் நின்று கொண்டு செல்பி எடுப்பவர்கள் கீழே விழுந்து உயிரிழப்பதும், காயமடைவதுமான சம்பவங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருகின்றன.

ரஷ்யாவில், இத்தகைய செல்பி பிரியர்களின் உயிரிழப்பு கணிசமாக உயர்ந்துள்ளது. எனவே செல்பி பிரியர்களுக்கு ரஷ்ய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. உயிருக்கு ஆபத்தான பகுதிகளில் செல்பி எடுப்பதைத் தவிர்க்கவேண்டும் என்று எச்சரிக்கை விடுத்து உள்ளனர்.

செல்பி எடுக்கும்போது நடைபெறும் விபத்துகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதால், இத்தகைய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டுக்காக விற்கப்படும் சிறுநீரகம்



நேபாளத்தை கடந்த ஏப்ரல் மாதம் தாக்கிய பாரிய பூமியதிர்ச்சியில் சிக்கி பல கிராமங்களிலுள்ள வீடுகள் இடிந்து தரைமட்டமாகின. மேற்படி பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் தமக்கென புதிதாக வீடொன்றை நிர்மாணிக்கும் முகமாக தமது சிறுநீரகங்களை, உடல் உடலுறுப்புகளைக் கடத்துபவர்களுக்கு விற்றுள்ளமை தொடர்பான அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

நேபாள தலைநகர் காத்மண்டு நகருக்கு சுமார் 12 மைல் தொலைவிலுள்ள ஹொக்ஸ் என்ற கிராமத்தில் வாழ்பவர்களில் ஏறத்தாழ அனைவருமே தமது சிறுநீரகமொன்றை விற்பனை செய்தவர்கள் என்பதால் அந்தக் கிராமம் தற்போது சிறுநீரக கிராமம் எனக் அழைக்கப்படுகிறது. இது தொடர்பில் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண் விவரிக்கையில்: உடல் உறுப்புகளைக் கடத்துபவர்களுக்கு தரகர்களாக செயற்படுபவர்கள் நேபாளத்தில் பூமியதிர்ச்சி யால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு கிராமத்துக்கும் பயணம் செய்து அங்குள்ள மக்களைத் தமது உடல் உறுப்புகளை விற்க ஊக்குவித்து வருவதாகக் கூறியுள்ளார்.

# சூப்பர் ஸ்டார் ஜோடி யார்?

சூப்பர்ஸ்டார் ரஜினியின் ஜோடியாக பொலிவூட் நடிகை கத்ரீனா கைப் நடிக்கவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. கத்ரீனா கைப், ஏற்கெனவே ரஜினிக்கு ஜோடியாக கோச்சடையான் திரைப்படத்தில் நடிக்க வேண்டியவர். அந்த நேரத்தில் சில காரணங்களால் ரஜினிக்கு ஜோடியாக நடிக்க முடியாமல் போனது. பின்னர் அந்த வாய்ப்பு தீபிகா படுகோனே வசம் சென்றது. இந்த நிலையில்தான் எந்திரன் இரண்டாம் பாகத்தில் ரஜினியின் ஜோடியாக நடிக்க வைக்க கத்ரீனா கைப்பை அந்தப் படத்தின் இயக்குநர் ஷங்கர் சந்தித்துப் பேசியுள்ளாராம். ரஜினிக்கு வில்லனாக விக்ரம் நடிக்கப் போவதுடன் இதுகுறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பை விரைவில் வெளியிடவுள்ளாராம். தற்போது, மீண்டும் ரஜினிக்கு ஜோடியாகும் வாய்ப்பு கத்ரீனாவுக்கு தேடிவந்து கிடைத்துள்ளது. அதை அவர் ஏற்பாரா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். எந்திரன் 2 ஆம் பாகத்தை இந்த வருடத்தின் இறுதியில் படமாக்க திட்டமிடப்பட்டுள்ளதுடன், லைக்கா நிறுவனம் பிரமாண்டமாக இந்தப் படத்தைத் தயாரிக்கவுள்ளது.





## இரும்பு ஆப்பு தாக்கியதில் ஒருவர் காயம்

தென்மராட்சி, ஜூலை 17

காணியில் இடைஞ்சலாக காணப்பட்ட கற்பாறையை துண்டாக்கப் பயன்படுத்தப்பட்ட இரும்பு ஆப்பு சறுக்கிப் பறந்து தாக்கியதில் ஒருவருக்கு தொடைப் பகுதியில் காயமேற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கைதடி மத்தியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரைகுமார் ( வயது – 33 ) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைதடி கிழக்கு, மீசாலை கிழக்கு ஆகிய இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த இரண்டு பெண்கள் உட்பட மூவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கைதடி கிழக்கைச் சேர்ந்த சற்குணராஜா புஸ்பராணி( வயது–55 ) முத்தன் கனகமணி ( வயது–70 ) ஆகியோரும், மீசாலை கிழக்கைச் சேர்ந்த சகாயராசா அல்பிரட் (வயது–53 ) என்பவருமே காயமடைந்தவர்களாவர். (ற–9)

## நாகர்கோயில் நாகதம்பிரான் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 17

நாகர்கோயில் தெற்கில் உள்ள பூர்வீக நாகதம்பிரான் ஆலய நிர்வாக நடைமுறைகள் தொடர்பான விசேட கலந்துரையாடல் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தலைமையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் அந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கனகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ற–4)

## திருமலையில் விபத்து: இருவர் சாவு ஒருவர் படுகாயம்

திருகோணமலை, ஜூலை 17

திருகோணமலை, சேருநுவர பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி வியத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

காத்தான்குடி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.எஸ். சலீம் மற்றும் மணல் வியாபாரியான எம்.கலீல் (48) ஆகியோரே விபத்தில் உயிரிழந்துள்ளதுடன் படுகாயமடைந்த முஹம்மது புகாரி (வயது 53) என்பவர் தொடர்ந்தும் திருகோணமலை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரு கின்றார் என சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியிலிருந்து கிண்ணியாவுக்குச் சென்று கொண்டிருந்த இவர்கள் பயணித்த வாகனம் சேருநுவர பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் சாரதியின் தூக்கமே விபத்துக்கு காரணம் எனவும் ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறியுள்ளனர். (ற)

# மீண்டும் திருடர்களுடனேயே களமிறங்குகின்றார் மஹிந்த

## அஸாத் சாலி கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 17

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப் போவது மோசடிக்காரர்களையா? அல்லது நேர்மையான திறமையானவர்களையா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். திருடர்களுக்கும் மோசடிக்காரர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்காதமைக்கு மன்னிப்புக் கோரிய மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அவர்களுடனே தேர்தலில் போட்டியிடுகின்றார் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான அஸாத் சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்துக்கியப்படும் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது. இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஊழல், மோசடிக்காரர்கள் மற்றும் போதைப் பொருளுடன் தொடர்புடையவர்களின் பெயர்கள் சுதந்திரக் கட்சி வேட்பு மனுவில் இடம் பெறாது என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். இருந்தபோதிலும் தற்போது அப்படியானவர்கள் எவ்வாறு இடம் பெற்றார்கள் என்பதை ஜனாதிபதி நாட்டு மக்களுக்குத் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேம ஜயந்தவை அச்சுறுத்தியே மஹிந்த ராஜபக்ஷ உட்பட மோசடிக்காரர்களின் பெயர்கள் வேட்புமனுவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுசில் பிரேம ஜயந்தவும் தன்னுடைய குற்றங்களை மறைத்துக் கொள்வதற்காக அதனை அனுமதித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தனது மோசடிகளை மறைப்பதற்கும் தனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது நாடாளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தும் போக்குடனேயே தேர்தலில் போட்டியிடுகின்றார்.

அவர் நாடாளுமன்றம் சென்றாலும் கூடிய காலம் இருக்க முடியாது. அவருக்கு எதிராக பெரும் குற்றச் சாட்டுக்கள் இருக்கின்றன. அவை விசாரிக்கப்படும் பட்சத்தில் அவர் சிறைச்சாலைக்கு செல்வார்.

இந்த நாட்டை ஆட்சிபுரிந்த சகல ஜனாதிபதிகளுக்கும் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டன. என்றாலும், அவர்களது குடும்பங்கள் மீது குற்றச்சாட்டுக்கள் இருக்கவில்லை.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷ மீதும் அவர் குடும்பத்தினர் மீதும் பாரதூரமானகுற்றச்சாட்டுக்கள்இருக்கின்றன.

கடந்த காலத்தில் ஊழல், மோசடிகளில் தொடர்புபட்டவர்கள் அனைவரும் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். இதனை சிறந்ததொரு சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டு மக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல்லதொரு பாடத்தைக் கற்பிக்க வேண்டும். அத்துடன் இவர்களுக்கு துணையாக இருந்த சுசில் பிரேம ஜயந்தவுக்கும் கொழும்பு மாவட்ட மக்கள் பாடம் கற்பிக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்களை பயன்படுத்தியமைக்காக நிலுவையாக இருந்த கடன்களை செலுத்தியதாக அனுர பிரியதர்ஷன யாப்பா அண்மையில் கூறியுள்ளார். ஆனால் இதுவரை கடன்களை செலுத்தவில்லை. முடியுமானால் அதற்குரிய பற்றுச் சீட்டுக்களுடன் பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்வது ஊழல், மோசடிக்காரர்களையா அல்லது நேர்மையானவர்களையா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.– என்றார்.(ற)

## மாற்றுத் திறனாளிகள் விளையாட்டுப் போட்டி

கொழும்புத்துறை, ஜூலை 17

யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டிய மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 7 மணிக்கு ஜெய்ப்பூர் நிறுவனத் தலைவர் டாக்டர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி தலைமையில் போட்டிகள் நடைபெறவுள்ளன. விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊவா மாகாண சபை விவசாய அமைச்சர் செனரத் அத்தநாயக்க (மாற்றுத்திறனாளி) கலந்து கொள்ளவுள்ளார்.

வலுவிழந்தோருக்கான சைக்கி ளோட்டப் போட்டி, முச்சக்கர வண்டி ஓட்டம் என்பன வீதி நிகழ்வாகவும், சக்கர நாற்காலி ஓட்டம், கரப்பந்தாட்டம், மென் பந்து துடுப்பாட்டம், மேசைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டம் உட்பட பல உள்ளக விளையாட்டுக்களாகவும் இடம் பெறவுள்ளன.

28 ஆவது ஆண்டு நிறைவு மலர் வெளியீடு ஜெய்ப்பூர் நிறுவன கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறும். (ற–135)

## மோ.சைக்கிள் விபத்தில் பெண் காயம்

தென்மராட்சி, ஜூலை 17

ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்ட அடியார் கூட்டத்தை கவனத்தில் கொள்ளாமல் வேகமாகச் செலுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் சனக்கூட்டம் இல்லாத வீதியில் சறுக்கி வீழ்ந்து விபத்துக்குள்ளானது. மோட்டார் சைக்கிளைச் செலுத்திய பெண் காலில் காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி சங்கத்தானை முருகமூர்த்தி கோவில் வீதியில் இடம் பெற்றது.

கால் பாதத்தில் பாதிப்பு ஏற்பட்ட பெண் அடியார்களால் அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ற–9)

## தொழில் முயற்சியாண்மை விருத்தி பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜூலை 17

தொழில் முயற்சியொன்றை ஆரம்பிக்கவுள்ள அல்லது நடத்திக் கொண்டிருக்கும் தொழில்முயற்சியை விருத்தி செய்வதற்கு ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளருக்கு பயிற்சி நெறியொன்றை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு யாழ் மாவட்ட கைத்தொழில் அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்துள்ளது.

குறித்த பயிற்சிநெறியில் கலந்துகொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் மாவட்ட அலுவலகம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை கட்டடம், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற–10)


**கண்ணீர்ப் பூக்கள்**

எமது கல்லூரி ஆசிரியர் ஜெயக்குமார் அவர்களின் அன்புத் தந்தை

**இளையதம்பி பரராஜசிங்கம்**

**(இளைப்பாறிய யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்)**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி குடும்பம்**

**12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் புவனேஸ்வரன் தவராஜா

திதி : 17.07.2015 (வெள்ளிக்கிழமை)

தோற்றம் 17.02.1974

மறைவு 14.07.2003

உன்னோடு வாழ்ந்த நாம் இன்று உன் நினைவுகளோடு மட்டும்.

கோப்பாய் தெற்கு. கோப்பாய். குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலை ஆசிரியர் க.சண்முகநாதன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தவமணி கந்தசாமி**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், யா/கலைநந்தீஸ்வரர் மத்திய மகா வித்தியாலயம்

(83199)(45.7.3)

உதயன்

வெள்ளிக்கிழமை | ஜூலை 17 | 2015



## அமிர்தலிங்கத்துக்கு சிலை நிறுவ மக்கள் அனுமதி பெறல்

மானிப்பாய், ஜூலை 17

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வளவில் அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு விரைவில் சிலை நிறுவப்படவுள்ளது. இது தொடர்பில் கடந்த 23.04.2014 ஆம் திகதி சபையில் தீர் மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சிலைவைப்பது தொடர்பில் பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஏதேனும் கருத்துக்களை முன்வைக்க விரும்பின் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர், வலி.மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் எனும் விலாசத்துக்கு அனுப்பிவைக்குமாறு தவிசாளர் நா.ஐங்கரன் கேட்டுள்ளார். (ற-50)

# தெற்காசியாவிலேயே அதிகளவில் பொஸ்பேற் பயன்படுத்தும் இலங்கை

கொழும்பு, ஜூலை 17

தென் கிழக்காசியாவிலுள்ள நாடுகள் மத்தியில் பொஸ்பேற்றை அதிகரித்த அளவில் பயன்படுத்தும் நாடு இலங்கையே எனக் கண்டறியப்பட்டிருப்பதாக விவசாய ஆய்வுகள் மற்றும் பயிற்சிகளை வழங்கும் ஹெக்ரர் கொப்பேக்கடுவ விவசாயச் செயற்பாடுகள் நிறுவனத்தின் சிரேஷ்ட ஆய்வதிகாரியான சத்துர ஜயம்பதிடி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் இதுவரை சுமார் 60 ஆயிரம் பேர் சிறுநீரக நோயாளர்களாக இனங்காணப்பட்டிருப்பதாகவும் இனங்காணப்படாதிருக்கும் தரப்பினர் அதைவிட அதிகமெனவும் தெரிவித்துள்ள அவர் அதிகரித்த விவசாய இரசாயனங்களின் பாவனை மற்றும் முறையற்ற பாவனையால் தான் இந்தவிதம் சிறுநீரக நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

ஆண்டொன்றில் 2.5லட்சம் தொன் திரவ உரமும், 3 லட்சம் தொன் யூரியாவும் 1 லட்சத்து 20 ஆயிரம் தொன் ரீ.எஸ்.பீயும், 1 லட்சத்து 50 ஆயிரம் தொன் எம்.ஓ.பியும் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாக நீர் மூலங்கள் அழிந்து வருவது ஆய்வுகளிலிருந்து வெளிப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

நோயற்ற சந்ததியொன்றுக்கான விவசாயம் என்ற தொனிப் பொருளில் சிறுநீரகநோய் சம்பந்தமாக விவசாயப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் தொடர் பாக கலென்பிந்துனு வெவ பிரதேச செயலர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றிருந்த கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ற-22)

## 805 மார்க்க பஸ் சேவையை நடத்த கோரிக்கை

தென்மராட்சி, ஜூலை 17

நீண்ட காலமாக நிறுத்தப்பட்டுள்ள கொடிகாமம் – கச்சாய் ஊடாக யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் 805 இலக்க வழித்தட பஸ் சேவையை மீண்டும் நடத்துமாறு கச்சாய் தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் யாழ்.பிராந்திய இலங்கைப் போக்கவரத்துச் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொடிகாமம் – கச்சாய், கச்சாய்-சாவகச்சேரி வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் சபையால் ஏனைய பிரதேசங்களுக்கான பஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருவது போன்று 805 வழித்தட பஸ் சேவையையும் ஆரம்பிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தச் சேவை நடத்தப்படுவதால் தென்மராட்சி கிழக்கில் உள்ள போக்குவரத்து வசதிகளற்ற பல கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள், அரச பணியாளர்கள், விவசாயிகள் உட்பட பொது மக்கள் பயன்பெறமுடியுமெனவும் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போது தனியார் சிற்றூர்திகள் குறிப்பிட்ட நேரங்களில் சேவைகளை நடத்தி வருவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ற-9)

# பஸ்ஸைத் தாக்கியவர்கள் பொலிஸை கண்டு ஓட்டம்

### தமது ஓட்டோவையும் கைவிட்டு

தென்மராட்சி, ஜூலை 17

வவுனியாவிலிருந்து வந்த தனியார் பஸ் மீது எழுதுமட்டுவாழ் பகுதியில் வைத்து கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

அந்தச் சமயம் தற்செய லாக அங்கு பொலிஸார் வந்ததை அடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் ஓட்டோ ஒன்றைக் கைவிட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் நடந்துள்ளது.

வவுனியாவிலிருந்து வந்த பஸ் மீது ஓட்டோவில் வந்து காத்திருந்தவர்கள் சரமாரியாக கற்களை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனால் பஸ் சேதமடைந்தது. அந்தச் சமயம் தற்செயலாக கொடிகாமம் பொலிஸார் வாகனத்தில் வரவே தாக்குதல் நடத்தியவர்கள் தமது ஓட்டோவையும் கைவிட்டு தப்பியோடியுள்ளனர். சம்பவத்தைப் பதிவு செய்த பொலிஸார் கைவிடப்பட்ட ஓட்டோவையும் தாக்கப்பட்ட பஸ்ஸையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

இதேவேளை பஸ் மீது கல்லெறிந்தவர்களை பேருந்து சாரதி தனது தொலைபேசி கமெராவில் படம் பிடித்துள்ளதால் தாக்குதல் நடத்தியவர்கள் விரைவில் கைது செய்யப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-9)

# பெரும்போக செய்கைக்கு 3,500 புசல் விதை நெல்

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் இவ்வாண்டு பெரும் போக நெற்செய்கைக்கென மூவாயிரத்து ஐந்நூறு புசல் விதை நெல்லை தயார் நிலையில் களஞ்சியப் படுத்தி வைத்துள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.

பி.ஜி 406 இனத்தைச் சேர்ந்த இந்த விதை நெல் அடுத்த மாத நடுப்பகுதியில் இருந்து கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இந்த நெல்லை ஏற்கனவே பதிவு செய்யப் பட்ட விவசாயிகளிடம் இருந்து சங்கம் கொள்வனவு செய்திருந்தது. விவசாயிகளிடம் இருந்து கிலோ 60 ரூபா விலையில் இந்த முறை மூவாயிரத்து ஐந்நூறு புசல் விதை நெல்லை சங்கம் கொள்வனவு செய்திருந்தது.

கொள்வனவு செய்யப்பட்ட பி.ஜி 406 இனவிதைநெல் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது பாதுகாப்பாகவைக்கப்பட்டுள்ள இந்த விதை நெல்லை அடுத்த மாதத்தில் இருந்து விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற-17)

## சடலத்தை பொறுப்பேற்க கோரிக்கை

வடமராட்சி, ஜூலை 17

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் கடந்த இரண்டு நாள்களாக எவராலும் உரிமைகோரப்படாத நிலையில் பெண் ஒருவரின் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, 30/2, ஹெரவல பிட்டியா ரோட், ஹெந்தல, வத்தள என்ற விலாசத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம்–ஜெயந்தி (வயது–65) என்ற பெண்ணின் சடலமே பொறுப்பேற்கப்படாதுள்ளது.

திடீர் நோயால் பாதிக்கப்பட்ட நிலையில் வல்வெட்டித்துறை ஊறணி பிரதேச வைத்தியசாலை யில் கடந்த 11 ஆம் திகதி சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி அப் பெண் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரின் உறவினர்கள் யாராவது இருந்தால் உடனடியாக சடலத்தைப் பொறுப்பேற்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# தச்சன்தோப்பு ரயில் நிலையம் மீது தாக்குதல்

தென்மராட்சி, ஜூலை 17

நாவற்குளி, தச்சன்தோப்பு ரயில் நிலையத்தின் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தி சேதப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடந்துள்ளது.

ரயில் நிலைய உதவி ரயில் அதிபர் பிற்பகல் ரயில் சென்றபின்னர் வீடு சென்று பின்னர் மாலை திரும்பிய போது நிலைய மேடையின் பல இடங்களில் கண்ணாடித் துகள்களும் இரத்தக் கறையும் காணப்பட்டன. அத்துடன் நிலையத்தின் இரு கழிப்பறைக் கதவுகள் அடித்து நொறுக்கப்பட்டிருந்ததுடன் நிலையக் கண்ணாடிகளும் சேதப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக உதவி ரயில் நிலைய அதிபர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-9)

# சைக்கிள் திருடியவருக்கு கடூழிய சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம், ஜூலை 17

சைக்கிள் ஒன்றைத் திருடிய சாவற்கட்டு சுதுமலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றால் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் கார்த்திகை மாத காலப்பகுதியில் குருநகர் ஐந்தாம் குறுக்குத் தெருவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பெண்கள் சைக்கிள் ஒன்றைக் களவாடிய போது குறித்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவர் தனக்கெதிரான குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து நீதிமன்றால் கைவிரல் அடையாள அறிக்கை கோரப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையின் பிரகாரம் குறித்த சந்தேகநபருக்கு எதிராக முற்குற்றங்களும் காணப்பட்டதுடன் அவற்றில் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிப்புக்களும் வழங்கப்பட்டிருந்தன. அதனையடுத்து சந்தேகநபருக்கு மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது. (ற-103)

## விண்ணப்பம் கோரல்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் அரச வேலைத்தலங்களில் கணக்கு எழுதுவினைஞர், டீசல் இயந்திரப் பொறிவலர், டீசல் பம்பி பொறிவலர், மின்வினைஞர் (கைத்தொழில்), ரயர் பொருத்துநர், தகர வேலையாள் மற்றும் உருக்கி இணைப்பவர் ஆகிய பயிற்சி நெறிகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த சாதாரண தரத்தில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் தாய் மொழி மற்றும் கணிதம் உள்ளட்ங்கலாக 6 பாடங்களில் சித்திய டைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்போர் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தே.அ.அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், நைற்றா, மாங்குளம் வீதி, முள்ளியவளை, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ற-10)

# மழைநீரைச் சேகரிக்க நடவடிக்கை வேண்டும்

### வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

மானிப்பாய், ஜூலை 17

பெரும்போக காலங்களில் பெய்யும் மழைநீரின் பெரும்பகுதி கடலையே சென்றடைகின்றது. அதிலும் வலி.வடக்கு பகுதியினூடாக ஊடறுத்து சண்டிலிப்பாய் ஐந்து கண்மதகு வழியாக வழுக்கையாறு படுக்கையை அடைந்து இறுதியாக அராலி பாலம் ஊடாகவே பெருமளவிலான மழை நீர் கடலைச் சென்றடைகின்றது. அதனைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் – இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

விரயமாகும் மழைநீரை குடிதண்ணீர்த் தேவைக்காகத் தேக்கும் அராலி வழுக்கையாறு திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

2012ஆம் ஆண்டு முதல் வழுக்கையாற்று படுக்கையூடாக மழைநீரின் பெரும்பகுதி கடலைச் சென்றடைவது குறித்து மாவட்டச் செயலாளர்கள், நீர்ப்பாசன பொறியியலாளர்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். இதுவரை முறையான பொறிமுறைத் திட்டமொன்றை வகுத்து அராலியூடாக கடலை சென்றடையும் நன்னீரான மழைநீரை தேக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது. 2025 இல் யாழ். குடாநாடு உள்ளிட்ட பல மாவட்டங்கள் கடும் வறட்சித் தாக்கத்துக்கு உட்பட்டு குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப் பாடான சூழல் உருவாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே பெரும்போக காலங்களில் பெய் யும் மழைநீரின் பெரும்பகுதி தேக் கப்பட்டு நிலத்தடியை சென்றடையக் கூடியவாறு பொறிமுறை வகுக்கப்படவேண்டும்.

தெல்லிப்பழை, கந்தரோடை, சங்குவேலி, ஐந்துகண்மதகு, கட்டுடை, அராலி, வழுக்கையாற்று படுக்கையூடாக அராலிக் கடலைச் சென்றடையும் மழைநீரைப் பாதுகாக்க இதனுடன் சம்பந்தப்பட்ட சகல திணைக்களத் தலைவர்களும் முன்வந்து செயற்படவேண்டும். – என்று தெரிவித்தார். (ற-50)


## மரண அறிவித்தல்

### திருமதி பீதாம்பரம் விமலாதேவி (விமலா)



தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பீதாம்பரம் விமலாதேவி 14.07.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - கனகமணி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- செல்லம்மா தம்பதியரின் மருமகளும், பீதாம்பரத்தின் அன்பு மனைவியும், சுகுமார் (கனடா), கீதா(கனடா) சசிக்குமார் (பிரான்ஸ்), விஜயகுமார் (கனடா), விஜயா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்றவர்களான மனோகரன், தனபாலசிங்கம் மற்றும் தனலட்சுமி(கனடா) இந்திராணி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுதாகரன்( கனடா), ரஞ்சன் (கனடா) ,விமலேஸ்வரி (கீதா - பிரான்ஸ்), ரகுதரன் (கனடா) அஜந்தா (கனடா), கவிதா, அகலியா(லண்டன்), அகிலன், அருண், ஆகியோரின் மாமியும் சிறிகாந்தா (கனடா), சற்குணதேவன் JP (கௌரவ உறுப்பினர் நகராட்சி மன்றம் சாவகச்சேரி) ஆகியோரின் மைத்துனரும் பத்மாதேவி, சத்தியதேவி ஆகியோரின் மைத்துனியும் சர்மி ,சரணியா, தனுஷன், மதுமிலா, நிரோஷன் சுரேகா, விமேகா,அனுஷ்கா, லக்சியா, தினோசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுதர்சன், சஞ்ஜீவன் ஆகியோரின் அன்பு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்: சற்குணதேவன்
இந்திராணி(சகோதரி)
021 227 0027

# இரவில் அத்துமீறி வீட்டுக்குள் புகமுயன்ற பொலிஸ் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 17

மதுபோதையில் கொழும்புத்துறையில் உள்ள வீடொன்றுக்குள் இரவு நேரம்அத்துமீறி பிரவேசித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கிராம வாசிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் சாதாரண உடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வீடொன்றினுள் புக முற்பட்டபோதே பிடிக்கப்பட்டார். அதனையடுத்து கிராமவாசிகள் 119 அவசர பொலிஸ் அழைப்புக்கு தகவல் தெரிவித்ததையடுத்து பொலிஸார் வந்து அவரைத் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவராவார்.

அவரை பொலிஸார் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை 50 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ற-103)

# கருங்குளவிகள் தாக்கிப் பெண் வைத்தியசாலையில்

தென்மராட்சி, ஜூலை 17

மரத்திலிருந்து வீழ்ந்த பனையோலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த குடும்பப் பெண்ணொருவரைத் தாக்கின. இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மீசாலை புத்தூர் சந்தியில் இடம் பெற்றது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த துரை ராஜா சறோஜினிதேவி ( வயது-59 ) என்பவரே கருங்குளவிகளால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். அதேவேளை இவரது கணவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கருங்குளவிகளால் தாக்கப்பட்டு உயிரிழந்திருந்தார். (ற-9)

# ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழா

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் நடத்தும் ஆடிப்பிறப்பு பண்பாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி பரமோதயன் ஜெயராணி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வில்லிசை, ஆடிக்கூழ், கொழுக்கட்டை பரிமாறல், சிறப்புப்பட்டிமன்றம் ஆகியன இடம்பெறவுள்ளன. (ஐ)

# விழிப்புணர்வு செயலமர்வு

தேசிய அருங்கலைகள் பேரவையால் நடத்தப்படும் மாகாண மட்ட மற்றும் தேசியமட்ட கண்காட்சி போட்டியில் பங்குபற்றும் யாழ்.மாவட்ட கைப்பணியாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை முற் காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வில் களிமண் உற்பத்திகள், பிரம்பு மற்றும் மூங்கில் சார்ந்தஉற்பத்திகள்,உலோக கைப்பணிப் பொருள்கள், ஆபரண வடிவமைப்புக்கள், சங்கீத உபகரணங்கள், துணியிலான கைப்பணிப் பொருள்கள், பற்றிக் உற்பத்திகள், மரச் செதுக்கல் உற்பத்திகள், கற்கள் மூல கைப்பணிப் பொருள்கள், சிரட்டையிலான உற்பத்திகள், பன்ன வேலை கைப்பணிப் பொருள்கள், கடதாசி உற்பத்திகள் ஆகிய துறைகளில் ஈடுபடுபவர்கள் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முதியோர் இல்லத்தில் ஆடிப்பிறப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 17

கைதடி அரச முதியோர் இல்லத்தால் நடத்தப்படும் ஆடிப்பிறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை இல்லத்தின் அத்தியட்சகர் என்.கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு இல்லத்தில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று ஆடிக் கூழ் காய்ச்சும் நிகழ்வு இடம் பெறும்.

நிகழ்வில் இல்ல வயோதிபர்களின் கூட்டு வழிபாடு, தேவாரம் ஓதல் என்பன இடம்பெறும். (ற-17)

# சர்வதேச விருது பெற்ற பெரியபுலம். ம.வி.

யாழ்ப்பாணம், ஜூலை 17

பிரிட்டிஷ் கவுன்ஸில் நிறுவனத்தால் சர்வதேச மட்டத்தில் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான செயற்றிட்ட நடைமுறை யாக்கல் தெரிவில் யாழ். பெரியபுலம் மகா வித்தியா லயம் சர்வதேச பாடசாலை விருதை பெற்றுக் கொண்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலைக்கான இந்த விருது அதிபர் இ.இரவிச்சந்திரனிடம் கையளிக்கப் பட்டது.

அதனைவிட வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்திய மாகாண மட்ட தடகள விளையாட்டுத் தொடரில் 21 வயது ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் இந்தப் பாடசாலையைச் சேர்ந்த பா.சந்தனேஸ்வரன் முதலாம் இடத்தையும், 15 வயது பெண்களுக்கான தடை தாண்டலில் பா. சகானா முதலாம் இடத்தையும் தட்டிக்கொண்டனர். (ற-17)

# இயக்குநர் சபை தெரிவு ஒத்திவைப்பு

வரணி, ஜூலை 17

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபைத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற இருந்த நிலையில் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் அறிவிப்பு வெளியானதால் அந்தத் தெரிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சங்க வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

குறித்த இயக்குநர் சபைத் தெரிவு குறித்த பொதுக் கூட்டத்துக்கான திகதி தேர்தலின்பின்னர் அறிவிக்கப்படும் என சங்க வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. (ற-122)


**அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் பரிபாலன சபைப் பொதுக் கூட்ட அறிவித்தல்**

மேற்படி சபையின் பொதுக்கூட்டம் 19.07.2015 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் கூடி கோயில் மண்டபத்தில் கிராமசேவை அலுவலர் செ .செல்வசந்திரன் தலைமையில் நடைபெறும். அம்பாளின் சகல திருவிழா உபயகாரர்களையும் பதிவு பெற்ற அங்கத்தவர்களையும் தவறாது கூட்டத்தில் பங்கு பற்றுமாறு அழைக்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக்கள் கிடையாது.

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் கோயில்.

செயலாளர்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

**ஆசிரிய பதவி வெற்றிடங்கள்**

**சத்தியசாயி பாடசாலை, சோதிவேம்படி வீதி, மானிப்பாய்.**

மேற்படி பாடசாலைக்கு தரம் 6 -11 வரைக்கான வகுப்புகளுக்குப் பின்வரும் பாடங்களைக் கற்பிப்பதற்கான பெண் பட்டதாரிகள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விஞ்ஞானம் - ஆங்கிலமொழிமூலம், தமிழ் மொழி மூலம்
02. வணிகக்கல்வி
03. ஆங்கிலமொழி
04. ஆரம்பப்பிரிவு பயிற்றப்பட்ட ஓய்வுபெற்ற பெண் ஆசிரியர்கள்

25.07.2015 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பாடசாலை நிர்வாகம், சத்தியசாயி பாடசாலை

(63201) (3.5.7)

**வீடு வளவு விற்பனைக்கு**

அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தில் பிரதான வீதிக் கண்மையில் 10 நிமிடங்களில் யாழ் நகரை அடையக் கூடிய தூரத்தில் ஐந்து பரப்புக் காணியில் பயன்தரு மரங்களையும், சகல வசதிகளையும் உடைய திருத்தம் செய்யப்பட்ட அழகிய வீடு வளவு விற்பனைக்குண்டு.

(63176) (9.3) தொடர்பு: 021 205 4016

**உடன் தேவை**

வாகன சாரதிகள், களஞ்சியக் காப்பாளர்கள், கூலியாள்கள், மில் வேலை தெரிந்தவர்கள் தேவை. பொருத்தமானவர்கள் நேரில் வரவும்.

Coca-Cola Distributor
4th Lane, Brown Road,
Jaffna.

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி வடக்கு, சங்கத்தானை பெரிய அரசடி வீதியில் மிகவும் நல்ல சூழலில் 4½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. A9 வீதியிலிருந்து மூன்றாவது காணி. தரகர் வேண்டாம்.

தொடர்பு: 075 648 6248

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.

ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா?, குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணி வரை.

இல.424/11, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (சிவன் கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)

T.P: 072 681 6681, 072 681 6691

(57712) (4.3.6)

**நல்லைக் கந்தன் இசைக்குழு**

கர்நாடக இசைக் கச்சேரிகள், வாத்திய பல்லிய நிகழ்வுகள் மற்றும் பக்திப்பாடல் நிகழ்வுகள் யாழ் முன்னணி இசைக் கலைஞர்களினால் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்வுகள் உங்கள் மங்கலகரமான வெளிப்புற, உட்புற நிகழ்வுகளில் வழங்குவதற்கு எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 355 0139
077 474 5533

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கைகள் அலகு.**

**வெளிவாரிப் பரீட்சைகள் - 2012**

1) கலைமாணி பகுதி - II - 2012
2) சிறப்புக் கலைமாணி பகுதி - I,II & III - 2012

மேற்படி கலைமாணி பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய பரீட்சார்த்திகளிடமிருந்து மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 07.08.2015 (வெள்ளிக்கிழமை) வரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு பாட அலகிற்கும் மீள் பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய பரீட்சைக் கட்டணம் ரூபா.500/= ஆகும். யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா.300/= இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர், நிதியாளர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா.300/= இற்கான காசுக் கட்டளை/தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா.40/= பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி கற்கைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் , திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவத்தினை www.jfn.ac.lk/codl எனும் இணைய முகவரியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

பதிவாளர்
14.07.2015

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விஞ்ஞானபீடம்**

விஞ்ஞானத்தில் பொதுப் பட்டத் தேர்வு - 2014 நிலை 1G, 2G,3G.
கணினி விஞ்ஞான பட்டத் தேர்வு - 2014 நிலை 1S, 2S, 3S,4S.
விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டத் தேர்வு - 2014 நிலை 3M,4M.

**முதலாம் அரையாண்டு கற்கைநெறி இறுதித் தேர்வு**

முதலாம் அரையாண்டில் கற்பிக்கப்பட்ட கற்கை நெறி அலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வுகள் (End of Course Examinations) ஆவணி 2015 இல் ஆரம்பம் ஆகும்.

இவ்வலகுகளுக்கான கற்கைநெறி இறுதித் தேர்வில் மீள் பரீட்சார்த்தியாகத் தோற்ற விரும்பும் மாணவர்கள் பூரணப்படுத்திய தேர்வு அனுமதிப் படிவங்களை தேர்வுக்கான கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் 2015 ஆடி 29 ஆம் திகதிக்கு முன்னர் விஞ்ஞான பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

16.07.2015 பதிவாளர்

**மழலையர் பள்ளிக்கு ஆசிரியர், உதவி ஆசிரியர்கள் தேவை**

**2016 ஆம் ஆண்டு வாசுகி மழலையர் பள்ளியை விரிவாக்க உத்தேசித்துள்ளோம்.**

தை மாதம் 4 ஆம் திகதி 2016 ஆரம்பமாகவுள்ள இலவச மழலையர் பள்ளிக்கு மேலதிக ஆசிரியர், உதவி ஆசிரியர்கள் தேவை.

இப் பள்ளியில் 4 + வயது மழலையரின் அறிவு,திறமைகள் என்பவற்றை வளர்த்தும் ஊக்குவித்தும் ஆரம்ப பாடசாலைக் கல்விக்கு தயார் செய்யப்படுவர்.

*தகைமைகள்:*

* மழலையர் பள்ளிக்கு கல்வி கற்பிப்பதற்கு தகுதி பெற்றவர்
* ஆங்கிலம்,கணினி அனுபவம் உள்ளவராகவும் இருப்பது விரும்பத்தக்கது
* நவீன கற்பித்தல் சாதனங்களைக் கையாளக்கூடியவர்

*ஊதியம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.*

ஆர்வமுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை 18.07. 2015 இற்கு முன் Sriranjan@vasukifoundation.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்.

*நேர்முகத்தேர்வு:*

இடம்: 82, உயரப்புலம் ஆனைக்கோட்டை (உத்துங்க விநாயகர் கோயிலுக்கு அருகில்)

காலம்: 19.07.2015ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை
கல்வி சான்றிதழ்கள்,மேலதிக தகைமைகள், (CV) ஆகியவற்றை கொண்டுவரவும்

*மேலதிக விவரங்களுக்கு:* வாசுகி அறநோக்கு மழலையர் பள்ளி
Vasuki charitableKindergarten
info@vasukifoundation.com 00 44 7841 522514

விண்ணப்பப்படிவத்துக்கு 82, உயரப்புலம், ஆனைக்கோட்டை
காலை: 08.00 - 08.30 11.30 - 12.30

2016 ஆம் ஆண்டு மழலையர் அனுமதிக்கான விண்ணப்பப்படிவம் எமது அலுவலகத்தில் இன்று தொடக்கம் வழங்கப்படுகிறது. அனுமதிக்கு முந்துங்கள்

# யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் கட்சிகள் மற்றும் சுயேச்ை

| விருப்பு வாக்கு இலக்கம் | இலங்கை த் தமிழ் அரசுக் கட்சி | அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | ஐக்கிய தேச |
|---|---|---|---|---|
| 1 | அருந்தவபாலன் கந்தையா | அமிர்தலிங்கம் இராசகுமாரன் | ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் | இளையதம்பி |
| 2 | ஆனந்தராஜ் நடராஜா | ஆனந்தி சிவஞானசுந்தரம் | இராமநாதன் ஐங்கரன் | குமாரு சர்வா |
| 3 | ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம் | எஸ்.பத்மினி | இராமசாமிசெட்டியார் செல்வவடிவேல் | மகேஸ்வரன் |
| 4 | ஆறுமுகம் கந்தையா பிரேமச்சந்திரன் | கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம் | டக்ளஸ் தேவானந்தா | மொஹமட் சுல் |
| 5 | ஈஸ்வரபாதம் சரவணபவன் | ஜெயரட்ணம் வீரசிங்கம் | பற்குணராசா யோகேஸ்வரி | ரவீந்திரன் துசீ |
| 6 | கந்தர் நல்லதம்பி ஸ்ரீகாந்தா | திருநாவுக்கரசு சிவகுமாரன் | ப.சீவரத்தினம் | ராஜலிங்கம் சி |
| 7 | தருமலிங்கம் சித்தார்த்தன் | தேவதாசன் சுதர்சன் | சந்திரகுமார் முருகேசு | வன்னியசிங்கப |
| 8 | மதினி நெல்சன் | விஸ்வலிங்கம் மணிவண்ணன் | சில்வேஸ்திரி அலன்ரின் | சின்னத்துரை |
| 9 | மாவை சோமசுந்தரம் சேனாதிராசா | சின்னமணி கோகிலவாணி | சிவகுரு பாலகிருஷ்ணன் | சின்னராசா வி |
| 10 | சிவஞானம் சிறீதரன் | செல்வராசா கஜேந்திரன் | சூசைமுத்து அலெக்ஸாண்டர் | செபஸ்ரியாம்பி |

| விருப்பு வாக்கு இலக்கம் | ஈழவர் ஜனநாயகமுன்னணி | மக்கள் விடுதலை முன்னணி | ஜனசெத பெரமுன | ஐக்கிய சோ |
|---|---|---|---|---|
| 1 | கந்தசாமி முதலியார் சூரியமூர்த்தி | அம்பலவாணர் கணபதிப்பிள்ளை | ஏ.சுப்பிரமணியம் | அப்துல்ஹமீட் |
| 2 | கல்ராயன் வெள்ளயன் சுவாமிநாதன் | அமிர்தலிங்கம் சத்தியரூபன் | கலாமதி கருணாநிதி | கணேசராஜா நஜ |
| 3 | ஜெயபாலன் யாழ்சன் | இராமலிங்கம் சந்திரசேகர் | கே.கருணாநிதி | கோபி பிரதீப பே |
| 4 | தவராசா மரியதாஸ் | கறுப்பையா பிரான்சிஸ் ஜோசப் | டபிள்யூ. எம். வசந்தி ஹேரத் | யோசேப் எட்வ |
| 5 | நமசிவாயம் ரவிச்சந்திரன் | கருப்பையா செல்வநாயகம் | நிரஞ்ஜனி யோகேஸ்வரன் | நிற்குணானந்தன் |
| 6 | நாகராசா சிறிகரன் | நமசிவாயம் இராசேந்திரம் | பாலசுப்பிரமணியம் வாசீசன் | பஞ்சரத் [illegible] பால |
| 7 | பெருமாள் சத்தியசேகன் | முத்தையா விஜயநாதன் | மாணிக்கவாசகர் ரஜனிகாந் | பேதுறுப்பிள்ளை |
| 8 | மாணிக்கம் மகாதேவன் | முத்தர் பரமலிங்கம் | றெங்கநாதன் ராஜா | லந்துமாலைவசர |
| 9 | வீரையா இளங்கோவன் | வைத்திலிங்கம் யோகரத்தினம் | சண்முகநாதன் இந்திரநாதன் | சிறிதுங்க ஜயசூரி |
| 10 | சிவபாலன் மதிவதனன் | சின்னத்துரை ராஜேந்திரம் | சண்முகலிங்கம் அருள்அமுதன் | சுப்பிரமணியம் ந |

| விருப்பு வாக்கு இலக்கம் | அகில இலங்கை தமிழர் மகாசபை | சுயேச்சைக் குழு 1 | சுயேச்சைக் குழு 2 | சுயேச்சை |
|---|---|---|---|---|
| 1 | அந்திரேஸ் அசந்தாமேரி | கணபதி தர்மராசா | ஆறுமுகம்நடேசு ராஜேந்திரன் | அருள்நேசரெ |
| 2 | கனகேஸ்வரன் கஜபாபு | தம்பிப்பிள்ளை இருதயராணி | கந்தையா தேவதாஸ் | இராசகுலம் ர |
| 3 | காசிலிங்கம் விக்னேஸ்வரன் | தர்மலிங்கம் தர்மகுலசிங்கம் | குணபாலகிருஷ்ணன் கிருபாகரன் | தில்லைநாதன் |
| 4 | ஜெயபாலன் கஜவாகு | தியாகலிங்கம் ஜெயவாணி | குணபால கவாஸ்கர் | துரைராஜ் தய |
| 5 | துரைராசா சுசீந்தன் | பத்மநாயகி குமாரசிறி | பறனாந்து யோசேப் அன்ரனி | துரை [illegible] |
| 6 | பேரின்பராசா டெஸ்மொன்ட் | பரமலிங்கம் உம்முயரீதா | வைரமுத்து தர்மதாஸ் | நாகரத்தினம் |
| 7 | யோசேப் இம்மானுவேல் பிரான்சிஸ் | பாலசந்திரன் மல்லிகா | சிவராசா உதயசேகரன் | புலேந்திரன் |
| 8 | சண்முகானந்தன் பிரகலாதன் | சிவசம்பு தவராசா | செல்லத்துரை றதீஸ்வரன் | ஈசாஜினிராஜ |
| 9 | சிவசம்பு சதீஸ்வரராசா | சுப்பிரமணியம் செல்வராஜா | செல்வரட்ணம் ஜேசுதாசன் செல்வராஜா | சின்னப்பு பேரி |
| 10 | சோமதேவா சுபாஸ்கரன் | செந்தில்நாதன் டிலேகா | சோமு குணசீலன் | செல்வநாயகப |

# தொடர்கிறது தொழிலாளர்களின் சோகம் சம்பள உயர்வுப் பேச்சில் முடிவில்லை

பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை நிர்ணயிக்கும் கூட்டு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுகள் தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே இருந்து வருகின்றன. இந்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற 5ஆம் கட்ட பேச்சும் இணக்கப்பாடின்றி தோல்வியில் முடிவடைந்துள்ளது. இதனால் அடுத்தகட்டப்பேச்சு பொதுத் தேர்தலுக்கு பின்னரே நடைபெறவுள்ளது.

கூட்டு ஒப்பந்தம் தொடர்பான ஐந்தாம் சுற்றுப்பேச்சு தொழிலமைச்சர் எஸ்.நாவின்ன தலைமையில் நேற்று நடைபெற்றது. இப்பேச்சுகளில் இலங்கை தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தொழிற் சங்கக் கூட்டமைப்பும், முதலாளிமார் சம்மேளனத்தின் சார்பாக கனிஷ்க வீரசிங்க, சுனில் போலியத்த உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்காக முதலாளி மார் சம்மேளனம் முன்னர் முன்வைத்த பிரேரணையை சில திருத்தங்களுடன் மீண்டும் முன்வைத்தபோதிலும் அதனை தொழிற்சங்கங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

கடந்த ஒன்பது நாள்களாக நடைபெற்றுவரும் மெதுவாக வேலை செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் தொழிலாளர்களின் சம்பளத்தை உடனடியாக அதிகரிக்க வேண்டுமென தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்தன. முதலாளிமார் சம்மேளனம் அதற்கு தொடர்ந்தும் கறுப்புக் கொடியையே காட்டியது மாத்திரமின்றி காரணத்தையும் முன்வைத்தது.

அதாவது, தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச சந்தையில் தேயிலையின் விலை குறைவடைந்துள்ளதன் காரணமாக தங்களுக்கு நட்டம் ஏற்படுவதாகவும் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்குவது இன்றைய நிலையில் சாத்தியமில்லை எனவும் கம்பனிகள் தெரிவித்தபோது அதனை மறுத்துரைத்தன தொழிற்சங்கங்கள்.

கம்பனிகள் கொடுக்கின்ற வேலைகளைத் தொழிலாளர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் முழுமையாக நிறைவேற்றுகின்றனர். அவர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கவேண்டும். தோட்டங்களை இலாபமீட்டும் வகையில் நிர்வகிக்கவேண்டியதும் அபிவிருத்தி செய்யவேண்டியதும் தோட்ட நிர்வாகங்களின் பொறுப்பாகும். அதற்குத் தொழிலாளர்கள் பொறுப்புக் கூற முடியாது எனத் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

இந்நிலையில், அடுத்தகட்ட பேச்சுகள் தேர்தலுக்குப் பின்னர்தான் ஆரம்பிக்கப்படும் என்ற நிலை உருவாகியுள்ளது. எது எவ்வாறாயினும் கூட்டு ஒப்பந்தமும், 1,000 ரூபா சம்பளப் பிரச்சினையும் சூடு பிடிக்கும் என்றேஎதிர்பார்க்கப்படுகின்றது. (த)

# ஐ.ம.சு. முன்னணிக்கு வாக்களிக்கவேண்டாம்

## அஸாத் சாலி வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 17

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த கொள்ளைக்காரார்களுக்கும், போதைவஸ்து கடத்தியவர்களுக்குமே வேட்புமனுவைக் கொடுத்துள்ளார் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி தெரிவித்தார்.


அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த அரசில் பாரிய ஊழல்கள் இடம்பெற்றதை எவரும் மறுக்கமுடியாது. இவையனைத்தும் அதில் அங்கம் வகித்த மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஜன யாப்பாவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவும் மீண்டும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கும், போதைவஸ்துகளை கடத்தியவர்களுக்கும், மக்களின் பணத்தை சூறையாடியவர் களுக்குமே தேர்தலில் போட்டியிட வேட்புமனுவை வழங்கியுள்ளனர்.

இவர்களுக்கு இனி ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. கடந்த ஜனவரி 8ஆம் திகதி இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த ஒன்றுதிரண்ட மக்கள், இம்முறை இந்த ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களைத் தோற்கடிக்க ஒன்றுதிரள வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுத்திர முன்னணியில் போட்டியிடும் ஊழல்வாதிகளுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் மக்கள் வாக்களிக்கக் கூடாது—என்றார். (த)




## கேம் பிரியர்களுக்காக சமூகவலைத்தளம்

சம காலத்தில் வயது வேறுபாடு இன்றி அனைவரையும் சமூக வலைத்தளங்கள் ஆக்கிரமித்து வருகின்றன.

இவ்வாறான நிலையில் கேமிங் துறையில் மேலும் ஆர்வத்தை தூண்டுவதற்காக Gamee எனும் சமூகவலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தளத்தினூடாக ஹேம் பிரியர்கள் புதிதாக அறிமுகம் செய்யும் ஹேம்களை விரைவாக தெரிந்து கொள்வதுடன், முற்றிலும் இலவசமாகவும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுகின்றது.

இந்தச் சமூக வலைத்தளத்தினை வடிவமைப்பத்றகாக HTML5 இணைய வடிவமைப்பு மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை Android மற்றும் iOS சாதனங்களுக்கான Gamee அப்பிளிக்கேஷனும் உருவாக்கப்பட்டுள்ளது.

## சவூதி அரேபியாவின் சூப்பர் கம்பியூட்டர்

உலகில் அதிக வினைத்திறன் கொண்ட கணினிகளாக சூப்பர் கம்பியூட்டர்கள் காணப்படுகின்றன.

இவற்றில் அமெரிக்கா, சீனா போன்ற நாடுகளின் கம்பியூட்டர்கள் முன்னணியில் திகழ்கின்றன.

இவ்வாறான கம்பியூட்டர்களுடன் முதன் முறையாக மத்திய கிழக்கு நாடு ஒன்றின் சூப்பர் கம்பியூட்டர் இணைந்துள்ளது.

இந்தக் கம்பியூட்டரானது சவூதி அரேபியாவிலுள்ள கிங் அப்துல்லா பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பிரிவில் காணப்படும் Shaheen II ஆகும்.

இக் கம்பியூட்டரானது 6,000 இற்கும் அதிகமான நொட்ஸ்ஸில் சுமார் 200,000 வரையான புரோசஸ்களை மேற்கொள்ள வல்லதாக இருப்பதுடன், 17.6 Petabytes சேமிப்பு



நினைவகம் மற்றும் 790 Terabytes RAM என்பவற்றைக் கொண்டுள்ளது.

இக் கம்பியூட்டரினால் ஒரு செக்கனில் செய்யப்படும் வேலைகளை செய்து முடிப்பதற்கு மனிதனுக்கு நீண்ட காலம் எடுக்கும் எனவும் கணிப்பிடப்பட்டுள்ளது.


## விரைவில் அறிமுகமாகும் iPad Pro

அப்பிள் நிறுவனம் தனது புத்தம் புதிய iPad Pro டேப் லட்டினை விரைவில் அறிமுகம் செய்யத் தீர்மானித்துள்ளது.

இதனை எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் அறிமுகம் செய்து நவம்பர் மாதமளவில் விற்பனைக்கு விடவுள்ளது. 12.9 அங்குல அளவு, 2732 x 2048 Pixel Resolution உடைய தொடுதிரையை கொண்ட இந்த டேப்லட்டில் Apple A9X Processor பயன்படுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர 256GB சேமிப்பு நினைவகமும் தரப்படவுள்ளது. எனினும் இந்த டேப்லட் தொடர்பில் மேலதிக தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில் Apple A9X Processor



ஆனது சிறந்த வினைத்திறன் உடையது எனவும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அறிமுகமாகவுள்ள iPhone 6S மற்றும் 6S Plus ஆகியவற்றுடன் இந்த Processor அறிமுகம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஏமாற்றிய அரசியல்வாதிகளுக்கு தேர்தலில் புகட்டுவோம் தக்கபாடம்

## நோர்வூட் தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 17

தங்களை ஏமாற்றிய அரசியல்வாதிகளுக்குநடைபெறவுள்ளதேர்தலில் நல்லஒருபாடத்தைபுகட்டுவோம்என்று நேற்று வழமைபோல் கொழுந்து பறிக்கச் சென்ற நோர்வூட் தோட்டத் தொழிலாளர் கள் தெரிவித்தனர்.

தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்திற்கும் தொழிற் சங்கங்களுக்கிடையிலும் இடம் பெற்ற பேச்சு வெற்றியளிக்காத காரணத்தாலும், ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படாததன் காரணமாகவும் நேற்றுக் காலை நோர்வூட் தோட்டத் தொழிலாளர்கள், மெதுவாக பணிகளில் ஈடுபடுமாறு கூறிய தொழிற்சங்கத்துக்கு எதிராக அதிருப்தி தெரிவித்தனர்.

மேற்படி தொழிற்சங்கம் தங்களை ஏமாற்றியுள்ளதாகவும் தங்களை பகடைகாய்களாக பயன்படுத்தி அரசி யல் இலாபம் தேடுவதாகவும் அவர் கள் குற்றஞ்சாட்டினர்.

சம்பள கூட்டு ஒப்பந்தத்தில் ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுத் தருவதாகக் கூறிய தொழிற்சங்கம் தங்களை ஏமாற்றியுள்ளது. கம்பனிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சு கம்பனிகாரர்கள் ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்க மறுத்ததையடுத்து முடிவு எதுவும் எட்டப்படாத நிலையில் நிறை வடைந்துள்ளது. அதனால் நாங்கள் ஆத்திரமடைந்துள்ளோம். எங்களை அரசியல் பகடைக்காய்களாக நினைக்காமல் தோட்ட தொழிலாளர்களின் சந்தாப் பணத்தை வாங்கி கொண்டு ஏமாற்றாமல் மக்களுடைய உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது மலையக தொழிற்சங்கங்களின் கடமையாகும். அத்தோடு 9 நாள்களாக மெதுவாக பணி செய்யும் போராட்டத்துக்குக் கூட சம்பளமும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

நியாயமான சம்பளத்தை கூட இவர்களால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. வாக்குகளுக்கு மட்டும் வீடு தேடி கைகளை கூப்பிக் கொண்டு வரும் மலையக தொழிற் சங்கத்துக்கு இம் முறை வாக்குகள் அளிக்கப்போவ தில்லை. வாக்குகள் கேட்டு யாரும் வரவேண்டாம். அப்படி வந்தால் அடி காயங்களுடன் திரும்புவீர் கள்.– என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற)



# மெதுவான பணிக்கு சம்பளம் தருமாறு கோரி ஆர்ப்பாட்டம்

## ஆகுரோவா தோட்டத் தொழிலாளர் முன்னெடுப்பு

கொழும்பு, ஜூலை 17

மெதுவாக பணி செய்வதற்கான சம்பளத்தை வழங்க வேண்டும் என வலியுறுத்தி அக்கரப்பத்தனை ஆகுரோவா தோட்ட தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு தோல்வியில் முடிவடைந்தது. ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படாத நிலையில் அக்கரப்பத்தனையில் தொழிலாளர்கள் தொடர்ந்தும் மெதுவாக பணி செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தோட்ட தொழிலாளர்களால் ஆர்ப்பாட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள், தொழிற்சங்கங்கள் முறையான சம்பள உயர்வை பெற்றுக்கொடுக்காததைக் கண்டித்ததுடன், ஆயிரம் ரூபா சம்பளத்தை உடனடியாக கம்பனி வழங்க வேண்டும் எனவும், மெது வான வேலை செய்ததற்கான சம் பளத்தை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

அக்கரப்பத்தனை பிரதான வீதியில் ஆகுரோவா தோட்டச் சந்தியில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், தொழிற்சங்கங்களும், நிறுவன அதிகாரிகளும் தொழிலாளர்களை ஏமாற்றியதாக கூறியும் பதாகைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பியிருந்தனர். இவ்வாறாக தொழிலாளர்களது ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணி நேரம் வரை தொடர்ந்தது. (ற)

# தமிழரசுக் கட்சி அலுலகம் திறப்பு

மன்னார், ஜூலை 17

இலங்கை தமிழரசுக்கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகம் நேற்று முன்தினம் காலை மன்னார் புகையிரத நிலைய வீதியில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் வி.எஸ். சிவகரன் தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அலுவலகத்தை உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து தமிழரசுக்கட்சியின் சார்பாக வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகமும் இடம் பெற்றது. மன்னாரில் போட்டியிடும் வர்த்தகர் சாள்ஸ் நிர்மலநாதன்,வவுனியாவில் போட்டியிடும் வங்கி முகாமையாளர் றோய் ஜெயக்குமார், மற்றும் முல்லைத்தீவில் பெண்கள் சார்பாக போட்டியிடும் சாந்தி சிறிஸ்கந்தராஜா ஆகிய வேட்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் சட்டத்



தரணி பிரிமூஸ் சிராய்வா, கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற் றினர்.

(ற-56)

# உலகில் அதிக தங்கம் வாங்குபவர்கள் பட்டியல்

புதுடில்லி,ஜூலை 17
மக்கள் தொகையில் உலகின் இரண்டாவது பெரிய நாடாக விளங்கும் இந்தியாவிலும், சீனாவிலும் இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 360 தொன் (3 லட்சத்து 60 ஆயிரம் கிலோ) தங்க நகைகள் விற்பனையாகியுள்ளதாக சர்வதேச தங்க அமைப்பு தெரிவித்துள்ளது.

அதில், சீன மக்கள் 213.2 தொன் தங்க நகைகளையும், அதற்கு அடுத்தபடியாக இந்தியர்கள் 150.8 தொன் தங்க நகைகளையும் இந்த வருடத்தின் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் மட்டும் வாங்கியுள்ளனர்.




கடந்த வருடத்தில் இதே கால கட்டத்தில் சீனர்கள் வாங்கியிருந்த தங்கத்தின் அளவை விட இந்த வருடத்தின் விற்பனை சுமார் 10 சதவீதம் சரிந்தும், இந்தியர்களின் இந்த வருடக் கொள்முதல் 22 சதவீதம் உயர்ந்தும் உள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனர்கள் மற்றும் இந்தியர்கள் அதிகமாக வாங்குவதால் தங்கத்தின் சர்வதேச சந்தையின் விலையை நிர்ணயிப்பதில் இந்த இரு நாடுகளின் கொள்முதல் திறன் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவில் மட்டுமின்றி வளைகுடா நாடுகளிலும் தங்க நகைகளை வாங்கிக் குவிப்பவர்களில் இந்தியர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

இந்தியர்களின் தங்கக் கொள்முதல் அவர்களின் மரபுவழி வந்த கலாசார பழக்கமாக இருந்தபோதிலும், சீனர்களின் தங்கக் கொள்முதல் நோக்கமானது, மாறிவரும் தங்கத்தின் விலைகளின் அடிப்படையில், பின்னாளில் அதிக விலைக்கு விற்று இலாபம் ஈட்டும் சூதாட்ட மனப்பான்மையை சார்ந்ததாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உகண்டாவில் கிளர்ச்சியாளர்கள் வெறியாட்டம்




கோமா, ஜூலை 17
உகண்டா நாட்டில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய கொடூரத் தாக்குதல் சம்பவத்தில் சுடப்பட்டும் எரித்தும் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பெனி நகரிலிருந்து 60 கி.மீ தொலைவில் உள்ள பல்வேறு கிராமங்களில் ஏ.டி.எப் என்ற கிளர்ச்சிக் குழு நேற்று முன்தினம் நடத்திய கொடூரத் தாக்குதலில் 9 அப்பாவிப் பொதுமக்கள் துடிதுடித்து உயிரிழந்துள்ளனர்.

அதில் 6 பேர் சுடப்பட்டும், 3 பேர் எரியூட்டப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு பேரைக் காணவில்லை.

மேலும் கிளர்ச்சியாளர்கள் 69 குடிசைகளைத் தீக்கிரையாக்கியுள்ளனர்.

இந்தத் தகவலை அந்த நாட்டின் இராணுவமும், மனித உரிமைகள் குழுவும் நேற்று வெளியிட்டுள்ளன. (ஐ)



## சூரியசக்திக்கு வந்த தடை

ஹவாய், ஜூலை 17
உலகம் முழுவதும் 35 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்தை சுற்றி வருவதை இலக்காகக் கொண்ட, முழுக்க முழுக்க சூரிய சக்தியில் இயங்கும் 'சோலார் இம்பல்ஸ்' விமானம், தனது முதல் உலகச் சுற்றுப் பயணத்தை அபுதாபியில் கடந்த மார்ச் தொடங்கியது. சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த பெர்ட்ரண்ட் பிக்கார்டு மற்றும் ஆண்ட்ரே போர்ஷ்பெர்க் ஆகிய இருவரும் வடிவமைத்துள்ள அந்த விமானத்தை, வர்த்தகப் பயன்பாட்டுக்கு உபயோகப்படுத்தும் முயற்சியாகவே இந்த உலகச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அபுதாபியில் இருந்து இந்தியா உட்பட பல நாடுகள் வழியாகப் பறந்த சோலார் இம்பல்ஸ் விமானம் ஜப்பானில் இருந்து, ஐந்து இரவு ஐந்து பகல் இடைவிடாது பயணித்து 7 ஆயிரத்து 200 கிமீ தூரத்தை வெற்றிகரமாகக் கடந்து, கடந்த 4 ஆம் திகதி ஹவாய் தீவைச் சென்றடைந்தது. எரிபொருள் நிரப்பாமல் தனிநபர் விமானம் ஒன்று சுமார் 118 மணிநேரத்தில் இந்த நீண்ட தூரத்தைக் கடப்பது இதுவே முதல் முறை.

ஆனால் இந்தச் சாதனையை புரிந்த சோலார் இம்பல்ஸ் விமானம் தற்போது சூரிய ஒளியை மின் சக்தியாக சேமித்து வைக்கும் அதன் 4 பற்றரிகளில் ஏற்பட்ட பிரச்சினையால் அடுத்த 9 மாதங்கள் ஹவாய் தீவில் தங்குவதாக அவ்விமானக்குழு தெரிவித்துள்ளது. பற்றரி பிரச்சினையைச் சரி செய்த பின்பாக அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தை நோக்கி தனது அடுத்த பயணத்தை அடுத்த வருடம் ஏப்ரல் இறுதி அல்லது மே முதல் வாரத்தில் தொடங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுற்றுலாப் பயணிகள் 20 பேர் கைது

பீஜிங்,ஜூலை 17
சீனாவுக்கு ஓர் இந்தியர் உள்ளிட்ட இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா நாடுகளை சேர்ந்த 20 பேர், 47 நாள் சுற்றுலாப் பயணமாக சென்றிருந்தனர். அவர்கள் தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்பு வைத்திருப்பதாக எழுந்த சந்தேகத்தின் அடிப்படையில் இன்னர் மங்கோலியா நகரமான எர்டாஸ் நகர விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சிலர், அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பின் பிரசார வீடியோவைப் பார்த்துக்கொண்டிருந்ததாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களது சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்திருந்த நிறுவனம், இந்தக் குழுவினருக்கு தீவிரவாத தொடர்பு ஏதும் கிடையாது. அவர்கள் மீது அவர்களது நாட்டில் எந்தவிதமான குற்ற வழக்கும் நிலுவையில் இல்லை எனக் கூறியுள்ளது. (ஐ)



காமராஜரின் 113 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது சாதனைகளை விளக்கும் 113 புகைப்படங்கள் அடங்கிய 113 மீற்றர் நீள பதாகையை மாணவிகள் பிடித்தபடி தி.நகர் காமராஜர் இல்லம் அருகே அணிவகுத்து நின்றனர். (ஐ)

## இரண்டாவது குழந்தைக்கு சீனர் விண்ணப்பம்

சீனாவின் குடும்பத்துக்கு ஒரு குழந்தைத் திட்டம் கட்டாயப்படுத்தப்பட்டது. கடந்த 2013 ஆம் ஆண்டு அந்தத் திட்டம் தளர்த்தப்பட்டது. தகுதியுள்ள தம்பதிகள் 2 ஆவது குழந்தையைப் பெற்றுக் கொள்ளலாம் என சீன அரசு அனுமதி வழங்கியது.

சீனாவில் நடைமுறைக்கு வந்த இந்தத் திட்டத்தின் கீழ் சீன தலைநகர் பீஜிங் நகரில் வசிக்கும், 42 ஆயிரம் தம்பதிகள், இரண்டாவது குழந்தையைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தனர். அதில் 38 ஆயிரம் தம்பதிகளுக்கு சீன அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் அந்தத் தம்பதிகள் மிகவும் உற்சாகத்தில் உள்ளனர். சீனாவில் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவேதான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுள்ளதாக பீஜிங் சுகாதாரத்துறை மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஈரானுக்கு அமைதிக்கான நோபல் பரிசு



வியன்னா,ஜூலை 17
வல்லரசு நாடுகளுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டதன் வாயிலாக மத்திய கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் அமைதியை கொண்டு வந்ததற்காக ஈரான் மற்றும் அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகளுக்காக அவ்விரு நாடுகளுக்கும் அமைதிக்கான நோபல் பரிசு கொடுப்பது குறித்து தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாக நோபல் அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. உலக நாடுகளின் கடும் எதிர்ப்பை மீறி 10 வருடங்களுக்கு முன்பு ஈரான் நாடு அணுசக்தித் திட்டங்களை தொடங்கியது. அதற்கு சீனா, பாகிஸ்தான் போன்ற அணு ஆயுத நாடுகள் மறைமுகமாக உதவி செய்தன. அணுசக்தித் திட்டங்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் முன்வைத்த கோரிக்கையை ஈரான் ஏற்க மறுத்தது.

இதைத் தொடர்ந்து அந்த நாட்டின் மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டன. மின்உற்பத்தி போன்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காகவே அணுசக்தித் திட்டங்களை தொடங்கியிருப்பதாக ஈரான் அரசு அறிவித்தது. வல்லரசு நாடுகள் முன்வைக்கும் நிபந்தனைகளை ஏற்க தயாராக இருப்பதாகவும் பணிந்து வந்தது. அதைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, சீனா, ரஷ்யா மற்றும் ஜேர்மனி ஆகிய 6 வல்லரசு நாடுகளும் ஈரானுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்வது தொடர்பாக கடந்த சில வருடங்களாக பேச்சு நடத்தின. கடைசியாக வியன்னாவில் கடந்த 16 நாள்களாக தொடர்ந்து பேச்சு வார்த்தை நடைபெற்றது.

இந்தப் பேச்சு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஈரானுடன் வரலாற்று சிறப்பு மிக்க அணுசக்தி ஒப்பந்தத்தில் வல்லரசு நாடுகள் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தப்படி பொருளாதாரத் தடைகளிலிருந்து ஈரானுக்கு நிவாரணம் கிடைக்கும். அணு ஆயுத தயாரிப்பில் ஈரான் ஈடுபடாது. இந்த உடன்படிக்கை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் சாதனையாகக் கருதப்படுகிறது. வல்லரசு நாடுகளுடன் ஈரான் அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதன் காரணமாக மத்திய கிழக்கு ஆசிய பகுதியில் போர் அபாயம் குறைந்திருப்பதாக உலக நாடுகள் மகிழ்ச்சி தெரிவித் துள்ளன.. இதைத் தொடர்ந்து ஈரான் மற்றும் அமெரிக்காவுக்கு கூட்டாக அமைதிக்கான நோபல் பரிசு வழங்குவது குறித்து பரிசீலனை செய்து வருவதாக நோபல் அமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(ஐ)




வெள்ளை மாளிகையில் நடைபெற்ற விருந்து ஒன்றின் போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 9 வயதுச் சிறுமியொருத்திக்கு பர்கர் பரிமாறியுள்ளார். விருந்தில் பல்சுவையான உணவுகள் பரிமாறப்பட்டன, அப்போது விருந்து நடைபெற்ற இடத்துக்கு திடீரென வருகை தந்த ஒபாமா, விருந்தில் உணவு பரிமாறுவதைப் பார்வையிட்டதோடு மட்டுமல்லாமல், சிறுமி ஸ்ரேயா படேலுக்கு ஒபாமாவும், அவரது மனைவி மிச்செல்லும் பர்கர் பறிமாறினர்.
வருடந்தோறும் அமெரிக்கக் குழந்தைகளை தேர்ந்தெடுத்து வெள்ளை மாளிகையில் அவர்களுக்கு அதிபர் ஒபாமாவின் மனைவி மிச்செல் விருந்து கொடுத்து வருவது வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## சீனாவிடமிருந்து நீர்மூழ்கி கப்பல் தாய்லாந்து கொள்முதலை நிறுத்தம்

பாங்கொக், ஜூலை 17
அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடாக தாய்லாந்து பல்லாண்டு காலமாகத் திகழ்ந்து வந்தது. இந்த நிலையில் கடந்த வருடம் தாய்லாந்தில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கு பின்னர், அந்த நாட்டுக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.
இந்த நிலையில், சீனாவிடம் இருந்து ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் 3 நீர் மூழ்கிக் கப்பல்களை வாங்குவதாகத் தாய்லாந்து உறுதி அளித்திருந்தது. அந்தப் பிராந்தியத்தில் சீனா உள் கட்டுமான வசதிகளுக்கு உதவுதல், கடன் வழங்குதல் என தனது செல்வாக்கை வளர்த்து வருகிறது. அதன் காரணமாகவே தற்போது அந்த நாட்டுடன் தாய்லாந்து நட்பினை வளர்த்து வருகிறது.
ஆனால் திடீரென சீனாவிடம் இருந்து 3 நீர்மூழ்கிப் கப்பல் வாங்கும் திட்டத்தை தாய்லாந்து நிறுத்தி வைத்து விட்டது. இது பற்றி அந்த நாட்டின் இராணுவ அமைச்சர் பிராவிட் வாங்சுவான் கூறுகையில், "எங்கள் கடலோரப் பகுதிகளில் நீர்மூழ்கிக் கப்பல்களின் பங்களிப்பு, அவற்றின் விலை தொடர்பாக கடற்படை மறுபரிசீலனை செய்கிறது. இப்போது பொறுத்திருப்போம். நீர்மூழ்கிக் கப்பல் கொள்முதல் திட்டத்தை ஒப்புதலுக்காக மந்திரிசபைக்கு அனுப்பப்போவதில்லை" என்றார். இது சீனாவுக்கு அதிர்ச்சி அளிப்பதாக அமைந்துள்ளது. (ஐ)

# கிரீஸ் நாட்டில் பயங்கர வன்முறை

## போர்க்களமானது ஏதன்ஸ் நகரம்

ஏதன்ஸ்,ஜூலை 17
கிரீஸ் நாட்டில் பயங்கர வன்முறை ஏற்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் கலகத்தில் ஈடுபட்டுள்ள எதிர்ப்பாளர்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கிரீஸ் நாடு கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேறும் நிலையில் உள்ளது.
இதையடுத்து கிரீஸ் நாட்டுக்கு இறுதி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாட்டில் புதிய பொருளாதாரச் சீர்த்திருத்தங்கள் மேற்கொள்வது தொடர்பான வாக்கெடுப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏராளமானோர் நாடாளுமன்றத்தின் முன் குவிந்தனர். திடீரென அவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.



மேலும் அவர்கள் பெற்றோல் குண்டுகளைப் பொலிஸாரை நோக்கி வீசினர். எனவே பொலிஸாரும் கண்ணீர்க் குண்டுகளை வீசி அவர்களை விரட்டினர்.
அதனால் ஏதன்ஸ் நகரமே போர்க்களம் போல் காட்சியளித்தது. (ஐ)


## 5 நட்சத்திர ஹோட்டலில் கடல் சிங்கத்துக்கு விருந்து

பிஜிங், ஜூலை 17
செல்லமாக வளர்க்கும் கடல் சிங்கத்துக்கு பிறந்த நாள் விழா கொண்டாடுவதற்காக சீனாவில் உள்ள 5 நட்சத்திர ஹோட்டலை முழுமையாக வாடகைக்கு எடுத்து விருந்து கொடுத்த கோடீஸ்வரரொருவரைப் பற்றிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது.
சீனாவின் மிகப் பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவரான வாங்ஜியலின் என்பவரின் 30 வயது மகன் தான் வளர்க்கும் கடல் சிங்கத்தின் பிறந்த நாளை வெகுவிமரிசையாகக் கொண்டாட நினைத்தார். அதற்காகக் கடலோர நகரமான க்விங்டாவோவில் ஒன் ஸ்பிரிங் என்ற 5 நட்சத்திர ஹோட்டலை முழுமையாக இரண்டு நாள்கள் வாடகைக்கு எடுத்துள்ளார்.
கோடீஸ்வரது மகனும் அவரது வளர்ப்பு கடல் சிங்கமும் சேர்ந்து அந்த ஹோட்டலையே அமர்க்களம் செய் துள்ளனர். அவர்களுக்கெனத் தனி சமையல்காரர் நியமிக்கப்பட்டு விருந்து உணவும் பரிமாறப்பட்டது. இப்படியொரு ஜோடியைப் பார்த்து ஹோட்டல் ஊழியர்கள் ஆச்சரியத்தில் மூழ்கினர். (ஐ)



## புளுட்டோவை நெருங்கிய அமெரிக்க விண்கலம்

வொஷிங்டன்,ஜூலை 17
அமெரிக்காவால் அனுப்பப்பட்ட "நியூ ஹாரிசன்"விண்கலம் வெற்றிகரமாக புளுட்டோவை நெருங்கியுள்ளது.
புளுட்டோ கிரகம் சூரியனில் இருந்து வெகு தொலைவில் உள்ளது, இந்த நிலையில் புளுட்டோக் கிரகத்தை ஆராய்வதற்காக நாசா விண்வெளி ஆய்வு மையம் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அட்லஸ் என்ற ரொக்கெட் மூலம், நியூ ஹாரிசன் என்ற ஆளில்லா விண்கலத்தை அனுப்பியது.
அந்த விண்கலம் ஒன்பதரை வருடங்கள் விண்ணில் பயணம் செய்துள்ளது. இது வினாடிக்கு 14 கிலோ மீற்றர் வேகத்தில் தனது பயணத்தை மேற்கொள்கிறது. அதன்படி, 482 கோடி கி.மீற்றர் தூரம் பயணம் செய்து கடந்த 13 ஆம் திகதி புளுட்டோ கிரகத்தை நெருங்கியது. அதைத் தொடர்ந்து புளுட்டோ கிரகத்தின் தெளிவான படத்தை எடுத்து பூமிக்கு அனுப்பியது. அதை அமெரிக்காவின் ஜானல் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழக இயற்பியல் ஆய்வு கூடத்தில் விஞ்ஞானிகள் பார்த்து மகிழ்ந்து, அமெரிக்கக் கொடியுடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். புளுட்டோ கிரகத்தில் ஆய்வு நடத்த அமெரிக்கா தான் முதன் முறையாக விண்கலத்தை அனுப்பியுள்ளது.



தற்போது அதன் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. அதற்காக விஞ்ஞானிகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்துள்ளார். (ஐ)

## அகதிகள் முகாமில் துப்பாக்கிச்சூடு

பெர்லின்,ஜூலை 17
ஜேர்மனியில் அகதிகள் முகாமொன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களைப் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.
ஜேர்மனியின் போஹெலின் பகுதியில் உள்ள விடுதியில் அகதிகளுக்கான முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில்கடந்தவாரம்தொடர்ச்சியாக இரண்டு நாள்கள் இரவு வேளையில் அங்கு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
அந்தத் தாக்குதலில் ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் கட்டடத்தின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன.
தாக்குதல் நடைபெற்ற வேளையில் அங்கு 150 அகதிகள் இருந்துள்ளனர். எனினும் எவருக்கும் எந்தக் காயமும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. இந்தத் தாக்குதல் தொடர்பாகப் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.
எனினும் தாக்குதலின் போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களின் விவரங்கள் குறித்த தகவலை அவர்கள் இரகசியமாக வைத்துள்ளனர். கடந்த சில மாதங்களாகவே ஜேர்மனியில் அகதிகள்முகாம்கள் மீதானதாக்குதல் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நுணாவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவு

தென்மராட்சி, ஜூலை 17


சாவகச்சேரி நுணாவில் கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்கான புதிய கிராம அபிவிருத்திச் சங்கம் கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்பக் கூட்டம் அந்தப் பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் : க.மோகனராஜலிங்கம்
உப தலைவர் : கா.சற்குணதேவன்
செயலாளர் : ச.நரேந்திரன்
உதவிச்செயலாளர் : நா.சிவபாலன்
பொருளாளர் : இ.நவரத்தினராஜா

இவர்களுடன் மேலும் எட்டு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## ஆறாம் ஆண்டு நினைவுகள்

அமரர்
முத்துவேலு சண்முகரத்தினம்



மலர்வு
13.02.1921

உதிர்வு
17.07.2009


எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டுகள் ஆறு கடந்து விட்டன ஆனாலும் உங்கள் நினைவுகளினால் நிதம் நிதம் கண்ணீர் விடுவதை தவிர்க்க முடியவில்லையே! ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ என்ற நியதி இருந்தாலும் நினைவுகளிலும் கனவுகளிலும் நீங்கள் எங்கள் கூட இருப்பதாகவே உணர்கிறோம் என்றும் எங்களுடன் நினைவுகளாக நீங்கள் இருந்து வழி நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையில் நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றோம் வாழ்ந்த காலத்தில் உங்களது செயல்கள் சிந்தனைகள் இன்றும் எமது செயல்களிலும் சிந்தனைகளிலும் சேர்ந்து இருக்கின்றன.

கலட்டி முந்தல் லேன்
(கலைவாணி மில் லேன்),
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

மகன்மார் - சண்முகரத்தினம் சாந்திக்குமார்,
சண்முகரத்தினம் சுகுமார்,
சண்முகரத்தினம் சிவகுமார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

குமாரசாமி
தில்லைநாதன்



மலர்வு
08.08.1943

உதிர்வு
17.06.2015


கடந்த 17.06.2015 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் குமாரசாமி தில்லைநாதன் அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (17.07.2015) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

77, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
021 221 6511

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வைத்திலிங்கம் இலட்சுமணன்
(பனங்கட்டி)



தோற்றம்
28.07.1939

மறைவு
17.07.2011

அன்பிலே சிறந்தவராய்
மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி
இன்பமாக வாழ வைத்த
எம் இதய தெய்வமே! ஐயா!
நான்கு ஆண்டுகள் நகர்ந்தாலும்
உங்கள் சுகமான
நினைவுகளோடு வாழ்ந்திருப்போம் ஐயா!

தந்தை காலடி எமது கோயில்

குடும்பத்தினர்.
கோயில் வீதி, மல்லாகம்.

# சைக்குழுக்களின் வேட்பாளர்களுக்குரிய விருப்பு இலக்கங்கள்

| தேசியக் கட்சி | ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | நவ சிகல உறுமய | ஸ்ரீலங்கா மஹாஜனபக்ஷய |
|---|---|---|---|
| நம்பி நாகேந்திரராஜா | அங்கஜன் இராமநாதன் | அன்பழகன் அரவிந்தன் | ஆறுமுகம் சந்திரகுமார் |
| சர்வானந்தன் | அழகராஜா யோகேஸ்வரன் | அப்பையா ஐங்கரன் | குருநாதன் பிரபாகரன் |
| பரன் விஜயகலா | ஞானப்பிரகாசம் அலோசியஸ் ராஜ்குமார் | கதிர்காமநாதன் விதுஷன் | தங்கராசா சத்தியசீலன் |
| மட் சுல்தான் றஹீம் | தர்மலிங்கம் யோகராசா | குலசிங்கம் பிரசாத் | தர்மகுலசிங்கம் பிரதீபன் |
| ன் துசீபன் | பாலசுப்பிரமணியம் சுபதீஸன் | தயாசீலன் சஜிதரன் | நல்லதம்பி அற்புதநாதன் |
| கம் சிவசங்கர் | இராஜேந்திரன் வசந்தகுமார் | பரமநாதன் மதனகரன் | இராஜேந்திரன் சத்தியரூபன் |
| சிங்கம் பிரபாகரன் | வன்னியசிங்கம் கபிலன் | யோகராசா தேவானந் திவ்வியராஜ் | இராசரத்தினம் யோகேஸ்வரன் |
| துரை குலேந்திரராஜா | வீரப்பிள்ளை வீரகுமார் | சந்திரன் சபேசன் | சண்முகநாதன் பாலபாஸ்கரன் |
| சா விஜயராஜன் | சிவசுப்பிரமணியம் பார்த்தீபன் | சுந்தரலிங்கம் சுமனன் | சின்னராசா அஜீத் |
| யாம்பிள்ளை மரியதாசன் | சீனியர் குணநாயகம் | செல்லத்துரை சிந்துஜன் | சிவகுரு கிருஷ்ணகுமார் |

| சோசலிச கட்சி | சோசலிச சமத்துவ கட்சி | முன்னிலை சோஷலிசக் கட்சி | தமிழர் விடுதலை கூட்டணி |
|---|---|---|---|
| மீட் மொஹமட் சறூட் | ஜயம்பிள்ளை லக்ஸ்மணன் | அருளானந்தம் அருண் | இராமசாமி தம்பையா விக்னராசா |
| ஜா கஜன் | இராசரத்தினம் பாலகௌரி | ஆறுமுகம் வீரராஜா | இராசதுரை புஸ்பராசா |
| பா யோன்ராஜ்குமார் | இராசேந்திரம் சுதர்சன் | கோங்கல சூரியாராச்சிகே சுனில் தர்மப்பிரிய | கணேசு ஜனார்த்தனன் |
| ட்வேட் அன்ரனிப்பிள்ளை | கீதானந்த பாலசூரிய ஜயசேகர | கோபாலபிள்ளை விஜயரத்தினம் | காசிப்பிள்ளை குலசேகரம் |
| ந்தன் செந்தூரன் | திருச்செல்வம் சுப்பிரமணியம் | ஜூட் கிருஷாந்தசில்வாபிள்ளை | நடராசா மதிஅழகராசா |
| பால... | பரமு திருஞானசம்பந்தர் | பூபாலபிள்ளை சந்திரகுமாரன் | பாலசிங்கம் மோகனசுந்தரம் |
| ள்ளை மெறின்லக்சன் | முத்துலிங்கம் முருகானந்தன் | மதனபூபாலன் வரதராசன் | மாசில்லாமணி ஒளிவண்ணன் |
| ல வசந்தன் | முருகானந்தன் சுசித்ரா | முருகையா தினேஸ்வரன் | முத்து சிவகுருநாதன் |
| யசூரிய | வேலும்மயிலும் கமலதாசன் | மேரிரஞ்ஜனி நிர்மலநாதன் | சண்முகானந்தன் உஷாந்தன் |
| யம் நகுலராஜா | சின்னத்தம்பி பவானந்தன் | செல்வநாயகி முனீஸ்வரன் | செல்லன் கந்தையன் |

| யச்சைக் குழு 3 | சுயேச்சைக் குழு 4 | சுயேச்சைக் குழு 5 | சுயேச்சைக்குழு 6 |
|---|---|---|---|
| நேசரெத்தினம் ரவிகுமார் | இராசையா தர்மகுலசிங்கம் | அருமைநாயகம் அரவிந்தன் | அன்னலெட்சுமி வனசுதன் |
| லம் ரஜிந்தன் | கணேசலிங்கம் சந்திரலிங்கம் | ஆனந்தவடிவேல் கிருசாந்தன் | ஜெயபால ஜெயசுலக் ஷன் |
| நாதன் சாந்தராஜ் | காளிக்குட்டி சுப்பிரமணியம் | ஆனந்தசங்கரி ஜெயசங்கரி | தம்பிராசா ஜெயேந்திரன் |
| ஜ் தயானந்தன் | குமாரவேலு அகிலன் | இராசரத்தினம் கங்கை மைந்தன் | தாமோதரம்பிள்ளை லோகேந்திரன் |
| கம் ...விராஜ் | தங்கராசா தேவதாசன் | கணேசமூர்த்தி அனோஜன் | நாகன் கிருஷ்ணமுகன் |
| தினம் ஜீவபாலன் | நடேசபிள்ளை வித்தியாதரன் | தெய்வானை பத்மநாதன் | வேலாயுதம் கணேஸ்வரன் |
| திரன் ஞானராஜா | விநாயகசுந்தரம் மோகனசுந்தரம் | மதிமுகராசா விஜயகாந் | சுபாரெத்தினம் பரமேஸ்வரன் |
| னி ராஜசிங்கம் | வீரன் சக்திவேல் | சண்முகரத்தினஐயர் சிவகடாட்சஐயர் | சிவாஜினி சுரேஸ்குமார் |
| பு பேரின்பநாயகம் | சிவகுரு முருகதாஸ் | செல்லத்துரை யோகராசா | சுந்திரலிங்கம் சதீஸ்சன் |
| நாயகம் சேரூபன் | சிவநாதன் நவீந்திரா | செல்லையா விஜயரட்ணம் | செல்லக்கிளி ஆனந்தரஞ்சன் |

## இலங்கை -கேரளா இடையே சொகுசு படகுச் சேவை

கொழும்பு, ஜுலை 17
இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் இலங்கைக்கும் – தென்னிந்தியாவின் கேரள மாநிலத்துக்கும் சொகுசு வசதிகள் நிறைந்த படகுச் சேவையொன்று எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு செயற்படும் ஹர்பிலன் படகுச் சேவைகள் தனியார் நிறுவனம் இந்தப் படகுச் சேவையை நடத்தவுள்ளது. 2017ஆம் ஆண்டு மே மாதம் வரையில் மேற்படி நிறுவனம் இந்தச் சேவையை நடத்தவுள்ளது. இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படும் படகொன்றில் ஒரு தடவையில் 590 சுற்றுலாப் பயணிகளையும் பணியாளர் குழுக்களைச் சேர்ந்த 260 பேரையும் ஏற்றிச் செல்ல முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## முன்னாள் எம்.பிக்களின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கம்

முன்னாள் நாடாளுமன்ற உப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பொலிஸ் பாதுகாப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சின் செயலாளர் ரி.எம்.கே.பி.தென்னக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பொலிஸ் பாதுகாப்பு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அகற்றப்படவுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். கடந்த நாடாளுமன்றில் அங்கம் வகித்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை உடனடியாக திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரினதும் சட்டவிரோத ஆயுதங்கள் களையப்படவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

சட்ட ரீதியாக வழங்கப்படும் ஆயுதங்களைத் தவிர சட்டவிரோதமாக வைத்திருக்கும் அனைத்து ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் எதிர்காலத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவை என்றால் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கவேண்டிய அவசியம் கிடையாது என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எவ்வாறெனினும், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் இரா ஜாங்க அமைச்சர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டதைப் போன்று தொடர்ந்தும் பாதுகாப்பு வழங்கப் படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## வரலாற்றில் முதல் முறையாக 36 தேரர்கள் தேர்தல் களத்தில்

கொழும்பு, ஜுலை 17
இந்த முறை இடம்பெறும் நாடாளுமன்றத் தேர்தலில் முதற் தடவையாக 36 பௌத்த தேரர்கள் களத்தில் இறக்கியுள்ளனர். இவர்களுள் இருவர் தேசியப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பத்தேகம சமித தேரர் இந்த முறையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பாகப் போட்டியிடுகிறார்.

பொதுபலசேன அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரும் இந்த முறை பொது ஜன முன்னணியில் இருந்து போட்டியிடுவதோடு அவர் உள்ளிட்ட 16 பௌத்த தேரர்கள் மேற்படி முன்னணியின் கீழ் முதல் தடவையாக களமிறங்கியுள்ளனர். அந்தப் பௌத்த தேரர்களுள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த பெந்திவெவ தியசேன தேரரும் உள்ளடங்கியுள்ளார்.

பத்திரமுல்லை சீலரத்ன தேரரும் ஜனசெத முன்னணியில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதோடு அதே முன்னணியில் இருந்து 17 பௌத்த தேரர்கள் மாவட்டங்கள் பலவற்றிலும் போட்டியிடுகின்றனர். அவர்களுள் 6 பௌத்த தேரர்கள் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

அதே போன்று கடந்த பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்திலிருந்து போட்டியிட்ட அத்துரலியேரத்னதேரர், ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் இந்தமுறை உருவாக்கப்பட்டுள்ள நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதற்கமைய, நாட்டின் அரசியல் வரலாற்றில் அதிகளவிலான பௌத்த தேரர்கள் தேர்தலில் போட்டியிடும் பொதுத் தேர்தலாக 2015 பொதுத் தேர்தல் வர லாற்றில் இடம்பெறக்கூடும். (த–22)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போரால்பாதிப்புற்றோருக்கான மனிதநேய உதவிஇன்றைய தேவை

எம் மத்தியில் வாழும் முன்னாள் போராளிகள் உட்பட பன்னிரண்டாயிரத்து அறுநூற்று எழு பத்தாறு தரப்பினருக்கு, வாழ்வாதார உதவிகளை வழங்கும் திட்டம் ஒன்றை, வடக்கு மாகாண சபையின் கிராம அபிவிருத்தி, போக்குவரத்து மற்றும் மீன்பிடித் துறைகளுக்கான அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆரம்பித்துள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று, அது இயங்கத் தொடங்கிய பின்னர், போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும், அவர்களின் நலன்களை முன்நிறுத்தி முன்னெடுக்கப்படும் இந்தச் செயற்பாடு வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

எங்கள் இனத்துக்காக, அவர்களுக்கு உரிய உரிமை களைப் பெறுவதற்காக, தியாகங்கள் பலவற்றையும் செய்த முன்னாள் போராளிகள், போரில் உயிரிழந்த போராளிகளின் உறவுகள் மற்றும் தடுப்பில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் பொருளாதார நிலையை, மேம்படுத்தும் குறிக்கோளுடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை காலத்தின் தேவை என்பதில், இரண்டு கருத்துக்கள் இருக்க நியாயமில்லை.

மேற்படி திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை 12,676 பேரின் படிவங்கள் கிடைத்திருப்பதாக அமைச்சர் தகவல் வெளியிட்டுள்ளார்.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், போரில் உயிரிழந்த போராளிகளின் குடும்பங்கள் மற்றும் தடுப்புக் காவலில் உள்ள அரசியல் கைதிகள் என இவர்கள் மூன்று தரப்புக்களாக வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.

பாதிப்புற்ற மக்களுக்கு உதவுவதற்கு வட மாகாண சபையின் நிதியிலிருந்து தமது அமைச்சினால் 43 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தடுப்புக் காவலில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளில் முழுப்பேருமே, இந்த ஆண்டுக்கான உதவித் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கி றார்கள்--

இந்த நலத்திட்டத்துக்கு புலம் பெயர்ந்து வாழும் எமது உடன் பிறப்புகளும் உதவ முன்வந்துள்ளனர். இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் மனித நேயத்துடன் உதவ விருப்பம் தெரிவித்துள்ளன--

முன்னாள் போராளிகள், அவர்களின் குடும்பங்களில் பலரும் இன்னமும் விண்ணப்பிக்கவில்லை என்று அமைச்சர் டெனீஸ்வரன் கவலை தெரிவித்தமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

அத்தோடு, கிராம அலுவலர்கள், சம்பந்தப்பட்ட சங்கங்கள் விண்ணப்பங்களை உறுதிப்படுத்துவதற்குப் பின்னடிப்பதை மாகாண அமைச்சர் கவலையுடன் தொட்டுக்காட்டி உள்ளார்.

முன்னாள் போராளிகள், அரசியல் கைதிகளின் குடும்பத்தினர் இனிமேல் ஏனையோரிடம் கைஏந்தாமல் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்ற மனிதநேய உணர்வுடன் அமைச்சர் டெனீஸ் வரன் செயற்பட முன்வந்திருப்பதும் இங்கு ஊன்றித் தொட்டுக் காட்டப்பட வேண்டிய ஒன்றும், பாராட்டப்பட வேண்டிய ஒன்று மாகும்.

முன்னாள் போராளிகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும் என்று யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அண்மையில், வடக்குக்குப் பயணம் செய்திருந்த ஆஸ்திரேலியத் தூதுவர் ரொபின் ரூடியிடம் வலியுறுத்திக் கூறியிருந்ததும் ஞாபகப்படுத்த வேண்டிய ஒன்றாகும்.

அதனைக் கொழும்பு அரசு கவனத்தில் கொண்டு செயற்படுவதற்கான எந்த அசுகையும் இதுவரை இருந்ததில்லை. இப்போது அது கலைந்துபோய்விட்டது.

ஆகையால், கொழும்பு அரசின் வழுவல், நழுவல் போக்கை, அக்கறை அற்ற நிலைப்பாட்டை மனதில் கொண்டு, வடக்கு மாகாண அமைச்சர் முன் எடுத்துள்ள வரவேற்கப்பட வேண்டிய இந்தப் பணி மேல் உயரட்டும்.

பாதிப்புற்ற மக்களின் ஒத்துழைப்பும், ஏனையோரின் பங்களிப்பும் மிகப் பெரிய அளவில் ஓங்கி உயர வேண்டிய வேளை இது.



# தனது விசுவாசிகளையே நோகடிக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ

வந்தியத்தேவர்

நாட்டுமக்களால் தோல்வி நிலைக்குத் தள்ளப்பட்டபோதும் மஹிந் தவின் சர்வாதிகார நடவடிக்கைகள் தணிந்ததாக இல்லை. இப்போது அவர் தன்னைச் சார்ந்த விசுவாசிகளிடமே தனது அதிகாரத்தைக் காண்பிக்கத் தொடங்கி விட்டார்.

குற்றவாளிகளைப் பாதுகாத்து, கட்சியில் இடங்கொடுத்து வேட்பாளர்களாக நிறுத்திவிட்டு இப்போது மீண்டும் ஒரு மோதல் நிலைக்குள் சிக்கிக் கொண்டுள்ளனர் ஜனாதிபதி மைத்திரியும் – மஹிந்தவும். சுதந்திர முன்னணி வெற்றி பெற்றாலும் மஹிந் தவுக்குப் பிரதமர் பதவி வழங்க முடியாதென்பது மைத்திரியின் அறிவிப்பு. இந்த அறிவிப்பு மஹிந்தவின் விசுவாசிகளுக்குக் கொதிப்பை உண்டுபண்ணியுள்ளது. ஜனாதிபதி மைத்திரியின் அனுமதியின்றி கட்சியின் குழுக் கூட்டத்தைக் கூட்ட முடியாதென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை மஹிந்தவுக்கு எரிச்சலை உண்டு பண்ணியுள்ளது. பிரதமர் பதவிக்கு நியமிக்க மாட்டேன் என்ற மைத்திரியின் அறிவிப்புக்கு உரிய பதிலை அநுராதபுரத்தில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் தெரிவிப்பதாக மஹிந்த கடுப்பேற்றியுள்ளார். ஏற்கனவே சுதந்திரக்கட்சி நிர்வாகத்தினருக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் இருந்து வந்த முரண்பாடுகள் இப்போது தீவிர மடைந் துள்ளன.

நாட்டுமக்களால் தோல்வி நிலைக்குத் தள்ளப்பட்டபோதும் மஹிந்தவின் சர்வாதிகார நடவடிக்கைகள் தணிந்ததாக இல்லை. இப்போது அவர் தன்னைச் சார்ந்த விசுவாசிகளிடமே தனது அதிகாரத்தைக் காண்பிக்கத் தொடங்கிவிட்டார். தனது அதிகார ஆட்டத்தைக் காட்ட முனைந்துவிட்டார். துமிந்த சில்வாவுக்கு வேட்பு மனுவை வழங்குமாறு கூறி சுசில் பிரேம ஜயந்தவுக்கு கன்னத்தில் பளார் என்று ஓர் அறை விட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இதனால் சுசிலுக்கு மனமுறிவு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. மஹிந்தவுடன் எந்த ஓர் உடன்பாடும் இல்லை. எதிர்வரும் தேர்தலில் அவரது தோல்வி நிச்சயம் என மைத்திரி கூறிய அதேவேளை மஹிந்தவின் வாக்குகள் பிரிக்க முடியாதவை. மைத்திரியின் வாக்குகள் பிரிந்து விட்டன எனவும் மஹிந்தவுக்குப் பெரும் வெற்றி கிடைக்கும் எனவும் வாலை ஆட்டிக் கொண்டிருந்த சுசில் கன்னத்தை வருடிக்கொண்டு ஒதுங்கியிருப்பது தான் உகந்தது. இவருக்கு இந்த நிலை என்றால், வாசுதேவ நாணயக்கார பாவம், தனக்கு ஏழு இடங்கள் கிடைக்கும் என எதிர்பார்த்தவருக்கு ஒரேயொரு இடம்மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் குழப்பத்துக்கு உள்ளாகி இருக்கும் வாசுவும், வருத்தப்பட்டு மஹிந்த பாரம் சுமப்பதும் நியாயமானது எனக் கூற முடியாது. அவர் தன்னை ஒரு இடது சாரியாகக் காட்டிக் கொண்ட போதும் இலங்கையைப் பொறுத்த அளவில் இன்று இடதுசாரிகள் என்று எவருமே இல்லை. எல்லோருமே இனவாதிகள் என்றாகிவிட்டனர்.

ஜனாதிபதி மைத்திரியின் நடவடிக்கைகள் இப்போது ஆரம்பமாகி விட்டதால் தேர்தலில் சறுக்கி விடுவோமா என மஹிந்த கவலை கொண்டுள்ளார் போல் தெரிகின்றது. ஜனாதிபதி மைத்திரியின் உரையே மஹிந்தவைப் பாதிப்படைய வைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. அவர் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதனைக் கட்டுப்படுத்த மனநல மருத்துவர் உடனிருப்பதாகவும், போதாக்குறைக்கு இந்தியாவைச் சேர்ந்த யோகா தியான ஆலோசகர் ஒருவரைத் தருவிக்க குடும்பத்தினர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிகின்றது.


ஜனாதிபதித் தேர்தலில் அடைந்த தோல்விக்குப்பின்னர் அவர் மிகவும் தடுமாறிப் போயுள்ளார். விகாரைகள் எல்லாமுமே அரசியல் மேடையாகத் தெரிந்துள்ளது. சிறுபான்மை இனங்களெல்லாம் வேற்றுக்கிரகத்துப் பிராணிகளாகவும் தமது பதவியைப் பறிக்க வந்த ஜந்துக்களாகவுமே புலப்பட்டது. இதனால் என்ன செய்கிறேன், ஏது சொல்கிறேன் என்று உணரமுடியாமல் அரசுக்கு எதிராகச் செயற்பட்டும் சிறுபான்மை மக்களை விரோதிகளாகக் கொண்டும் தனது விசுவாசிகளான மோசடிக் கும்பல்களுடன் இணைந்து காட்டுத் தர்பாரை ஏற்படுத்தும் மனநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். அந்தத் தளர்வின் வெளிப்பாடே சுசில், வாசுதேவ ஆகியோருக்குக் கிடைத்த கௌரவம். எந்த நேரம் எப்படியாவார் என்பது தெரியாததால் உடனிருக்கும் மோசடிக் கும்பல்களும் பயத்துடனேயே தேர்தலை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். தேசிய பாதுகாப்புக்கு தான் முன்னுரிமை வழங்கப்போவதாக அவர் கூறுகின்றார். சிறுபான்மை மக்களையும் ஜனநாயகத்தையும் ஒழித்துக்கட்டுவதே அவர் அகராதியில் தேசிய பாதுகாப்பு என்பதன் அர்த்தமாகும்.

தன்னுடைய பதவிக்காலம் முடிந்து நிம்மதியாகவும் மகிழ்ச்சியுடனும் எதிர்காலம் அமையக்கூடியதான ஓய்வு அவருக்கு முக்கியம். தேர்தலின்பின் நிகழ்ந்த சம்பவங்கள் அவருக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தாத வகையில் சமாளிக்கப்பட்டதை அடுத்து மெதமுலனக்குச் சென்ற மஹிந்தவை, போதுமடா சாமி என்று அமைதியாக இருக்க விடாமல் மீளவும் அரசியலுக்கு வாருங்கள் என வற்புறுத்தி இழுத்து வந்தவர்கள் விமல் வீரவன்ஸ, உதயகம் மன்பில, தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார என்று ஒரு மோசடிக் கும்பலே இந்த மோசடிக் கும்பல்களின் பலிக்கடாவாக மாறிவிட்டார் மஹிந்த என்பது பெருமளவு மக்களின் கருத்தாக உள்ளது. தேர்தலில் இரு சாராரும் வெற்றி நமதே என்ற களிப்பில் மிதந்த கொண்டுள்ளனர். பிரத மராவேன் என அடித்துக் கூறிய மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதில் தளர்ந்து போன நிலையே காணப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, அவரது அணுகுமுறைகள் எல்லாவற்றையுமே மஹிந்த வென்றுவிடுவார் என்பதற் கில்லை. தற்சமயம் முன்னரிலும் பார்க்க வெற்றி இப்போது குறைத்து மதிப்பிடப்படுவதே நிலைமை. சகோதரர் பஸில் ராஜபக்ஷ கூறியது போன்று ஒரு சிலரின் தேவையைப்பூர்த்தி செய்யும் நோக்கில் முழு நாட்டையுமே அதல பாதாளத்தில் தள்ளியுள்ளார். வேறு நபர்களது தனிப்பட்ட நோக்கங்களுக்காக மஹிந்த தேர்தலில் களமிறங்கினால் அது அவரையே பாதிக்கும்.

உதயன்

# வாக்குறுதியை மீறியதன் காரணமாக ஜனாதிபதிக்கு கட்சிக்குள் எதிர்ப்பு



**செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே சிறிலங்காவின் அரசியற் தலைமையின் நோக்கமாகும்.**

பத்து ஆண்டுகளாக நாட்டை ஆட்சி செய்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார். ஆனால் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இவர் மீண்டும் போட்டியிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டமையானது, சிறிலங்காவின் அரசியலில் திருப்பம் ஒன்று ஏற்படுவதற்கான அறிகுறியாகும்.

சிறிசேனவால் தோற்கடிக்கப்பட்டு ஆறு மாதங்களின் பின்னர் மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ ஓகஸ்ட்டில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சியின் தலைவராக போட்டியிடவுள்ளதானது சிறிலங்காவின் அரசியலில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்னமும் ஐந்து வாரங்களில் சிறிலங்காவின் நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இங்கு அரசியற் சூழல் மீண்டுமொரு தடவை மாற்ற முற்றுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் சிறிலங்காவின் அரசியலில் பெரிய தொரு மாற்றம் ஏற்பட்டிருந்தது.

கடந்த மாதம் 26ஆம் திகதி சிறி லங்காவின் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாக அதிபர் சிறிசேன அறிவித்திருந்தார். அத்துடன் நாடாளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் 17 அன்று இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. செப்ரெம்பரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே சிறிலங்காவின் அரசியற் தலைமையின் நோக்கமாகும்.

இந்தவகையிலேயே நாடாளுமன்றத் தேர்தலை அவசர அவசரமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் சிறிலங்காவின் இறுதிக் கட்ட போரின் போது இழைக்கப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு அறிக்கையிடப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையானது சிறிலங்காவில் இடம்பெற்ற போருக்குத் தமது ஆதரவை வழங்கிய சிங்களப் பெரும்பான்மைச் சமூகத்தின் மத்தியில் அதிருப்தியை உண்டுபண்ணும். அத்துடன் சிங்கள சமூகத்தவர்களின் இந்த நிலைப்பாடானது சிறிலங்கர்வின் உள்விவகாரங்களில் வெளிச்சக்திகளின் தலையீடு இடம்பெறக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருந்த ராஜபக்ஷவின் கருத்துக்கு மேலும் பலம் சேர்க்கும்.

சிறிலங்காவின் தற்போதைய அதிபர் சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் நாடாளுமன்றத்தில் அரசியல் சீர்திருத்தத்தை மேற்கொள்வதற்கான பலமான உந்துதலை வழங்கக் கூடிய நிலையிலில்லை.

விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியானது தற்போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றில் மொத்தமுள்ள225 மொத்த ஆசனங்களில் 40 ஆசனங்களை மட்டுமே கொண்டிருந்தது. ஆனால் ராஜபக்ஷவின் விசுவாசிகள் இந்த நாடாளுமன்றில் பலமான ஓர் இடத்திலிருந்தனர்.

இதனால் சிறிசேனவால் முன்வைக்கப்படும் எந்தவொரு அரசியற் சீர்திருத்தத்தையும் எதிர்த்து நிற்கக் கூடிய சக்தியை ராஜபக்ஷவின் விசுவாசிகள் கொண்டிருந்தனர். இவர்கள் தமக்கான பலத்தைப் பயன்படுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்திருந்தனர்.

சிறிசேனவால் தலைமை தாங்கப்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் ராஜபக்ஷ போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து சிறிலங்காவின் அரசியலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த ஜனவரி யில் இடம்பெற்ற தேர்தலில் சிறிசேன அதிக வாக்குகளைப் பெற்று ராஜபக்ஷவைத் தோற்கடித்திருந்தார்.

சிறிசேன, ராஜபக்ஷவின் நெருங்கிய கூட்டாளியாகவும், ராஜபக்ஷவின் அரசில் பிரதான அமைச்சுப் பதவியையும் வகித்திருந்தார். ஆனால் கடந்த அதிபர் தேர்தலில் சிறிசேன பிரதான எதிர்க்கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டு தேர்தலில் களமிறக்கப்பட்டார். இதற்கு எதிர்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து கூட்டணி ஒன்றை உருவாக்கி யிருந்தன.

இவ்வாறானதொரு அரசியற் பின்னணியின் மூலம் சிறிலங்காவின் அதிபராகிய சிறிசேன தற்போது ராஜபக்ஷவுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளார்.

மேலும் ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்க மறுப்பதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் சிறிசேன உறுதியாக இருந்தார். இதனாலேயே இவர் தற்போது ராஜபக்ஷவுக்கு வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான அனுமதியை வழங்கியுள் ளார்.

எனினும் ராஜபக்ஷவைப் புறக்கணித்து சிறிசேனவுடன் கூட்டணி வைத்திருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு சிறிசேனவின் இந்த நடவடிக்கை பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ராஜபக்ஷவுக்கு வேட்பாளர் நியமனத்தை வழங்க மறுத்ததன் மூலம் சிறிசேன ஐ.தே.க விசுவாசியாக மாறிவிட்டதாகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செழுமையை மழுங்கடித்து விட்டதாகவும் சிலர் குற்றம் சுமத்தியிருந்தனர்.

தென்சிறிலங்காவில் பெரும்பான்மை சமூகத்தவர்கள் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கின்றனர். நீண்ட காலம் தொடர்ந்த போரை வெற்றி கொண்டு தமிழீழ விடு தலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சிங்களவர்கள் ராஜபக்ஷ மீது தமது ஏகோபித்த ஆதரவை வழங்கி வந்துள்ளனர்.

கடந்த ஜனவரித் தேர்தலில் ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட பின்னர், அவரை மீண்டும் அரசியலுக்குக் கொண்டு வருவதற்காக ராஜபக்ஷவின் விசுவாசிகள் பல்வேறு ஆர்ப்பாட்டப் பேரணிகளை மேற்கொண்டனர். இந்த நிலையில் ராஜபக்ஷ, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் போட்டியிடுவதானது அரசியல்வாதிகள் பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

எதிரணியின் கூட்டுக்கட்சி ஒன்றின் மூலமே சிறிசேன அதிபர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கினார். இதன்போது ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட மாட்டாது என வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனாலும் இதனை சிறிசேன மீறிவிட்டதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர்.

ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் மிகமெதுவாகவே மேற்கொள்ளப்படுகின்றன. ராஜபக்ஷவின் சகோதரர்களுக்கு எதிரான ஊழல் மோசடிகள் ராஜபக்ஷவின் ஆதரவு வாக்குகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தும் எனவும் எதிர்வு கூறப்படுகிறது.

குறிப்பாக தென்சிறிலங்காவைச் சேர்ந்த கிராமியச் சிங்களவர்களின் அதிகளவான வாக்குகளை ராஜபக்ஷ இழக்க நேரிடலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தான் எவ்வாறான நகர்வை முன் னெடுக்க வேண்டும் என்பதை சிறிசேன அரசு மிகக் கவனமாகத் தெரிவு செய்திருந்தது. ஆனால் விசார ணைகளுக்கான காலம் இழுத்தடிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது இடம்பெறவுள்ள தேர்தலில் ராஜபக்ஷ, பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான வாய்ப்பையோ அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பையோ சிறிசேன வழங்கவில்லை.

சிறிலங்காவின் அரசியல் யாப்பின் பிரகாரம், பிரதமரை நியமிக்கும் அதிகாரத்தை சிறிலங்கா ஜனாதிபதி கொண்டுள்ளார். சிறிலங்காவின் நாடாளுமன்றத் தேர்தலில் மிகப் பெரிய அரசியற் கட்சிகள் தமது சொந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசியற் களத்தில் வெளிப்படையாகப் போட்டியிடு வதற்கான உரிமையைக் கொண் டுள்ளன.

இதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதமர் போன்றோர் தெரிவு செய்யப்படுகின்றனர்.

சிறிலங்காவில் கடந்த ஆறு மாத காலமாகச் செயற்பட்ட சிறிசேன ரணில் கூட்டு அரசை இந்தியா வரவேற்றிருந்தது. சிறிலங்காத் தமிழர்களுடன் அரசியல் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துமாறு இந்தியா, ராஜபக்ஷ மீது அழுத்தம் கொடுத்த போதிலும் அதனை ராஜபக்ஷ இறுதி வரை நிறைவேற்றவில்லை.

இந்த நிலையில் ராஜபக்ஷவின் தேர் தல் தோல்வியானது இந்தியாவுக்கு சாதகமான ஒரு வாய்ப்பை வழங்கியது. இதனால் சிறிசேன–ரணில் அரசாங்கத்தை இந்தியா வரவேற்றது. இந்தியாவைப் புறக்கணித்த ராஜபக்ஷ சீனாவைத் தனது நெருங்கிய அரசியல் மற்றும் பொருளாதாரக் கூட்டாளியாக இணைத்துக் கொண்டார்.


அத்துடன் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் சிறிலங்காத் துறைமுகத்தில் தரித்து நிற்பதற்கான அனுமதியையும் ராஜபக்ஷ வழங்கியிருந்தார். சிறிசேன அதிபராகப் பதவியேற்றுக் கொண்டதன் பின்னான காலப் பகுதியில் இந்திய–சிறிலங்கா உறவு மீண்டும் நெருக்கமடைந்துள்ளது. கடந்த ஆறு மாத காலப் பகுதியில் சிறிலங்கா ஜனாதிபதி, இந் தியப் பிரதமர் நரேந்திர மோடி, இரு நாடுகளின் வெளியுறவு அமைச் சர்கள் பரஸ்பரம் இரு நாடுகளுக்கும் தமது சுற்றுப் பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்தியா மற்றும் சீனாவுடன் சிறிசேன அரசு ஒரு நடுநிலையான உறவுநிலையை மீளவும் உருவாக்குவதற்காக எடுத்துக் கொண்ட நகர்வுகள் இந்தியாவுக்கு பெரும் ஆறுதலை அளித்துள்ளது.

எனினும், சிறிலங்காவுக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவுடன் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஆணையகத்தில் சந் திப்பொன்றை மேற்கொண்டிருந்தார். சிறி லங்காவின் முக்கிய அரசியற் தலைவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதில் தான் ஆர்வமாக உள்ளதாக மோடி தெரிவித்திருந்தார்.

இதேபோன்று, பங்களாதேசின் முன்னாள் பிரதமர் பேகம் காலிடா சியாவையும் மோடி தனது டாக்காவுக்கான பயணத்தின் போது சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியிருந்தார். தனது அயல் நாடுகளான நேபாளம், பங்களாதேஸ், மாலைதீவு போன்ற நாடு களின் அரசியற் சக்திகளுடன் பரந் தளவிலான உறவைப் பேண வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது.

*நன்றி:புதினப் பலகை*



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 5 | 6 | | | | 3 |
| | 7 | | 1 | | | | | 9 |
| 5 | | | | 3 | | 1 | 6 | |
| | | 9 | 7 | | 1 | | 1 | |
| | 4 | | | | | | 9 | |
| | 5 | | | | 3 | 7 | | |
| | 3 | 7 | | 1 | | | | 5 |
| 2 | | | | | 5 | | 3 | |
| 1 | | | | 2 | 4 | | 7 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களை யும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங் கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டி யதே வேலை. சுடோக்கு என் பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

வாழ்நாள் முழுவதும் நோயில்லாத ஆரோக்கியமான வாழ்க்கை வாழவே அனைவரும் விரும்புவார் கள். அதற்கு எம்முடைய உணவுப் பழக்கவழக்கங்கள் சரியான முறையில் இருக்க வேண்டும். சரியான உணவு முறைகள் என்பது உணவுகளை சரியான அள வில் எடுத்துக் கொள்வது என்றாகாது. சரியான உணவு வகைகளை சரியான முறைகளில் சமையல் செய்து சரியான அளவில் எடுத்துக் கொள்வதே சரியான உணவுமுறைஆகும். உணவுப்பொருள்களை சமைக் கும் போது அன்றாட தேவையைக் கருத்தில்கொண்டு சமையலறைக்கு பயன்படுத்தும் எண்ணெய், சர்க்கரை மற்றும் நெய் போன்ற அதிக கலோரி தரக்கூடிய பொருள் களைக் குறைத்துக் கொள்வது நல்லது. மேலும் நார்ச் சத்து மிகுந்த காய்கறிகளை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும், எண்ணெயில் பொரித்த உணவு களைத் தவிர்ப்பது நலம். நீராவியில் வேகவைத்த காய்கறிகளைச் சாப்பிடலாம், நீர் அல்லது நீராவியில் வேகவைத்த மீன், ஆடு மற்றும் கோழி இறைச்சி போன்றவற்றை சரியான அளவில் தினமும் எடுத்துக் கொள்வது உடலில் கொழுப்பின் அளவை அதிகரிக் காமல் இருக்கச் செய்யும். உணவுப் பொருள் களில் ஏற்படும் விற்றமின்களின் இழப்பு என்பது காய்கறிகளை நறுக்கி அவற்றை தண்ணீரில் கழுவும் போதே தொடங்குகிறது. எனவே நீரில் கரையும் விற்றமின்களின் இழப்பைத் தடுக்க காய்கறிகளை நறுக்கியபின் கழுவதைவிட, அதற்கு முன்பாகவே கழுவி அதன் பின்னர் நறுக்க வேண்டும். அதேபோன்று காய்கறிகளை மிகச் சிறிய துண்டுகளாக நறுக்கக் கூடாது. மேலும் உணவுப் பொருள்களை நீண்ட நேரம் வேகவைப்பதையும் தவிர்க்க வேண்டும்.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....




## கருணை என்பது சொக்கத்தைப் போன்றது

கோபப்படும் மனிதனால், தான் செய்யும் பணியை அதிக அள விலோ அல்லது சிறப்பாகவோ செய்ய முடியாமல் போய் விடும். ஆனால், அமைதியானவனோ சிறப்பாகப் பணியாற்றுவான்.
மன்னிக்கக் கூடியதும், சமநோக்குடையதும், நிலை தடுமாறா ததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.
க்ருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க்கத்தில் மகிழ்ந்திருப்போம்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 50 | 60–80 | 60 | 40 | 35 |
| கத்தரி | 60 | 60 | 60 | 50 | 40–60 | 40 | 50 | 20 |
| கரட் | 140 | 130 | 240 | 120 | 120–140 | 240 | 240 | 200 |
| மரவள்ளி | 60 | 50 | 50 | 40 | 60 | 60 | 60 | 45 |
| பயிற்றை | 90 | 80 | 80 | 80 | 80–100 | 80 | 120 | 110 |
| பாகல் | 120 | 160 | 120 | 140 | 120–140 | 200 | 120 | 130 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 100 | 80–100 | 120 | 120 | 85 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 80 | 90 | 100–120 | 100 | 120 | 80–90 |
| சி.வெங்காயம் | 160 | 140 | 150 | 180 | 120–140 | 200 | 160 | 120–140 |
| பூசணி | 30 | 30 | 30 | 30 | 20–30 | 40 | 60 | 20–25 |
| தக்காளி | 150 | 140 | 120 | 120 | 120–140 | 160 | 120 | 100 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 40–60 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 05 | 15–20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 350 | 400 | 500 | 360 | 350–400 | 300 | 500 | 350 |
| புடோல் | 60 | 60 | 50 | 50 | 40–60 | 80 | 80 | 70 |
| கோவா | 80 | 100 | 60 | 80 | 100–120 | 100 | 100 | 80 |
| வெண்டி | 100 | 80 | 70 | 60 | 80–120 | 120 | 120 | 70 |
| போஞ்சி | 160 | 170 | 200 | 180 | 160–180 | 200 | 200 | 140 |
| லீக்ஸ் | 100 | 140 | 120 | 120 | 120–140 | 200 | 120 | 130 |
| தேங்காய் | 50 | 35–40 | 60 | 40–50 | 40–60 | 50 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 70–80 | 90–100 | 80 | 120 | 90–100 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 60–80 | 60–70 | 80 | 100 | 50–60 |
| வல்லாரை | 25 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 140 | 140 | 120 | 160 | 260–270 | 200 | 220 | 170 |
| இராசவள்ளி | 120 | 120 | – | – | 80–100 | 130 | 160 | 80–90 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 160 | 220 | 200–250 | 200 | 200 | 130 |

ஞானச்சுடர்



## இளமையிற் கல்

மனித வாழ்க்கையின் மிக முக்கிய பருவம் இளமைப் பருவம். முழு வாழ்க்கை கும் அச்சாணி போன்றது இளமைப் பருவம். இந்தப் பருவத்தைத் தொடர்ந்து வருகின்ற இல்வாழ்க்கைக் காலத்தில், வாழும் முறை அறிந்து குடும்பம் நடத்த வும், மன்னுயிர் ஓம்பவும், அதன்பின் முதுமை, மூப்புக் காலங்களில் வாழ்க்கை நெறி உணர்ந்து நிறைவு கொள்ளவும் தேவையான அறிவு, ஆற்றல்கள், மனப் பாங்கு, விழுமியங்கள், அனுபவங்கள் ஆகிய சகல வற்றையும் இந்த இள மைப் பருவத்தில் பெற்றுக் கொள்ள நாம் கற்ற கல்வி உதவுகிறது.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 800 | 700 | 700 | 600 |
| நண்டு | 350 | 400 | 400 | 350 | 300 | 450 |
| கணவாய் | 650 | 600 | 700 | 500 | 600 | – |
| பாரை | 600 | 600 | 600 | 600 | 600 | 400 |
| சுறா | 650 | 500 | 600 | 650 | 700 | 500 |
| சீலா | 300 | 500 | 500 | 400 | 600 | – |
| விளை | 700 | 400 | 400 | 500 | 600 | 400 |
| முரல் | 350 | 400 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 450 | 400 | – |
| கிழாக்கன் | 650 | 750 | – | 500 | 400 | – |
| ஓரா | 400 | 400 | 400 | 400 | 400 | 400 |
| திரளி | 250 | 300 | 220 | 300 | 200 | 300 |
| நகரை | 200 | 300 | 200 | 300 | 200 | 350 |
| ஆடை | 150 | 200 | 200 | 120 | 200 | 100 |
| ஒட்டி | 250 | 300 | 250 | 300 | 300 | 300 |
| திருக்கை | 150 | 350 | 250 | 300 | 300 | 180 |
| பாலை | 400 | 300 | 350 | 400 | – | – |
| வாளை | 100 | 200 | – | 300 | 300 | – |
| கொய் | 100 | 150 | 60 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 280 | 200 | 250 |

## நாளை

ஆடி-02 சனிக்கிழமை
18.07.2015

திதி: துதியை மு.ப. 09.20 வரை
நட்சத்திரம்: பூசம் பி.ப.05.27 வரை
றம்ழான் பண்டிகை

சுபநேரம்: 03.00-04.30 வரை
இராகுகாலம்: 09.00-10.30 வரை

சோபனா

# மனமகிழ்ச்சியைத் தரும் ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம்

ஆடிப்பிறப்பு என்பது தமிழ் இந்துக்கள் வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு தினமாகும். ஆடிப்பிறப்பு என்றவுடன் ஞாபகத்துக்கு வருவது ஆடிக் கூழும், நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' என்ற பாடலும் தான்.

யாழ்ப்பாண மக்களின் தனித்துவமான கலாசாரக் கொண்டாட்டங்கள் பல உள்ளன. அதில் மிக முக்கியமானதும் தனித்துவமான தும் ஆடிப் பிறப்பே ஆகும். தொன்று தொட்டே ஆடிப் பிறப்பைக் கொண்டாடும் ஒரு சமுதாயமாக யாழ்ப்பாண மக்கள் உள்ளனர். அந்தளவுக்கு ஆடிமாதத்தின் சிறப்புப் பண்டைய யாழ்ப்பாணத்து மூத்த குடியினரால் கொண்டாடப்பட்டுள்ளது.

அதில் சிறப்பான அம்சமும், பெருமைப்படவேண்டிய அம்சமும்



என்னவென்றால், பண்டைய காலங்களில் இருந்து இன்று வரை யாழ்ப்பாண மக்கள் தமது பாரம்பரியங்களையும், சம்பிரதாயங்களையும், அத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் கைவிடாது கைக்கொண்டுவருவதே ஆகும்.

தமிழ்நாட்டு தமிழர்கள் கூட ஆடி மாதம் வந்துவிட்டால் பெரும்பாலும் அம்பாள் கோயில்களில் கூழ் ஊற்றல் என்ற சடங்கை செய்துவருகின்றனர். யாழ்ப்பாண மக்களைப்போல தமிழில் ஆடிமாதம் முதலாம் நாளில் தமக்கே உரிய வகையில் அந்த நாள் மட்டும் சமைக்கும் இனிப்பு கூழ்பற்றி அவர்கள் அறியமாட்டார்கள்.

பனங்கட்டி, கருப்பணி மற்றும் தேங்காய் என்று வடக்கு– கிழக்கில் தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கும் உணவு வகைகள் ஆதிக்கம் செலுத்தும் தனித்துவமான பண்டிகை இது பனங்கட்டி, தேங்காய் துண்டுகள் கலந்த மாவின் சுவை சொட்டும் கூழ். சர்க்கரையின் (வெல்லம்) தித்திப்புடன் கொழுக்கட்டை இவையிரண்டும் ஈழத்தமிழர்களின் (சைவமக்களின்) வீடுகளில் ஆடிப்பிறப்பன்று தவறாது இடம்பிடிக்கும் உணவுகள். குறிப்பாக சிறுவர்கள் கூழ் குடிப்பது அதற்குள் மிதக்கும் தேங்காய் துண்டுகளின் ருசிக்காக.

சரி, பண்டைய யாழ்ப்பாணத்து ஆதிக்குடியினர் ஏன் ஒரு மாதத்தின் தொடக்க நாளை இப்படி கொண்டாடுகின்றார்கள் என்ற கேள்வி எழுவது நியாயமே. ஆனால் எந்த சமய சம்பிரதாய நூல்களிலோ அல்லது மத அனுஷ்டானங்களிலோ இந்த ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம் பற்றிய எந்த ஒரு தக வலும் தரப்படவில்லை. அந்த நிலையில் யாழ்ப்பாணத்து மக்கள் ஏதோ ஒரு காரணத்தை மைய மாக வைத்தே இந்த ஆடிமாத முதல் திகதியில் ஆடிப்பிறப்பைக் கொண்டாட முற்பட்டுள்ளனர்.

நாம் அறிந்த வகையில் ஆடிமாதத்தின் சிறப்பை எடுத்துப்பார்த்தால், ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும் என்ற பழமொழிக்கேற்ப, யாழ்ப்பாணத்தின் மீது தென்மேல் பருவப் பெயர்ச்சிக்காற்று பலமாக வீசும் காலம் இது. யாழ்ப்பாணத்தை நோக்கித் தெற்கில் இருந்து வடக்காக காற்று வீசும். இந்தக்காலத்திலே தான் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வர்ண வர்ணமாக, வித விதமான வகையில் பல பட்டங்களை கட்டி வானில் பறக்கவிட்டு மகிழ்வார்கள்.

அதேபோன்று பண்டைய நாள்களில் யாழ்ப்பாணத்தில் ஆடி மாதத்தில் பெரும்பாலும் விழாக்கள், களியாட்ட விழாக்கள் எல்லாம் நடந்ததாக மூதாதையர்களின் கதைவழியாக நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். அடுத் ததாக 12 மாதங்களைக் கொண்ட ஒரு வருடத்தில் முதல்பாக அரையாண்டு முடிவடைந்து அடுத்த பாகம் தொடங்கும் நாள் ஆடி முதலாம் நாள் என்றபடியால், இந்த நாளையும் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம் எனக்கருதப்படுகின்றது.

அதாவது தை மாதம் முதலாம் நாள் எவ்வாறு தைப்பொங்கல் எனக் கொண்டாடிப் பொங்கல் செய்து படைத்துக் கொண்டாடுகிறார்களோ அதைப்போல, ஆடிமாதம் முதலாம் நாளையும் கொண்டாட அவர்கள் தலைப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது ஒருபுறமிருக்க முதல்பாக ஆண்டு தேவர்களுக்குரியதென்றும், அடுத்த பாதி ஆண்டு பிதிர்களுக்கு உரியதென்றும் கூறப்படும் ஒரு ஐதீகமும் இருப்பதன் காரணத்தினால், இனிப்பான கூழும், கொழுக்கட்டையும் செய்து பிதிர்களுக்கு படைத்தனர் எனவும் ஒரு கருத்து நிலவி வருகின்றது.

எது எப்படியோ, யாழ்ப்பாணத்தில் ஆடிமாதம் என்பது ஒரு மகிழ்ச்சியானதொரு மாதமாகவே இருக்கும். ஏனெனில் காற்றில் பட்டங்கள் விடுவதாலும், யாழ்ப்பாணத்தின் மக்கள் விழா எனக்கருதக்கூடிய நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந் திருவிழா உற்சவம் இந்த மாதம் முழுமையாக இடம்பெறுவதாலும், அதன் காரணமாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளி இடங்களுக்குச் சென்றவர்கள் ஒன்று கூடும் காலமாக இருப்பதாலும் நவீன காலத்தில்கூட இந்த மாதம் யாழ்ப்பாணத்துக்கு மகிழ்வான காலமாகவே இருக்கின்றது.

ஒரு காலத்தில் ஆடிப்பிறப்பு எப்படி கொண்டாடப்பட்டது என்பதையும். அதன் முதல்நாளே நாளைய ஆடிப் பிறப்பு பற்றி சிறுவர்கள் எய்தும் மகிழ்வையும் மையமாக வைத்து நவாலி யூர். சோமந்தரப்புலவர் என்ற யாழ்ப்பாணத்துப் புலவர்



ஒருவர் பாடியுள்ள பாடலில் இருந்து தெரியவருகின்றது. இதிலிருந்து ஒரு காலத்தில் ஆடிப்பிறப்புக்கு யாழ்ப்பாணத்தில் விடுமுறை விடப்பட்டுள்ள வரலாறும் புலப்படுகின்றது.

*ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்த மானந்தம் தோழர்களே!*
*கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!*

என அந்தப்பாடல் வரிகள் ஆரம்பிக்கின்றன. இந்தப்பாடலின் சிறப்பு என்னவென்றால், ஆடிப்பிறப்புக்கு கூழ் எப்படி ஆக்குவது என்ற செயன்முறையையும் இரசிப்புடன் புலவர் பாடலிலேயே தெரிவித்துள்ளமை தான். எனவே யாழ்ப்பாண மக்கள் ஆடிப்பிறப்புக்கு வழங்கியிருந்த முக்கியத்துவம் அந்தப் பாடலில் இருந்து புலனாகியிருக்கும்.

தை மாதப் பிறப்பை தைப்பொங்கலாகக் கொண்டாடுகின்றோம், சித்திரை மாதப் பிறப்பை சித்திரைப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றோம். ஆனால் ஆடிப்பிறப்பை ஏன் கொண்டாடுகின்றோம்? ஏனெனில் இந்துக்களைப் பொறுத்தவரை ஆடி மாதத்தில் எந்த நல்லகாரியத்தையும் தொடங்கமாட்டார்கள்.

ஆடிப்பிறப்பை பண்டிகையாகக் கொண்டாடும் மரபு ஈழத்துக்கே உரியது. (ஆடிப்பெருக்கு தென் இந்தியாவில் பிரபலமானது.) தமிழ் வருடத்தின் மத்திய மாதங்களில் ஒன்றான ஆடி முதலாம் நாள் இந்த ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகின்றது. அதுவும், இலங்கையில் இந்துக்களால் தமிழ் நாள்காட்டியின் ஆடி மாத முதலாம் நாள் ஆடிப்பிறப்பு கொண்டாடப்படுகின்றது. முன்னோர்கள் சூரியனின் வட திசை மற்றும் தென்திசை நோக்கிய வருடத்தின் இருகாலப் பகுதியின் தொடர்புபடும் நாளை கணித்து ஆடிப் பிறப்பு நாளாகக் கொண்டாடி வருகின்றார்கள். இந்து சமயத்தில் இந்த நாள் தேவர்களுடன் தொடர்புபடுத்தி வழிபடப்படுகின்றது. அதாவது தட்சிணாயனம் காலத்தின் தொடக்கதினம் ஆடிமாத முதலாம் நாள் ஆகும். இக்காலத்தில் கோடை கால வெப்பம், காண்டாவனம் என்பவை, தணிந்து குளிர்மை படிப்படியாகவளர்கின்றது.இக்காலத்திலேயே விதை விதைத்தல், மரங்கள் நடுதல் போன்றவை மேற்கொள்ளப்படுகின்றன

ஈழத்தமிழர்களுக்கே உரிய தனித்துவமான பண்டிகையான ஆடிப்பிறப்பு காணாமற் போய்க்கொண்டிருக்கிறது. இன்று ஆடிப்பிறப்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று தமிழ் பகுதியில் கோயில்களின் வழிபாடு பூசைகளுடனும், காய்ச்சப்படும் கூழுடனும் முடிந்து போகிறது. புலம் பெயர்தவர்களில் பலருக்கு இன்று ஆடிப்பிறப்பு என்றால் என்னவென்றே தெரியாது. இது, எம்முடைய தனித்துவ பாரம்பரியத்தை நாம் இலகுவில் எந்தவித குற்றவுணர்வுமின்றி மறக்கின்றோம் என்பதற்கு நல்லதொரு சான்றாகும்.

**பண்டைய யாழ்ப்பாணத்து ஆதிக்குடியினர் ஏன் ஒரு மாதத்தின் தொடக்க நாளை இப்படி கொண்டாடுகின்றார்கள் என்ற கேள்வி எழுவது நியாயமே. ஆனால் எந்த சமய சம்பிரதாய நூல்களிலோ அல்லது மத அனுஷ்டானங்களிலோ இந்த ஆடிப்பிறப்புக் கொண்டாட்டம் என்பது பற்றிய எந்த ஒரு தகவலும் தரப்படவில்லை. அப்படி இருக்க யாழ்ப்பாணத்து மக்கள் ஏதோ ஒரு காரணத்தை மைய மாக வைத்தே இந்த ஆடிமாத முதல் திகதியில் ஆடிப்பிறப்பைக் கொண்டாட முற்பட்டுள்ளனர். நாம் அறிந்த வகையில் ஆடிமாதத்தின் சிறப்பை எடுத்துப்பார்த்தால், ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும் என்ற பழமொழிக்கேற்ப, யாழ்ப்பாணத்தின் மீது தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று பலமாக வீசும் காலம் இது.**

# கெட்டிக்காரப் பொய்கள் அறிவாளியிடம் தோல்வியே காணும்



அன்றைய இதமான காலைப் பொழுதை இரசித்த வண்ணம் சேவல் ஒன்று மரத்தில் அமர்ந்து கூவிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அந்த வழியே பசியுடன் வந்த நரி சேவலைப் பார்த்துவிட்டது. எப்படியாவது அதைக் கீழே இறங்க வைத்து சாப்பிட்டுவிட வேண்டும் என்று எண்ணியது. அதனால் நரி ஒரு தந்திரத்தைக் கையாண் டது. "சகோதரரே, பறவை களுக்கும் விலங்குகளுக்கும் இடையே ஓர் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இனிமேல் அவைகள் தங் களுக்கு இடையே சண்டை போட்டுக் கொள்ளாமல், உடன்பிறப்பு மனப் பான்மையோடு வாழ வேண்டும் என உறுதி எடுத்துள்ளன, நீ கீழே இறங்கி வா, அது பற்றிப் பேசுவோம்" என்றது நரி. சேவல், நரியின் தந்திரத்தைப் புரிந்துகொண்டதால் அதில் அக்கறை காட்டாமல் வேறு பக்கம் தலையைத் திருப்பி எதையோ பார்ப்பது போல் பாவனை செய்தது. உடனே நரி, 'என்ன சகோதரரே, ஏதோ அக்கறையுடன் எதையோ திரும்பித் திரும்பிப் பார்க்கிறீர்' என்று கேட்டது. இல்லை, சில வேட்டை நாய்கள் வருவதுபோல் தெரிகிறது, அவை வேட்டை நாய்கள் தானா என்பதைக் கவனிக்கிறேன் என்றது சேவல். உடனே நரி, சரி சரி, நான் அப்புறம் வந்து பேசுகிறேன் என்று சொல்லிவிட்டுச் சென்றது. அதற்குச் சேவல், 'என்னருமைச் சகோதரா', நாய்களுக்கு ஏன் பயப்படுகிறீர், இப்பொழுதுதானே அமைதி ஒப்பந்தம் பற்றிச் சொன்னீர், நான் கீழே இறங்கி வருகிறேன், நில்லுங்கள்' என்றது. அதற்கு நரி, 'அந்த ஒப்பந்தம் பற்றிப் பலருக்குத் தெரியும், ஆனால் இந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால் எனது கதி என்ன ஆவது? நான் போகிறேன்' என்று சொல்லிவிட்டு வேக மாக ஓடி காட்டுக்குள் சென்று மறைந்தது. கெட்டிக்காரப் பொய்கள் அறிவாளி யிடம் எப்படிப் பலிக்கும்!






# கிளிநொச்சி










இலங்கையின் வடமாகாணத்தில் அமைந்துள்ள ஒரு நகரமாக கிளிநொச்சி விளங்குகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ–9 வீதியில், தெற்காக 68 கிலோமீற்றர் தூரத்திலும் வவுனியாவிலிருந்து வடக்காக 75 கிலோமீற்றர் தூரத்திலும் கிளிநொச்சி உள்ளது. இது வட மாகாண சபையின் நிர்வாகத் தலைமையி டமாக உள்ளது. இம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். வேளாண்மைக்கான நீர் இரணைமடுக்குளத்தில் இருந்தும் விசுவமடுக் குளத்தில் இருந்தும் பெறப்படுகின்றது. வேளாண்மை ஆய்வுகளுக்கான இலங்கை அரச விவசாய ஆராய்ச்சி நிலையம் 155ஆம் கட்டையிலும், விவசாய விரிவாக்கச் செயற்பாடு களுக்காக வட மாகாண விவசாயத் திணைக்களமும் அமைந்துள்ளது. இது இலங்கையின் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் ஒன்றாகும். இதன் தலைநகரம் கிளிநொச்சி நகரமாகும். இந்த மாவட்டம் 4 பிரதேச செயலாளர் பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 95 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளன.

# ஜனாதிபதி மைத்திரியை பாராட்டிய அமைச்சர்கள்

### மஹிந்தவை எதிர்த்தமைக்காக

கொழும்பு, ஜூலை 17
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர்கள் பலத்த பாராட்டுகளை வழங்கியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
பொதுத்தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுத்தமைக்காகவே அமைச்சர்கள் ஜனாதிபதியை பாராட்டியுள்ளனர்.
கடந்த செவ்வாய்கிழமை ஆற்றிய உரையில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்கள் காரணமாக அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர்கள் மத்தியில் உற்சாகமான மனோநிலை காணப்பட்டதாகவும் தெரியவருகின்றது.
அமைச்சரவை கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரும், பின்னரும் பல அமைச்சர்கள் ஜனாதிபதியின் உரையைப் பாராட்டிக் கருத்து தெரிவித்துள்ளனர். (த)

# எமிரேட்ஸ் விமானம் அவசரத் தரையிறக்கம்

கொழும்பு, ஜூலை 17
டுபாயிலிருந்து சிட்னிக்குச் சென்று கொண்டிருந்த எமி ரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானமொன்று கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாக தரையிறங்கியுள்ளது.
விமானத்தில் பயணித்த பயணியொருவருக்கு திடீர்ச் சுகவீனம் ஏற்பட்டதையடுத்தே விமானம் தரையிறக்கப் பட்டதாக விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.
டுபாயிலிருந்து சிட்னிக்கு பயணித்த ஈகே 412 என்ற விமானமே தரையிறக்கப்பட்டுள்ளது. அவ்விமானத்தில் 478 பயணிகளும் 35 விமான சிப்பந்திகளும் இருந்ததாக விமானநிறுவனம் தெரிவித்துள்ளது.
குறித்த பயணிக்குச் சிகிச்சையளிக்கப்பட்ட தன் பின்னர், சற்று தாமதமாக விமானம் பயணித்ததாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.(த)

# மஹிந்தவை கட்டாயம் தோற்கடிக்க வேண்டும்

### கோருகிறார் தயா கமகே

கொழும்பு, ஜூலை 17
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் தேர்தலில் வெற்றி பெற முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்துள்ளார்.
பொதுத் தேர்தல் அல்ல பிரதேச சபைத் தேர்தலில் வெல்வதும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வெறும் கனவாகவே இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.
அம்பாறை ஹிங்குரான பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.
மக்களின் அபிவிருத்திக்காகவும் நாட்டின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்காகவும் மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டியது கட்டாய மான தேவை எனவும் தயா கமகே மேலும் தெரிவித்துள்ளார்.(த)

# திருகோணமலையில் வாக்குகள் எண்ணும் நிலையங்கள் மாற்றம்

கொழும்பு, ஜூலை 17
எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது திருகோணமலை மாவட்டத்தில் வாக்கெண்ணும் மத்திய நிலையங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.
இதன்படி இம்முறை வாக்கெண்ணும் நடவடிக்கை திருகோணமலை தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெறவுள்ளது.
இதற்கு முன்னர் வாக்கெண்ணும் பணிகள் திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் திருமலை வித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.
எனினும் இம்முறை குறித்த இரு இடங்களையும் வாக்கெண்ணும் பணிகளுக்காக பயன்படுத்த போவதில்லை என மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (த)


**வலி. தெற்கு பிரதேச சபை**
**சுன்னாகம்**
**பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.
காலம் : 27.07.2015
இடம் : தலைமை அலுவலகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
பொருள்கள் விவரம் : மரக் கதவுகள், மர யன்னல்கள், கண்ணாடி யன்னல்கள், ஓடுகள்
நிபந்தனைகள் :
01) ஏலதாரராகக் கலந்து கொள்பவர் ரூபா 100.00 (NBT தவிர) மீளளிக்கப்படாத வைப்புப் பணமாகச் செலுத்த வேண்டும்.
02) சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத் தொகையின் முழுத் தொகையினையும் செலுத்திப் பொருள்களை அலுவலகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும்.
03) 20.07.2015 தொடக்கம் 24.07.2015 வரை அலுவலக நேரத்தில் ( காலை 09.00முதல் மாலை 04.15வரை) தலைமை அலுவலகவளாகத்தினுள் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் தொலைபேசி இலக்கம் - 021 224 0017 இல் தொடர்பு கொள்ளலாம்,
04) மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்,

வலிகாமம் தெற்கு
பிரதேசசபை,சுன்னாகம்.
தி.பிரகாஷ்.
தவிசாளர்.



**86 ஆவது பிறந்த தின நினைவு**



தோற்றம்
17.07.1929

மறைவு
21.04.2014

அமரர் செ.இந்திராசா (வைத்திய கலாநிதி)

“செல்வம்”
உரும்பிராய்.

நீங்கா நினைவுகளுடன் அன்பின்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.





சுவிஸ் நாட்டிலிருந்து வருகை தந்து யாழ் நல்லூரில் பெருமையுடன் வழங்கும்
செல்வி தயானந்தன் அஜானா அவர்களின்
**இசைக்கோலங்கள்**



இடம் துர்க்கா மணி மண்டபம், நல்லூர்
காலம் 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் மாலை 4.00 மணி

**வாழ்த்துரை**
“செஞ்சொற் செல்வர்” கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்
தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

**தலைவர்**
பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்
தகைசார் வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**விசேட அதிதிகள்**
“சங்கீதகலாநிதி” N.V.M.நவரத்தினம் அவர்கள்
மேனாள் தலைவர், இராமநாதன் நுண்கலைக்கழகம்.
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
“வீணாகானபாலமேதா” மகாதேவ சோமசுந்தர சர்மா அவர்கள்
தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்
“சுருதி வேந்தன்”, “இசைஞானசுரபி” அ.ஜெயராமன் அவர்கள்

**அணிசெய் கலைஞர்கள்**
வயலின்-“சுருதிவேந்தன்” அ.ஜெயராமன்
மிருதங்கம்-“கலாவித்தகர்” சு.நந்தகுமார்
தபேலா-“லயஞானவிநோதன்” சதா வேல்மாறன்
கடம்- “கலாவித்தகர்” கு.ரவிசங்கர்
முகர்சிங்-“கலாவித்தகர்” சி.செந்தூரன்
நிகழ்ச்சித்தொகுப்பு-“இசைக்கலைமணி” ந.செல்வச்சந்திரன்
நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு-“ஆன்மீகச்செல்வன்” இ.சாந்தகுமார்

**நிகழ்ச்சி நிரல்**
மங்கல விளக்கேற்றல்
இறை வணக்கம்
செல்வி ச.விஜிதா
வரவேற்புரை
திரு.ப.கணேஸ்
அதிபர், யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
வாழ்த்துரை
செஞ்சொற்செல்வர் கலாநிதி
ஆறுதிருமுருகன் அவர்கள்
தலைமையுரை
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
இசைக்கச்சேரி செல்வி. த. அஜானா அவர்கள்
கருத்துரை
சங்கீத கலாநிதி
N.V.M நவரத்தினம் அவர்கள்
வயலின் இசை
செல்வி த.அஜானா அவர்கள்
கருத்துரை
“சுருதிவேந்தன்”
“இசைஞானசுரபி” அ.ஜெயராமன் அவர்கள்
“விசேட லய நாத இசை”
செல்வி த.அஜானா அவர்கள்
நாதஸ்வரம்
“ஈழநல்லூர் நாதஸ்வர கான விநோதன்”
P.S பாலமுருகன் அவர்கள்
தவில்
“ஈழநல்லூர் லயஞாபாலன்”
P.S செந்தில்நாதன் அவர்கள்
தபேலா
“லயஞானவிநோதன்”
சதா வேல்மாறன் அவர்கள்
வீணை இசை
செல்வி த.அஜானா அவர்கள்
கருத்துரை
“வீணாகானபாலமேதா”
மகாதேவா சோமசுந்தர சர்மா அவர்கள்
அணிசெய் கலைஞர்கள் கௌரவித்தல்
நன்றியுரை
ஆன்மீகச்செல்வன் திரு.இ.சாந்தகுமார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் | திரு.திருமதி தயானந்தன் தனஜா குடும்பத்தினர். (சுவிஸ்) | கோண்டாவில் கிழக்கு.

# எரிபொருளின் விலை குறையாது

கொழும்பு, ஜூலை 17

எரிவாயுவின் விலை நேற்று முதல் குறைக்கப்பட்ட போதிலும் எரிபொருளின் விலைகளை குறைப்பது தொடர்பில் எவ்வித தீர்மானமும் இல்லை என அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய வள கூட்டுதாபனத்தின் நிதித்துறையை ஸ்திரப்படுத்துவதே தமது நோக்கம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த)

# மஹிந்தவின் கூட்டத்தில் பங்கேற்கவே மாட்டேன்

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், இன்று வெள்ளிக்கிழமை அநுராதபுரத்தில் நடைபெறவுள்ள ஐ.ம.சு.முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லையென அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

துமிந்த திஸாநாயக்க ஐ.ம.சு.மு சார்பில் அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். எனினும் தாம் மஹிந்த வுடன் ஒரே மேடையில் அமர விரும்பாத காரணத்தால், இந்த பிரசார கூட்டத்தில் கலந்துகொள்வ தில்லையென தெரிவித்துள்ளார்.

மஹிந்த அரசில் அமைச்சுப் பதவி வகித்த துமிந்த திஸாநாயக்க, கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது ஜனாதிபதி மைத்திரியுடன் இணைந்து அப்போதைய அரசாங்கத்திலிருந்து வெளியேறினார்.

ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசில் துமிந்தவுக்கு அமைச்சுப் பதவியும் கிடைத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் மஹிந்தவுக்கு வேட்புமனு வழங்கப்பட்டமையையடுத்து, மஹிந்த எதிர்ப்பாளர்கள் பலர் நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து கொண்டபோதும், துமிந்த உள்ளிட்டசிலர், தொடர்ந்தும் கட்சியில் நீடித்து வருகின்றனர்.

ஒருவேளை, மஹிந்த பிரதமரானால் மஹிந்தவை எதிர்க்கும் இவ்வாறான வர்களின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு அமையுமென்பது கேள்விக்குறியாகவே உள்ளது. (த)


**INVITATION FOR BIDS**
**TEACHING HOSPITAL, JAFFNA**

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|
| Renovation of Old Operation Theatre | 500.00 | 120,000.00 | 91 | 5.97 | C 7 |
| Construction of Condemning Stores | 500.00 | 36,000.00 | 91 | 1.76 | C 9 |
| Renovation of Mortuary | 500.00 | 35,000.00 | 91 | 1.70 | C 8 |
| Timber Flooring for Biochemistry Lab, Toilets Renovation of Ward No 06 and Aluminum Partition for Ward No 07 | 500.00 | 15,000.00 | 91 | 0.72 | C 10 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 20.07.2015 up to 06.08.2015 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 07.08.2015, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
17/07/2015.



**தேவை**

நூரம் வேலைக்கு பெண் / ஆண் இருவர் தேவை. வயது 20-30 இற்குள் சம்பளம் ரூ .14000-16000 கொடுக்கப்படும்.
**077 308 0318**

**வீடு வாடகைக்கு**

யாழ் நகர் மத்தியில் ஸ்ரான்லிவீதி, பருத்தித்துறைவீதி ஆகியவற்றுக்கு சமீபமாக 4 அறைகள், 2 ஹோல், கராஜ், மேலதிக வாகன தரிப்பிட வசதியுள்ள வளவுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. கம்பனிகள், வசிப்பிடம் மற்றும் ஸ்ரோர்களாகவோ கல்வி நிலைய செயற்பாட்டுக்கோ உகந்தது.
தொடர்பு : 077 242 5509

**ஆள் தேவை**

ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் நேரில் பேசி வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :- த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ் 21, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (63212)



# புலமைச்சுடர் நடத்தும் தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

## யாழ் வட்டுக்கோட்டையில்

காலம் : 18 .07.2015 சனிக்கிழமை
நேரம் : காலை 8.30 மணி தொடக்கம் 2.00 மணி வரை
இடம் : யாழ்ப்பாண இந்துக் கல்லூரி (வட்டுக்கோட்டை)

வளவாளர்கள்


P. அம்பிகைபாகன் கொழும்பு


N. S. தீபன் வவுனியா


S. பத்மலோஜினி யாழ் வட்டுக்கோட்டை

பிரதான அனுசரணை : உதயன் தமிழ் தேசிய நாளிதழ்

## மன்னார் பேசாலையில்

காலம் : 19 .07.2015 ஞாயிற்றுகிழமை
நேரம் : காலை 8.30 மணி தொடக்கம் 2.00 மணி வரை
இடம் : மன்/ சென் மேரிஸ் வித்தியாலயம், பேசாலை

வளவாளர்கள்







பிரதான அனுசரணை : PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE பேசாலைக் கிளை

❊ இடநெருக்கடியை தவிர்த்துக் கொள்வதற்காக 0777157779(வட்டுக்கோட்டை), 0770687116(மன்னார்) என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பாடசாலை ரீதியாக கலந்து கொள்ள இருக்கும் மாணவர் தொகையினை முற்பதிவு செய்துகொள்ளுங்கள்.

❊ பங்குபற்றும் மாணவர்கள் குறிப்பேடு, சிற்றுண்டி, உணவு, தண்ணீர், ஆகியவற்றை தம்முடன் எடுத்துவரவும்.

ஊடக அனுசரணை : தொலைக்காட்சி அனுசரணை :

தரம் 5 புலமைச்சுடர் முழுமையும் பாடத்திட்டத்தைத் தழுவியது | ஒளிஅரசி | சுடர் ஒளி THE SUDAR OLI தமிழ் பேசும் மக்களின் தன்மான நாளிதழ் | வசந்தம் TV

# வீடு வீடாக வாக்குக் கேட்டு வந்தால் உடன் அறிவிக்குக

கொழும்பு, ஜூலை 17

வீடு வீடாகச் சென்று வாக்குக் கேட்டால் உடனடியாக அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் வீடு வீடாகச் சென்று வாக்குக் கேட்பது உள்ளிட்ட சட்ட விரோதச் செயல்கள் தெரியவரின் அது குறித்துத் தகவல்களைப் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸ் தலைமையகம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.


நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 75ஆவது விதியின் கீழ் வீடு வீடாக வாக்குக் கேட்பது, வாக்களிக்கவேண்டாமென அழுத்தம் கொடுப்பது என்பன தடை செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவை குறித்து பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் பொலிஸ் தலை மையகம் 0112395605, 0112 384024, பொலிஸ் தலைமை யகத்தின் தேர் தல்கள் அலுவலகம் 0112543811, மற்றும் 0112 387999 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.

(த-22)

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் நந்தகுமார்



தோற்றம் 10.05.1965 — மறைவு 16.07.2015

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் நந்தகுமார் நேற்று 16.07.2015 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இருபாலை வீதி,
பழனியாண்டவர் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு. (63209)

தகவல் :-
குடும்பத்தினர்.

## மஹிந்தவை வீட்டுக்கு அனுப்ப மௌனப் புரட்சி செய்த மைத்திரி

*சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 17

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்ப ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மௌனப் புரட்சி செய்தார் என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஜனவரி மாதம் 8ஆம் திகதியை போல மஹிந்தவை இரண்டாவது தடவையாகவும் வீட்டுக்கு அனுப்ப தேவையான வேலைத் திட்டத்தை நாங்கள், ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி முன்னெடுப்போம் என்றும் அவர் கூறினார்.

கண்டியில் இடம்பெற்ற நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். (த)

## கண்ணீர் அஞ்சலி

### இளையதம்பி பரராஜசிங்கம்

எமது கல்லூரியின் சக ஆசிரியர் ப.ஜெயக்குமாரின் அன்புத் தந்தையார் இளையதம்பி பரராஜ சிங்கம் (இளைப்பாறிய யாழ்.மாநகரசபை உத்தி யோகத்தர்) அவர்கள் 16.07.2015 வியாழக்கிழமை இறைபதமடைந்த செய்தி கேட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

(63214)

புனித பத்திரிசியார் கல்லூரி
ஆசிரியர் சங்கம்.

## இலவச பயிற்சி நெறி நல்லூர் விதாதாவில்

நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இலவசமாக தொழினுட்ப மாற்றீட்டுப் பயிற்சிநெறி இடம்பெறவுள்ளது. விரும்பியவர்கள் இதற்குப் பதிவு செய்யுமாறு நல்லூர் பிரதேச செயலர் ஆ.சிறி கேட்டுள்ளார்.


ஆர்வமுள்ளோர் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் பதிவை மேற்கொள்ள வேண்டும். கான்ட் வோஸ், டிஸ் வோஸ், லிக்குயிட் சோப் தயாரித்தல், ஹ்வ் ரு புறமோற் த பிசினஸ் அன்ட் புறொஜெற் மனேஜ்மென்ற், டிற்றேஜன்ற் பவுடர் தயாரித்தல், மேலும் இங்கு வங்கி முகாமையாளரினால் சிறு தொழில் முயற் சியாளர்களுக்குக் கடன் திட்டம் வழங்குதல் தொடர்பான ஆலோசனையும் வழங்கப்படும். பொதியிடல் தொழினுட்பம் ஆகிய பயிற்சி நெறிகளே வழங்கப்படவுள்ளன.

மேலும் இங்கு இலக்கம் 63, பலாலி வீதி திருநெல்வேலி வடக்கில் குறித்த விதாதா வள நிலையம் அமைந்துள்ளது. ஆர்வமுடையவர்கள் பங்கு பற்றி பயன்பெறுமாறு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(ற-4)

## கிரிக்கெட் வீரரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துமாறு யாழ் மாவட்ட வீரர்களுக்கு BTCL அழைப்பு

பிறப்பு: 21.01.1991 — இறப்பு: 05.07.2015



இம்மாத முற்பகுதியில் 05.07.2015 லண்டனில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியொன்றின் போது பந்து தாக்கியதில் மரணமான பாவலன் பத்மநாதனின் பூதவுடல் இறுதிச் சடங்குகளுக்காக பருத்தித் துறையில் அமைந்துள்ள அவரின் இல்லத்துக்குக் கொண்டு வரப்பட்டு, எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட விருக்கிறது.

பிரித்தானிய தமிழர் கிரிக்கெட் சம்மேளனத்தின் (BTCL) போட்டித் தொடரின் போட்டியொன்றில் கலந்துகொண்டிருந்தபோது வீசப்பட்ட பந்தொன்று நெஞ்சுப் பகுதியைத் தாக்கியதில் பரிதாபகரமாக மரணமான மானிப்பாய் பரீஷ் (பிரித்தானியா) விளையாட்டுக் கழகத்தின் சகலதுறை ஆட்டவீரரான பாவலனின் இழப்பு உலகளாவிய ரீதியில் அதிர்ச்சியையும், அனுதாப அலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இருபத்தி நான்கு வயதான பாவலன் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனாவார். இந்த நிலையில் மீளாத்துயில் கொண்டுள்ள எமது துடுப்பாட்ட வீரன் பாவலனிற்கு இறுதி அஞ்சலி செலுத்துவது எமது தார்மீக கடமையாகும்.

இதன்பிரகாரம், மானிப்பாய் பரீஷ் உள்ளிட்ட யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கங்கள், கழகங்கள், முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், பாடசாலைகளின் கிரிக்கெட் அணி வீரர்கள் மற்றும் கிரிக்கெட் ஆர்வலர்கள் அனைவரையும் கிரிக்கெட் சீருடை அணிந்து பாவலனிற்கு இறுதியஞ்சலி செலுத்தும்படியும், அன்னாரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ளும்படியும் பிரித்தானிய தமிழர் கிரிக்கெட் சம்மேளனம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

**இறுதிக் கிரியைகள்: 19.07.2015 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: காலை 8.00 மணி முதல் 11.00 மணிவரை**
**இடம்: ஆனந்தபவனம், முதலாம் கட்டை ஒழுங்கை, பருத்தித்துறை.**
**தகனக் கிரியைகள்: சுப்பர்மடம் இந்து மயானம், பருத்தித்துறை.**

பிரித்தானியா தமிழர் கிரிக்கட் சம்மேளனம். (C/17964) (10.6)

தகவல்:
நிர்வாகம் (BTCL )

## மரண அறிவித்தல்

### இராதாகிருஷ்ணன் சுஜீவன்



சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் இராதாகிருஷ்ணன் சுஜீவன் 14.07.2015 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராதாகிருஷ்ணன் சுதாசினி(கொழும்பு) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாராயணசாமி, செல்வலட்சுமி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன், செல்வகிருஷ்ணன் மற்றும் கோபாலகிருஷ்ணன், ஆனந்தகிருஷ்ணன், சிவராமகிருஷ்ணன்(சுழிபுரம்), புஸ்பரஞ்சினி, தனரஞ்சினி, மனோரஞ்சினி(கனடா) ஆகியோரின் அன்பு பெறா மகனும் சிறீதரன், மகிந்தன், குவீந்திரன், தயாபரன்(கனடா), காலஞ்சென்ற கேதீஸ்வரன் மற்றும் கௌரி, மனோகரி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 18.07, 19.07.2015 தினங்களில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியை 19.07.2015 நடைபெற்று தகனக்கிரியைகள் கல்கிசை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(c 17970)

தகவல் :-
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### சொக்கலிங்கம் விஜயராசா(சொக்கன்/டானியல்/ராஜன்)

பிறப்பு 07 * 02 * 1960



இறப்பு 11 * 07 * 2015


பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயற்குழுவில் நீண்டகாலமாக உபதலைவராகவும் பொருளாளராகவும் செயற்பட்டு வந்த சொக்கலிங்கம் விஜயராசா லண்டனில் மரணித்த செய்திகேட்டு எமது லீக்கின் செயற் குழு உறுப்பினர்களும், கழகத்தவர்களும் பெரும் அதிர்ச்சிக்குள்ளானோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.

பருத்தித்துறை
உதைபந்தாட்ட லீக் (c 17968)

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி கந்தசாமி(காரைநகர்)



காரைநகர் குமிழங்குழியைப்பிறப்பிடமாகவும் களபூமியை வசிப்பிடமாகவும் தற்போது 176 பிறவுண் வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கந்தசாமி நேற்று (15.07.2015) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் A.S.ஆறுமுகம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் கந்தசாமியின் அன்பு மனைவியும் சண்முகநாதன், சபாநாதன், சண்முகலிங்கம், சசிகாந்தன் ஆகியோரின் பாசமிகுதாயாரும் சிவாஜினி, சுதாஸ்தினி ஆகியோரின் அன்பு மாமியும் துவாரகன், பிரசாயினி, சுருதி, அஸ்வின் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், சோதிப்பிள்ளை மற்றும் ருக்மணி காலஞ்சென்ற செ. சோமசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற ஆ.பொன்னம்பலம் மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சறோஜினிதேவி, தனலக்ஷ்மி, நாகேஸ்வரி, கமலவேணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2015) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்பு :- 021 222 9595
077 315 1575
077 310 7687

176, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (63210)

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் சந்தானகோபால்



கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் சந்தானகோபால்(கோபால்) நேற்று (16.07.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பால சிங்கம் மற்றும் மகேஸ்வரி (தேவி) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான வேலாயுதபிள்ளை-நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பலீலாவின் அன்புக்கணவரும் மதிராஜ் (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), கபில்ராஜ், சன்ராஜ், துசிராஜ் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் சந்திரகுமார் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.07.2015) நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58/3 சம்பியன் லேன்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (63215)

தகவல் :-
குடும்பத்தினர்.
077 824 0420

## மஹிந்தவுக்கு

விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய விசேட உரை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

"மக்கள் வழங்கிய ஆணையைக் காப்பதற்கு ஜனாதிபதி முயற்சிகளை எடுத்துள்ளார். அத்துடன், மஹிந்த மீண்டும் தோல்வியடைவார் என்றும், அவர் வெற்றிபெற்றால்கூட பிரதமர் பதவியை வழங்கப்போவதில்லை என்றும் பொதுத் தேர்தலில் தான் சுயாதீனமாக இருக்கப் போவதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். ஜனவரி 8ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணையை மீறப்போவதில்லை என்ற தகவலை இதனூடாக ஜனாதிபதி வழங்கியுள்ளார். தாமதமாகியாவது இவ்வாறானதொரு அறிவிப்பை அவர் விடுத்ததை நாம் மதிக்கிறோம்.– என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மோதல் ஏற்படுவதற்கு மைத்திரி ? மஹிந்த விவகாரம் மட்டும் காரணமல்ல. சுதந்திரக் கட்சியை முழுமையாகக் கைப்பற்றுவது தொடர்பிலும் மோதல் வெடித்துள்ளது. நாட்டை மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் மஹிந்த நாசமாக்கியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் உயர்பதவிக்கு வருவதற்கு மஹிந்த இடமளிக்கவில்லை. – என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சந்திரிகா ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின்னர் மஹிந்தவுக்கு வாய்ப்பளித்தார். தான் அப்பதவியில் இரண்டு தடவைகள் இருந்தபின்னர்கூட மேலும் அப்பதவியில் இருப்பதற்கே மஹிந்த ஆசைப்பட்டார். இதற்காக அரசமைப்பையும் மாற்றியமைத் தார். வேறு தலைவர்களுக்கு அவர் வாய்ப்பளிக்கவில்லை. – என்றும் கூறினார்.

ஜனாதிபதியின் விசேட அறிவிப்பின் மற்றுமொரு முக்கிய விடயமும் இருக்கிறது. மஹிந்தவுக்கு கன்னத்தில் அறைந்து ரணிலுக்கு பலமாக மண்டையில் குட்டும் வகையில் அந்த அறிவிப்பு இருக்கிறது. மத்திய வங்கி ஆளுநர் விவகாரம் தொடர்பிலேயே ரணிலுக்கு இந்தக் கொட்டு விழுந்துள்ளது.

பிணைமுறி விவகாரத்தில் மோசடி செய்துள்ளதாகக் கூறப்படும் மத்திய வங்கி ஆளுநரை பதவி நீக்குமாறு தான் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தார் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். பிணைமுறி விநியோக விவகாரத்தில் மோசடி நடந்ததா அல்லது இல்லையா என்று கடந்த காலங்களில் வாக்குவாதம் இடம்பெற்றுவந்தது. இந்நிலையில், அதில் மோசடி இடம்பெற்றுள்ளது என்பதை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தும் வகையிலேயே ஜனாதிபதியின் அறிவிப்பு இருக்கிறது. மத்திய வங்கி ஆளுநரைப் பாதுகாப்பதற்கு ஆரம்பம் முதலே பிரதமர் செயற்பட்டுள்ளார் என்பதும் இதன்மூலம் உறுதியாகிறது. – என்று அநுரகுமார மேலும் தெரிவித்தார். (ற–சி)

## ரூ. 1 லட்சம்

இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தல் ஆணையாளர் மற்றும் கட்சி செயலாளர்கள் இணைந்து நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. அதனடிப்படையில் குறித்த தொகையை அமைச்சரவையினால் நிர்ணயிக்குமாறும் ஆணையாளர் வேண்டுகோள் விடுத்தார். நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் முன்மொழிவுக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

அரச வாகனங்கள், சொத்துக்களைத் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவது முறைகேடு என்று கூறப்பட்ட நிலையில் அதற்குரிய பணத்தைச் செலுத்திப் பயன்படுத்த பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களுக்கும் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த–4)

## மீள்குடியமர்வை

என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் தொடர்ச்சியாக குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்கமைய கடந்த மாதத்தின் இறுதியில், மீள்குடியேற்ற அமைச்சர் யாழ்ப்பாணத்திற்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இந்தப் பயணத்தின் போது வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்கள் அகற்றுவது தொடர்பிலும், மக்களின் தேவைகளுக்கு முக்கிய பாதைகளை விடுவிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது. இராணுவத்தினர் குறித்த பாதைகள் மற்றும் முகாம்கள் அகற்றுவது தொடர்பில் இரண்டு வாரங்களுக்குள் பதில் வழங்குவதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்தப் பின்னணியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பஸ்நாயக்க நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். இந்தப் பயணத்தின் போது அவர் பலாலியில் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளார். இதன் பின்னர், எடுக்கப்படும் முடிவுக்கு அமைய காணிகள் விடுவிக்கப்படக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற–5)

## மஹிந்தவுக்கு

முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் விசேட சிறப்புரிமைகள் கிடைத்துள்ளன. அதனால் ஏனைய வேட்பாளர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.– என்று கோரியே ஜே.வி.பி. முறையிடவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி என்ற அடிப்படையில் தமக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளை தேர்தல் நடவடிக்கை களுக்காக மஹிந்த ராஜபக்ஷ பயன்படுத்துகின்றார். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறப்புரிமைகள் இல்லாத நிலையில், அவர்களைப் போல தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான மஹிந்த இவ்வாறு செயற்படுவது ஏனையோரின் மனித உரிமைகளை மீறும் செயல்" ? என்றும் மனித உரிமைகள் ஆணையாளரிடம் ஜே.வி.பி சுட்டிக்காட்டவுள்ளது. (ற–சி)

## மஹிந்த

ஊடகங்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்தபோது மஹிந்த மீண்டும் தோற்பார் என்று கூறியிருந்தார். அது குறித்துக் கருத்துத் தெரிவித்திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதற்கான பதில் 17ஆம் திகதி (இன்று) தெரியும் என்று கூறியிருந்தார். இவ்வாறான பின்னணியில் மஹிந்தவின் இன்றைய கூட்டம் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் கூட்டம் தொடர்பாகக் கருத்துக் கூறிய தினேஷ் குணவர்தன தெரிவித்ததாவது:–

'இலங்கை வரலாற்றில் மிகவும் பிரபல்யமான புண்ணியஸ்தலங்கள் அமைந்துள்ள அநுராதபுரத்திலிருந்து மஹிந் தவை பிரதமராக்குவதற்கான வெற்றி ஒலியை எழுப்பவுள்ளோம். ஜனநாயகம் மிகவும் மோசமாக அமைந்துள்ளது. வெற்றி கொள்ளப்பட்ட பூமி மீண்டும் அபாயத்தை நோக்கிச் செல்கின்றது. இதனைத் தடுக்கவேண்டும்.''– என்று கூறினார்.

விமல் வீரவன்ஸ கருத்துத் தெரிவித்தபோது கூறியதாவது:–

எமது கன்னி தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை (இன்று) அநுராதபுரத்தில் பி.ப. 3 மணிக்கு இடம் பெறவுள்ளது. அதற்கு முன்னர் சர்வமத வழிபாடுகளை ஏற்பாடு செய்துள்ளதுடன், வேட்பாளர்களிடமிருந்து சத்தியப்பிரமாணம் ஒன்றையும் பெறவுள்ளோம்.

நாங்கள் இம்முறைத் தேர்தலில் 'தேசத்துக்கு உயிர் கொடுங்கள்' என்ற தொனிப்பொருளை முன்வைத்தமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அதாவது, 2005ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை உயிரற்றதாகவே இருந்தது. பின்னர் மஹிந்த வருகையைத் தொடர்ந்தே நாட்டுக்கு உயிர் கிடைத்தது. ஆனால், மஹிந்த இல்லாத புதிய அரசால் தேசத்தின் உயிர் மீண்டும் இல்லாது போயுள்ளது.

2005இல் நாட்டுக்கு உயிர் கொடுத்த தலைமையை 2015ஆம் ஆண்டில் மீண்டும் பதவிக்குக் கொண்டுவருவதன் மூலம் நாட்டை ஆபத்திலிருந்து பாதுகாக்கமுடியும்.– என்றார். (ற–சி)

## காணாமல்போனோர்

தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பில், பிரிட்டன் வெளிவிவகார அமைச்சால் அரையாண்டுக்கு ஒருதடவை அறிக்கை வெளியிடப்படும். இந்த ஆண்டின் முதல் அரையாண்டுக்குரிய அறிக்கை வெளியாகியுள்ளது. அதிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் முன்னேற்றமடைந்துள்ளது. புலம்பெயர்ந்த ஊடகவியலாளர்களையும் திரும்பி வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. சில இணையத்தளங்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டவர்கள் வடக்கிற்குச் செல்வதற்கான தடையும், அரசசார்பற்ற நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு ஜனநாயக வெளி திறந்து விடப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் சிறிலங்கா படையினரின் கண்காணிப்பு குறைக்கப்பட்டுள்ளது.– என்று அந்த அறிக்கை கூறுகின்றது.

எவ்வாறாயினும், உயர்ந்தளவு இராணுவ மயமாக்கல், பொதுமக்களின் வாழ்வில் இராணுவத் தலையீடுகள், ஆயுதப்படைகளால் தொடர்ந்து காணிகள் அபகரிக்கப்படுதல் போன்ற சவாலான விடயங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. பெண்களின் பாதுகாப்பு மற்றும் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுதல் என்பன கவலைக்குரிய விடயங்களாகவே உள்ளன.– என்றும் சுட்டிக்காட்டுகின்றது.

போரின் போது, படைகளிடம் சரணடைந்து காணாமற்போனதாக குற்றம்சாட்டப்படும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகளில் எந்த முன்னேற்றமும் இல்லை. இரகசியத் தடுப்பு முகாம்கள் இயங்குவதாக தமிழ் அரசியல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர். ஆனால் அதிகாரிகள் அதனை நிராகரிக்கின்றனர். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறைந்துள்ளன.–என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற–5)

## மஹிந்தவை

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மஹிந்த ராஜபக்ஷவை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்திருக்க முடியாது. ஏனென்றால், 1981 ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தல் சட்டப்படி, தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்களை அல்லது, குறித்த தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவர்களையே தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்க முடியும்.– என்று கூறினார்.

2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிய தேசியப்பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் போட்டியிட்டிருக்கவில்லை. எனவே, 2015 ஆம் ஆண்டு அவரைத் தேசியப் பட்டியலின் மூலம் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வர முடியாது.– என்றும் தெரிவித்தார்.

ஆயினும்– தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்படாமல் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடாமல், 2007 ஆம் ஆண்டு பஸில் ராஜபக்ஷ தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடந்த போது பஸில் ராஜபக்ஷ அமெரிக்காவிலேயே இருந்தார். அவருக்கு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கப்படவோ தேசியப்பட்டியலில் இடமளிக்கப்பட்டிருக்கவோ இல்லை. 2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதே, பஸில் ராஜபக்ஷ இலங்கை வந்தார்.

2007 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் அமைச்சராக இருந்த அன்வர் இஸ்மாயில் உயிரிழந்ததையடுத்து அந்த வெற்றிடத்துக்கு தேசியப்பட்டியல் உறுப்பினராக பஸில் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார் என்றும் அவர்கள் சுட்டிகாட்டினர்.

(ற–5)

## மைத்திரி

சர்கள் தங்களது பதவிகளில் இருந்து விலகியுள்ளனர்.

உயர்கல்வி மற்றும் விஞ்ஞான ஆய்வு பிரதியமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சர் எரிக் வீரவர் தன, கிராமிய பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லசந்த அழகிய வண்ண ஆகியோரே தமது பதவி விலகினர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலேயே நாங்கள் எமது அரசியல் பயணத்தை ஆரம்பித்துள்ளோம். தொடர்ந்தும் அக்கட்சியிலேயே இருப்போம். எச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசிய கட்சியின் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஆதரவு வழங்கப்போவதில்லை.

தேசிய அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இணைத்துக் கொள்வது தொடர்பில் கட்சி ஏகமனதாகத் தீர்மானித்ததற்கு அமையவே நாங்கள் தேசிய அரசில் இணைந்து அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைவராக மைத்திரிபால சிறிசேன இருந்து கொண்டு கட்சிக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்துள்ளமையானது மிகவும் கவலைக்குரிய செயலாகும். அதற்கு எமது எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.மு. வெற்றிக்காகவும் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கவும் எமது பதவிகளில் இருந்து விலகுகின்றோம். இனி அரசுடன் எந்தத் தொடர்பும் இல்லை.– என்று அவர்கள் கூறினார்கள்.

ஏனையோரின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர்கள் கேட்ட போது, – கட்சித் தீர்மானத்துக்கமைய தேசிய அரசில் இணைந்து பிரதியமைச்சுகளைப் பெற்ற சு.க. உறுப்பினர்கள் அனைவரும் ஜனாதிபதி வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் மிகவும் கவலை அடைந்துள்ளனர். இது எமது கட்சிக்குப் பாதிப்பாக அமையும்.– என்றனர்.

(ற–சி)

## பிரதமரை

ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தலின் பின்னர் நல்லாட்சியை முன்னிறுத்திய தேசிய அரசே அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமரைத் தெரிவுசெய் பவர் ஜனாதி பதியல்ல மாறாக பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வியாழனன்று தெரிவித்த கருத்து தொடர்பாக வினவியபோது நாட்டின் அரசியல் யாப்பைத் தெரியாதவர்களே இவ்வாறு கூறுகின்றனர்.– என்று அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றவரையே ஜனாதிபதி பிரதமர் பொறுப்பை ஏற்குமாறு அழைப்பார் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரும் தேசிய அரசு உருவாக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத் தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருக்கும்போது அவர் பின்னால் 'சேர்' எனக் கூறி பலர் சென்றனர். ஆனால் பொதுத் தேர்தலின் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி,பிரதமரின் பின்னால் 'சேர்' எனக் கூறிச் செல்லும் நிலையே ஏற்படும் என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

(ற–சி)

## வேட்பாளர்

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 13 ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தது. அதன் பின்னர், போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கு விருப்பு இலக்கங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

தற்போது வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்கள் அடங்கிய பட்டியல் ஒவ்வொரு மாவட்டச் செயலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

(ற–5)

## அரச

அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அரச நிர்வாக மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு இது பற்றி அறிவுறுத்தல் விடுத்துள்ளது. இந்த அறிவித்தல் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கையின் ஊடாக விடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜினசிறி தடல்லகே தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல்கள் ஆணையாளரின் வேண்டுகோளுக்கு அமைய அனைத்து அரச ஊழியர்களையும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்த முடியுமெனவும் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வடக்கில் அரச பஸ்களில் தேர்தல் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவ்வாறு பஸ்களில் ஒட்டப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்களை அகற்றுமாறும் தவறின் குறித்த பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(த–4)

# வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுக

## மைத்திரியிடம் கோருகிறார் ஹக்கீம்



கொழும்பு, ஜூலை 17

நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பேன் எனக் கூறப்பட்டபோதும் தற்போது அதில் சிறிது மாத்திரமே குறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தான் கொடுத்த வாக்குறுதிகளில் சிறிய அளவை மட்டுமே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றியுள்ளார். பொதுமக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் பூரணமாக நிறைவேற்றப்படும் எனத் தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால கூறியபோதும் சில அதிகாரங்கள் மட்டுமே குறைக்கப்பட்டுள்ளன.

வரம்புக்குட்பட்ட பலம் மாத்திரம் குறைக்கப்பட்டுள்ளது. ஒன்றைச் செய்து ஒன்றை மறைக்கின்றனர். ஆனால், வாக்குறுதி அளித்தால் அதனை ஒழுங்காக நிறைவேற்ற வேண்டும் – என்றார். (த)

# பரப்புரையை மஹரகமவில் ஆரம்பித்துள்ளது ஜே.வி.பி.

## 22இல் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு
## 100 பிரதான கூட்டங்களை நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 17

பொதுத்தேர்தலுக்கான ஜே.வி.பியின் முதலாவது பிரதான பரப்புரைக் கூட்டம் நேற்றுமுன்தினம் மஹரகமவில் நடைபெற்றது.

மாலை 4 மணியளவில் ஆரம்பமான இக்கூட்டத்தில் ஜே.வி.பியின் முக்கிய பிரமுகர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், இனிவரும் நாட்களில் நாடு முழுவதிலும் 100 பிரதான கூட்டங்களையும், சிறியளவிலான ஆயிரம் கூட்டங்களையும் நடத்த ஜே.வி.பி. திட்டமிட்டுள்ளது. கையேடு விநியோகம், சமூக வலைத்தளம் உள்ளிட்ட பிரசார யுத்திகளையும் அக்கட்சி கையாளவுள்ளது.

அதேவேளை, ஜே.வி.பியின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 22ஆம் திகதி வெளியிடப்பட வுள்ளது. சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள விசேட மாநாட்டின் போதே இந்தக் கொள்கைத்திட்டம் வெளியிடப்படவுள்ளது.

பல்துறையினரிடமிருந்தும் ஆலோசனைகள் பெறப்பட்டே ஜே.வி.பியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார். (த)

# மஹிந்த ...னை ஓய்வு?

கொழும்பு, ஜூலை 17

அமைச்சர் மஹிந்த அமரவீர அரசியலிலிருந்து ஓய்வுபெற்றுக் கொள்ளத் தீர்மானித்துள்ளார். தற்போதைய அரசியல் நிலைமைகள் தம்மை குழப்பமடையச் செய் துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரையும் தமது இந்த குழப்ப நிலைமைக்கு ஓர் ஏதுவெனத் தெரிவித்துள்ளார். அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதாயின் இன்று அது குறித்து அறிவிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள தீர்மானித்தால் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளை இடைநிறுத்திக்கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# ஐ.ம.சு.மு தேசியப் பட்டியலில் றோ அமைப்பின் உறுப்பினர்

## குற்றம்சாட்டுகிறார் நளின் டி சில்வா

கொழும்பு, ஜூலை 17

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் இருந்து விலகி கொண்டுள்ளதாக பேராசிரியர் நளின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் இந்தியாவின் புலனாய்வு அமைப்பான றோ அமைப்பின் உறுப்பினர் ஒருவர் இருப்பதன் காரணமாகவே தான் அதில் இருந்து விலகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் றோ அமைப்பு மற்றும் அமெரிக்காவின் சீ.ஐ.ஏ அமைப்புகள் இலங்கையில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன எனவும் நளின் டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்தியப் புலனாய்வு உறுப்பினர் யார் என்பதை நளின் டி சில்வா தெரிவிக்கவில்லை.

தமது புலனாய்வு அமைப்புகள் இலங்கையில் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை இந்தியாவும் அமெரிக்காவும் மறுத்துள்ளன. (த)

# மைத்திரியின் உரைக்கு ஜனக பண்டார அதிருப்தி

கொழும்பு, ஜூலை 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் உரைக்கு ஜனக பண்டார தென்னக்கோன் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உரை கடும் அதிருப்தியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

உடனடியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவைக் கூட்டி இது குறித்து கலந்துரையாடவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தம்புள்ளையில் அமைந்துள்ள தனது இல்லத்தில் அவசர ஊடக வியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய போது அவர் இத னைக் குறிப் பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உரையினால் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பின்னடைவு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள் ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் என்ற ரீதியில் தான் இந்தக் கருத்துக்களை வெளியிட வில்லை எனவும், தூய சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் என்ற ரீதியில் தான் இந்தக் கருத்தை வெளி யிடுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தாம் மிகவும் மதிப்பதாகவும், கௌரப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இவ் வாறான கருத்துக்களை வெளியிட்டமை கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# ஏமாற்றி விட்டதாம் சு.க

## விசனம் தெரிவிக்கிறார் கருணா

கொழும்பு, ஜூலை 17

தனக்குத் தேசியப்பட்டியலில் இடமளிப்பதாக வாக்குறுதி அளித்து ஏமாற்றிவிட்டதாக விசனமும், அதிர்ச்சியும் வெளியிட்டுள்ளார், முன்னாள் பிரதி அமைச்சர் கருணா எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன்.

தேசியப்பட்டியலின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைப்பதாகச் சுசில் பிரேம் ஜெயந்தவும், அனுர பிரியதர்சன யாப்பவும் எனக்கு வாக்குறுதி அளித்திருந்தனர். ஆனால் கடைசியில் எனது பெயர் தேசியப் பட்டியலில் உள்ளடக்கப்படாதது வருந்தத்தக்கது. இந்தச் சூழலில், இதுபற்றி நான் முடிவு ஒன்றை எடுக்க வேண்டியுள்ளது.

போர் முக்கியமான கட்டத்தை எட்டியிருந்தபோது, கோத்தபாய ராஜபக்ஷவும், லக்ஸ்மன் ஹுலுகல்லவும், வந்து அரசுக்கு உதவவேண்டும் என்று எனது உதவியைக் கோரினர். அந்த நேரத்தில் நாட்டுக்காக நான் மிகவும் ஆபத்தான ஒரு முடிவை எடுத்தேன். அதன் காரணமாக, தமிழர்களின் சில பகுதியினரின் கடுமையான விமர்சனங்களை எதிர் கொள்ள நேரிட்டது என்று கருணா குறிப்பிட்டுள்ளார்.

அந்த நேரத்தில் 600 போராளிகளை விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்படுவதற்காக கருணா கிழக்குக்கு அனுப்பி வைத்ததாகவும், அவர்களில் 300 பேர் போரில் இறந்து போனதாகவும், கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது.

தற்போது அதற்கான பொறுப்புகளைத் தானே சுமக்க நேரிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள கருணா, தற்போதைய அரசியல் சூழல் தனக்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை என்பதை முதலில் கூற வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (த)



...கான மெய்வன்மைப் போட்டிகளின்படி சிறந்த பாடசாலைகளாக

# யாழ்.மத்தி, விசுவமடு மகா வித்தியாலயம் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட மெய்வன்மைப் போட்டிகளின் தரப்படுத்தலில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி அணியும் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலய அணியும் முதலிடத்தைப் பெற்றுள்ளன.
கடந்த 9ஆம் திகதிமுதல் 13ஆம் திகதிவரை வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆண்கள் பிரிவில் 1 ஆம் இடத்தை யாழ். மத்தியகல்லூரியும், 2ஆம் இடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் 3ஆம் இடத்தை மன்னார் சென்.சேவியர் கல்லூரியும், 4ஆம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும், 5ஆம் இடத்தை யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும், 6ஆம் இடத்தை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும், 7ஆம் இடத்தை மன்னார் சென்.ஆன்ஸ் கல்லூரியும், 8ஆம் இடத்தை யாழ்.இந்துக் கல்லூரியும், 9ஆம் இடத்தை மன்னார் அரிப்பு அ.த.க. பாடசாலையும் 10ஆம் இடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.
பெண்கள் பிரிவில் 1 ஆம் இடத்தை முல்லைத்தீவு விசுவமடு வித்தியாலயமும் 2ஆம் இடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் 3ஆம் இடத்தை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் 4ஆம் இடத்தை மன்னார் கற்கடந்த குளம் அ.த.க. பாடசாலையும் 5ஆம் இடத்தை மன்னார் நானாட்டான் வித்தியாலயமும், 6ஆம் இடத்தை யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும் 7ஆம் இடத்தை சாவகச்சேரி இந்துக்கல்லூரியும் 8ஆம் இடத்தை கிளிநொச்சி மத்திய கல்லூரியும் 9ஆம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் 10ஆம் இடத்தை யாழ்.இந்துமகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.
(ம-422)

## அரையிறுதியில் சென்.மேரிஸ், டைமன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 17
வளர்மதி சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வளர்மதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்றது.
சென்.மேரிஸ் எதிர் சென்.மைக்கல் மாலை 4மணிக்கு இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து சென்.மைக்கல் அணி மோதிக்கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.
***டைமன்ஸ் எதிர் யங்ஹென்றிஸ்***
மாலை 5மணிக்கு இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டதில் டைமன்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதிக்கொண்டது.இதில் டைமன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-23)

## இறுதிக்குள் நுழைந்தது மைக்கல்



யாழ்ப்பாணம், ஜூலை 17
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் வடமராட்சிக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் துடுப்பாட்டத் தொடரில் கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகத்தை 16 ஓட்டங்களால் வீழ்த்தி இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம்.
நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற இந்த அரையிறுதி யாட்டங்களில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக த்தை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகமும் மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மைக்கல் அணி நிர்ணயிக்கப்பட்ட 10பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அமீர் 22 ஓட்டங்களையும் ரகு 16 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சின்னா, ரமேஸ் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.
10 பந்துப்பரிமாற்றங்களில் 85 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு களமிறங்கிய கரவெட்டி ஐங்கரா அணி 9.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக சின்னா 30 ஓட்டங்களையும் சதீஸ் 11 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மைக்கல் அணி சார்பாக தினேஸ் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.
(ம-108)

## போராடி வெற்றிபெற்றன கலைமதி மற்றும் றோயல்

யாழ்ப்பாணம், ஜூலை 17
வலிகாம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் ரெட்றேஞ்சஸ் அணி மோதிக்கொண்டது. இதில் குருநகர் பாடும்மீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி அணி மோதிக்கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23-86)

## யாழ். மாவட்டத் தாச்சித்தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு மாகாண சபையின் கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதிப்பங்களிப்புடன் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் தாவடி ஸ்ரீ காளி அம்பாள் 'பி' அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து 'பி' அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் ஆலடி சிந்து 'பி' அணி 4:1என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மானிப்பாய் ஆனந்தா அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி அணி மோதிக் கொண்டது. இதில் அளவெட்டி பாரதி 7:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
(ம-23-86)

## றோய் அபார சதம்

### இலகுவெற்றியைப் பதிவுசெய்தது ஈகிள்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 17
மன்னார் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'ரி-20' தொடரில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஸ்ரார் ஈக்கிள்ஸ் அணி கிறீன் பீல்ட் அணியை 61 ஓட்டங்கஎல் வெற்றிகொண்டது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் ஈக்கிள்ஸ் அணியினர் 20பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6இலக்குகளை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக றோய் 107 ஓட்டங்களையும், மில் ரன் 37 ஓட்டங்களையும், அரவிந் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கிறின்பீல்ட் அணி சார்பில் றூபராஜன், ஜேம்ஸ் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.
120 பந்துகளில் 243ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற கடினமான இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறின்பீல்ட் அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6



இலக்குகளை இழந்து 190ஓட்டங்களை மட்டும் பெற்று படுதோல்வியடைந்தனர். ஆதிகபட்சமாக மகிந்தன் 51 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஸ்ரார் ஈகிள்ஸ் அணி சார்பாக அஜித் தலா 2 இலக்குகளையும் அரவிந் மற்றும் ஜக்சன் இருவரும் தலா ஓர் இலக்கினையும் கைப்பற்றினர். (23)

## கரப்பந்தாட்டத் தொடர் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 17
வடக்கு, மலையக விளையாட்டு ஒன்றியம் நடந்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆண்களுக்கான தொடரில் யாழ். மாவட்டத்திலிருத்து சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அணியும், புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி அணியும், வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியும் கலந்து கொள்கின்ற அதேநேரம் ஆவரங்கால் இந்து இளைஞர் மைதானத்தில் ஆரம்பமாகும் பெண்கள் பிரிவினருக்கான ஆட்டத்தில் யாழ். மாவட்டத்திலிருந்து வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அணியும், புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரிஅணியும், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணியும் கலந்து கொள்ளவுள்ளன.
ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை காலை 9 மணிக்கு இந்தத் தொடருக்கான தொடக்க விழாக்கள் நடைபெறவுள்ளன. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 17
***கலைமதி வி.க.தொடர்***
வலிகாம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நக்கீரன் அணியை எதிர்த்து யுத் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஹென்றிஸ் அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் அணி மோதவுள்ளது.
***அரியாலை கரப்பந்தாட்டத் தொடர்***
அரியாலை சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரிதியாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் மின்ஒளியில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று வெள்ளிக்க கிழமை இடம் பெறும் அரையிறுதி ஆட்டங்களில் இரவு 7மணிக்கு நடைபெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு, 8.30மணிக்கு இடம் பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் அணி மோதவுள்ளது.
(23)

***கொலின்ஸ் வி.க.தொடர்***
கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக லீக் முறையில் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று இரவு குறித்த மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.
இன்றைய அரையிறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-108)

***சென்.அன்ரனிஸ் வி.க.தொடர்***
தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் ரி-20 தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் சமீப நாள்களாக இடம்பெற்று வருகின்றன.
இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிங்ஸ்ரார் அணியை எதிர்த்து சென்.ஹென்றிஸ் அணி மோதவுள்ளது. மதியம் 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாழ்வுபாடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து சென்.நீக்ளஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## அரையிறுதியில் அன்ரனிஸ்


யாழ்ப்பாணம், ஜூலை 17
கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சமீப நாள்களாக மின்னொளியில் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது.
(ம-23)

# பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுத்தது இலங்கை

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 5 ஒருநாள் ஆட்டங்களைக்கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 2 இலக்குகளால் பாகிஸ்தானை வீழ்த்தி தொடரை 1–1என்று சமநிலைப்படுத்தியுள்ளது இலங்கை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க ஆரம்பவீரர்களாக களமிறங்கினர் அஷார் அலி மற்றும் அஹமட் செஷாட். இலக்குகள் இலகுவில் வீழ்ந்துவிடாமல் இணைப்பாட்டம் நிதானிக்கவே செய்தது. வீழ்த்திவிடுவதென்று விடாப்பிடியாக நின்றார்கள் இலங்கைப் பந்துவீச்சாளர்கள். 14ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தில் அணியின் ஓட்டம் 59ஆக இருந்தபொழுது செஷாட் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். களத்தில் கடந்த ஆட்டத்தில் சகலதுறை வீரராக ஜொலித்து இலங்கைக்கு எமனாக மாறிய ஹபீஸ். இந்த ஆட்டத்தில் முழுவதுமாக பத்து ஓட்டங்களை எட்டவில்லை. அலாம் பதின்மத்துடன் விடைபெற ஒருமுனையில் போராடிக்கொண்டிருந்த அஷாருடன் இணைந்தார் மலிக். இணைப்பாட்டம் குறிப்பிட்டுச்சொல்லுமளவுக்கு சிறப்பாக அமைய பாகிஸ்தான் சரிவிலிருந்து மீண்டு பலம்பெறத் தொடங்கியது. அரைச்சதம் கண்டார் அஷார். அடித்து நொறுக்கிக்கொண்டிருந்தார் மலிக். இணைப்பாட்டமாக 83 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் மலிக்கின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களில் அஷாரும் விடைபெற தற்பொழுது பாகிஸ்தான் 217–6 (42 பந்துப்பரிமாற்றங்கள்). மீதமிருந்த 8 பந்துப்பரிமாற்றங்களில் ரிஸ்வரும் அன்வரும் 140 என்ற சராசரியில் வெளுத்து வாங்கினார்கள். முடிவில் பாகிஸ்தான் 287–8.

300 பந்துகளில் 288 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற சாத்தியமாகக்கூடிய இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கைக்கு குஷல் பெரேரா தனது அதிரடியில் பதட்டமில்லாத இன்னிங்ஸை அமைத்துக்கொடுத்தார். முழுமையாக நான்கு பந்துப்பரிமாற்றங்கள் நிறைவடையவில்லை இலங்கை 50 ஓட்டங்களை எட்டிவிட்டது. இதில் குஷல் பெரேராவின் பங்களிப்பு 39 ஓட்டங்கள். அதிரடி நீண்டு கொண்டே சென்றது. 17 பந்துகளை எதிர்கொண்டு 11 பவுண்டரிகள் ஒரு சிக்சர் அடங்கலாக அரைச்சதத்தை எட்டினார் குஷல். முதலாவது பவர்பிளே முடியும்பொழுது இலங்கை 98–1. 68 (25 பந்துகள்) ஓட்டங்களுடன் குஷல் விடைபெற்றுவிட்டார். தற்பொழுது இலங்கை 240 பந்துகளில் 190 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. மத்திய வரிசை வீரர்களின் பதட்டம் குஷலால் குறைக்கப்பட்டது. மறுமுனையில் அரைச்சதத்தை தவறவிட்டார் டில்சான். மத்தியூஸ், திரிமன்னே சொதப்பல். நம்பிக்கை தந்தார் சந்திமால். பின்வரிசை வீரர்கள் சந்திமாலுக்கு பக்கபலமாக இருக்க முடிவில் இலங்கை 2 இலக்குகளால் வெற்றியைப் பதிவுசெய்தது. (ம)




## விம்பிள்டனை வீழ்த்தியது அமெரிக்க ரென்னிஸ்தொடர்

நடப்பு ஆண்டின் கடைசி சர்வதேச ரென்னிஸ் தொடரான அமெரிக்க திறந்த (அனைவருக்குமான) ரென்னிஸ் தொடர் அடுத்த மாதம் 31ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதிவரை நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில் இதற்கான பரிசுத் தொகை விவரம் கடந்த ஆண்டை விட 10.5 சத வீதம் உயர்த்தப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்டுள்ள பரிசுத்தொகையின்படி தொடருக்கான மொத்த பரிசுத்தொகை இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 700 கோடிகளாகும். இதன் மூலம் விம்பிள்டனை பின்னுக்குத்தள்ளி (670 கோடிகள்) அதிக பரிசுத்தொகையை தரும் சர்வதேச ரென்னிஸ் தொடர் என்ற சிறப்பை அமெரிக்க ரென்னிஸ் தொடர் தட்டிச் சென்றுள்ளது. இதில் ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்லும் வீரர், வீராங்கனைக்கு கிட்டத்தட்ட தலா 70 கோடிகள் வரை கிடைக்கும். (ம)

# சச்சினின் தந்திரம்

இ[illegible]ய அணியின் நட்சத்திர வீரரும் கிரிக்கெட்டின் கடவுள் என்று ரசிகர்களால் அழைக்கப்படுபவருமான சச்சின் தனது மகனுக்கு தற்பொழுது இங்கிலாந்தில் வைத்து பயிற்சியளித்து வருகிறார். இதன் மூலம் தனது மகனான அர்ஜுனை இந்திய அணியில் விரைவில் இடம் பெறச் செய்வதே சச்சினின் நோக்கமாக உள்ளது என்பது மறைமுகமாகத் தெரிகிறது.


இந்தியாவில் வேகப்பந்துவீச்சாளர்கள் பெரிதளவில் இல்லை. அதே நேரத்தில் வேகப்பந்துவீச்சுடன் துடுப்பெடுத்தாடவும் செய்யக்கூடிய சகலதுறை வீரர்கள் அறவே இல்லை. எனவே தனது மகனை வேகப்பந்து வீச்சிலும் அதேநேரத்தில் துடுப்பாட்ட வீரராகவும் உருவாக்கினால் [illegible]ருக்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கும் என்பதை உணர்ந்த சச்சின் தனது மகனை அவ்வாறான ஒரு வழியில் நெறிப்படுத்துகிறார். மும்பையின் பயிற்றுனராக பொண்டிங் செயற்பட்ட வேளையில் பொண்டிங்கிடம் தனது மகனை பயிற்சிக்காக அனுப்பினார் சச்சின். இதனால் அர்ஜுனுக்கு ஆஸ்திரேலிய ஆடுகளங்கள் தொடர்பாக சிறப்பான அறிவு வந்திருக்கும். பின்னர் தற்பொழுது இங்கிலாந்துக்கு குடும்பத்தவருடன் சுற்றுலா சென்றுள்ள சச்சின் ஆஷஸ் தொடருக்காக இங்கிலாந்து வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்களுக்கு பந்துவீசி பயிற்சியெடுக்குமாறு மகனைப் பணிக்க அர்ஜுனும் இங்கிலாந்து வீரர்களுடன் இணைந்து பயிற்சியெடுத்து வருகிறார். இதனால் இங்கிலாந்தின் ஆடுகளங்கள் அர்ஜுனுக்கு பழக்கப்பட்டதொன்றாக மாறியிருக்கும். இந்திய வீரர்கள் தடுமாறுவது ஆசி மற்றும் இங்கிலாந்து நாடுகளின் ஆடுகளங்களிலேயே. இவற்றை நன்கறிந்த சச்சின் ஏனைய இந்திய வீரர்களின் பலவீனங்களில் தனது மகனைப் பலப்படுத்திக்கொள்ள நீண்ட திட்டமிடலின் மூலம் அவரை நெறிப்படுத்துகிறார். இவையெல்லாவற்றையும் வைத்துப்பார்க்கும் பொழுது விரைவில் இந்திய அணியில் குட்டி சச்சினைப் பார்க்கலாம் என்றே தோன்றுகிறது. (ம)



# இந்தியா, பாகிஸ்தான் வரிசையில்

## தென்னாபிரிக்காவையும் புரட்டியெடுத்தது பங்களாதேஷ்

## வரலாற்றுச் சாதனையாகவும் பதிவு




தென்னாபிரிக்கா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் 9 இலக்குகளால் தென்னாபிரிக்காவை மிக இலகுவாக வீழ்த்தி 2–1 என்ற அடிப்படையில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக கிண்ணத்தைக் கைப்பற்றி வரலாற்றுச்சாதனையை பதிவுசெய்தது பங்களாதேஷ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் ஹொக் மற்றும் அம்லா. சொதப்பலை ஆரம்பித்து வைத்தார் ஹொக். பதின்மத்தில் பவிலியன் திரும்பினார் அம்லா. வந்த வேகத்தில் விடைபெற்றார் பிளாஸிஸ். நிலைக்கவில்லை ரொஸ்சொவ். தற்பொழுது தென்னாபிரிக்கா 50–4. மொத்தத்தில் தென்னாபிரிக்காவின் தொடக்கம் பங்களதேஷிடம் எடுபடவில்லை. போராடத் தயாரானார்கள் மில்லரும் டுமினியும். இலக்குச்சரிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுக்கு ஏற்ப பந்துகளும் மீண்டெளமுடியாத அளவுக்கு வீணடிக்கப்பட்டன. மொத்தத்தில் இணைப்பாட்டத்தின் விளைவு பாதகமே. மண்ணின் மைந்தர்களான பங்களாதேஷுக்கு மழையும் பக்கபலமாக இருக்க ஆட்டம் 40 பந்துப்பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டது. முடிவில் தென்னாபிரிக்கா 168–9.

169 ஓட்டங்களைப் பெற்றால் தொடரைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனையைப் பதிவுசெய்துவிடலாம் என்ற நிலைமையில் களமிறங்கிய பங்களாதேஷிற்கு அதன் ஆரம்ப வீரர்களே வெற்றிக்கான அடித்தளத்தை அழுத்தம் திருத்தமாக பதிவுசெய்தனர். தென்னாபிரிக்காவின் வேகங்களும் சுழலும் இக்பால் மற்றும் சர்கரின் கட்டுக்கோப்பான துடுப்பாட்டத்தில் செயலிழந்து செய்வதறியாது திகைத்தன. இணைப்பாட்டம் நூறினைக் கடந்து ஆளுக்கொரு அரைச்சதமும் எட்டிவிட்டாயிற்று இலக்குகள் மட்டும் விழுந்தபாடில்லை. அதிரடியை இரண்டிப்பாக்கி சதத்தை நெருங்கிக்கொண்டிருந்த சர்கார் சறுக்கினார் 90 ஓட்டங்களுடன். வங்கப்புலிகளின் முதலிலக்கு 154 ஓட்டங்களிலேயே சரிக்கப்பட்டது. வெற்றிக்கு இன்னமும் தேவை வெறும் பதினாறு ஓட்டங்களே. ஆட்டத்தை பக்காவாக முடித்து வைத்தனர் இக்பாலும் டாஸிம். முடிவில் 9 இலக்குகளால் தென்னாபிரிக்காவை வீழ்த்தி பங்களாதேஷின் கிரிக்கெட் வரலாற்றில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக முதலாவதாக தொடரைக் கைப்பற்றி வரலாறு படைத்தன வங்கத்துப்புலிகள். ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் சர்கார் தெரிவானார். (ம)

# டோனி இடம்தந்தால் தொடர்ந்து அசத்துவேன் –பாண்டே

சிம்பாப்வேக்கு எதிராக அறிமுகமாகிய இனிமையான தருணத்தை என்னுடைய வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாது என்று இந்திய வீரர் மணீஷ் பாண்டே தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வேக்கு எதிராக அறிமுகமாகும்பொழுது ஆனந்தக்கண்ணீருடன் களமிறங்கிய பாண்டே 71 ஓட்டங்கள் குவித்ததோடு, கேதார் ஜாதேவுடன் இணைந்து அணியையும் சரிவிலிருந்து மீட்டார். இந்த நிலையில் அறிமுக ஆட்டம் தொடர்பாக நேற்று பாண்டே தெரிவித்ததாவது இந்திய அணிக்காக விளையாட வேண்டும் என்ற எனது நீண்டகால கனவு இப்போது நனவாகியிருக்கிறது. இந்தியாவுக்காக விளையாடியதை என்னுடைய அதிஷ்டமாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்புக்காக சில காலம் காத்திருந்தேன். இந்திய அணித்தலைவர் டோனி அடுத்த தொடர்களுக்காக என்னைத் தெரிவு செய்யும் பட்சத் தில் தொடர்ந்து அசத்துவேன் என்றார்.



(ம)



# எட்டா உயரத்தில் செரீனா

ரென்னிஸ் தொடர்களில் தொடர்ச்சியாக வெற்றிமேல் வெற்றிகளை குவித்து வரும் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், தரப்படுத்தலில் தொடர்ந்து முதலிடத்தில் நீடிப்பதுடன் தனக்கும் இரண்டாவது இடத்திலுள்ள வீராங்கனைக்கும் இடையே இமாலய இடைவெளியைப்பேணி சாதனை படைத்துள்ளார்.

அதாவது முதலிடத்தில் இருக்கும் செரீனா 13ஆயிரத்து 161 புள்ளிகளைப் பெற்றிருக்க அவருக்கு அடுத்து 2ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவின் மரிய ஷரபோவா 6 ஆயிரத்து 490 புள்ளிகளை பெற்றுள்ளார். இதனால் இருவருக்கும் இடையே 6 ஆயிரத்து 671 புள்ளிகள் வித்தியாசம் உள்ளது. சர்வதேச ரென்னிஸ்ஸில் தரப்படுத்தலிடத் தொடங்கிய ஆண்டு முதல் நடப்பாண்டு வரையான நீண்டகால இடைவெளியில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையொருவர் தனக்கு அடுத்த இடத்திலுள்ள வீராங்கனையிடத்தில் இவ்வாறு இமாலய வேறுபாட்டைப் பேணுவது இதுவே முதல் தடவை. மட்டுமல்லாது அடுத்த 20 தொடர்களில் செரீனா பங்கேற்காமல் ஷரபோவா கிண்ணம் வெல்லும் பட்சத்திலும் செரினாவின் அரியணையை அசைக்க முடியாது. ஆனால் செரீனாவை விட ஷரபோவாவே அதிகம் சம்பாதிக்கிறார். அதேபோல் ஷரபோவாவுக்கு அதிக ரசிகர்களும் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)


## வாக்களிப்பில் பங்குபற்ற முன் ஆயத்தம் செய்வோம்


1. வாக்காளர் அட்டையை முன் கூட்டியே பெற்றுக் கொள்வோம்.
2. வாக்காளர் அட்டை கிடைக்காத நிலையிலும் வாக்களிக்க உங்களுக்கு உரிமை உண்டு.
3. தேசிய அடையாள அட்டை வாக்களிப்புக்கு அவசியமானது.
4. தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில் தேர்தல் ஆணையாளரால் வழங்கப்படும் சிறப்பு அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
5. வாக்களிப்பு நிலையத்தை முன்கூட்டியே அறிந்து கொள்ளுங்கள்.
6. நீங்கள் தெரிவு செய்யும் கட்சியையும், பிரதிநிதியையும் முன்கூட்டியே அறிந்துகொள்ளுங்கள்.
7. நோயாளர்கள், முதியோர்கள் வாக்களிப்பு நிலையத்துக்கு செல்வதற்கு வாகன முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்
8. நேரத்துடன் வாக்களிப்பு நிலையத்துக்கு சென்று வாக்களியுங்கள்.

குறிப்பு: மேலதிக தேவைகளுக்கு உங்கள் கிராம சேவையாளரை நாடுங்கள்.

**வாக்களிப்போம் ஜனநாயகத்தைப் பேணுவோம்.**

அனுசரணை: கரிதாஸ் கியூடெக் யாழ்ப்பாணம்.


# கப்டன் கூல் என்பதனை மீண்டும் நிரூபித்தார் டோனி



ஐ.பி.எல். தொடரில் சென்னை அணியின் உரிமையாளர்களில் ஒருவரான மெய்யப்பன் சூதாட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து சென்னை அணிக்கு இரண்டு ஆண்டுகாலத் தடை அண்மையில் விதிக்கப்பட்டது. சென்னைக்கு தடை விதிக்கப்பட்ட நேரத்தில் இந்திய அணித்தலைவர் டோனி டெல்லியில் உள்ள பாட சாலைக்குச் சென்று மாணவருடன் மாணவனாக இருந்து பாடத்தை அவதானித்ததுடன் கிரிக்கெட் நுட்பங்களைப் பயிற்றுவிக்கும் ஆசிரியராவும் மாறியுள்ளார். டோனி வருகிறார் என்றதும் அந்தப் பாடசாலை விழாக் கோலம் பூண்டிருந்தது. பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் குறிப்பிட்ட நிமிடத்துக்கு 15 நிமிடங்கள் முன்னதாக வந்த டோனி பாடங்களை அவதானிக்கும் மாணவனாகவும் கற்பிக்கும் ஆசிரியராகவும் மாறியுள்ளார். மட்டுமல்லாது நூறு சதவீத வரவினைப் பதிவுசெய்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கியும் கௌரவித்துள்ளார். இவ்வாறான நெருக் கடிகளுக்குள் டோனி பதட்டமே இல்லாது இருந்த மையை 'கப்டன் கூல்' என்பதனை டோனி மீண்டும் நிரூபித்துள்ளார். சென்னை சுப்பர் கிங்ஸ் என்ற பெயரில் தானே விளையாடக் கூடாது. வேறு ஒரு பெயரில் விளையாடினால் எல்லாம் சரி என்று அவரது ரசிகர்கள் வலைத் தளங்களில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். (ம)

# சங்கா சதம், சர்ரே வெற்றி

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் கழகங்களுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் இலங்கையின் நட்சத்திர வீரர் சங்கக்காரா சதம் விளாசியுள்ளார். இந்தச் சதம் முதல்தர ஆட்டங்களில் சங்கா வின் 53ஆவது சதமாகும்.

சங்கா விளையாடிவரும் சர்ரே அணிக்கும் கென்ற் அணிக்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டம் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ற் 336 ஓட்டங்களில் சுருண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சர்ரே சரிவு காண சங்கா சதமடித்து சர்ரேயை மீட்டார். இதனால் சர்ரே 311 ஓட்டங்களைப்பெற்றது. 25 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கென்ற் 99 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் 125 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சர்ரே 6 இலக்குகளால் வெற்றி யீட்டியது. மொத்தத் தில் சங்காவின் சதத் தால் சர்ரே வெற்றியீட்டியது. இரண்டாவது இன்னிங்ஸில் சங்கா ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தது வேறு கதை. (ம)





**தமிழ் கருத்தரங்கு-2015**

இடம்:- NEC ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

காலம் 18/7, சனிக்கிழமை 8.00 மணி
22/7, 26/7

A.K கீர்த்திராஜன் B.A(Hons), M.A(Hons) in Tamil.

- மூன்று நாட்கள் நடைபெறும்.
- இறுதிபரீட்சைக்கு எதிர்பார்க்கப்படும் வினாக்கள் மாத்திரம்.

(C 17967)

**LOGIC - A/L 2015**

**விசேட கருத்தரங்கு**

காலம்:- 25.07.2015 - சனி - 9 am-3pm

**எதிர்பார்ப்பு வினாவிடைகள்**

வளவாளர்கள், சிரேஸ்ட ஆசிரியர்கள்
S.சயந்தன்-MED, S.துரைரத்தினம்-MED
P.கமல்-MED

- வெளிமாணவரும் பங்குபற்றலாம்
- பதிவுகள் இடம்பெறுகிறது

**நாவலர் கல்வி நிலையம்**
(NEC) ஆனைப்பந்தி-யாழ்ப்பாணம்
(C 17966) தொடர்பு:- 077 552 6511

**விசேட கருத்தரங்கு**

26 ஆம் திகதி நடைபெற இருக்கும் திறந்த பல்கலைக்கழக கல்வி டிப்ளோமா தெரிவுப் பரீட்சைக்கானது.

சனி, ஞாயிறு காலை
9.00-2.00
தொடர்பு:- 076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு(யாழ் ஆஸ்பத்திரி வீதி -கொமர்ஷல் வங்கி (c 17969) அருகில்)

**British College of Higher Studies**
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக **UK** செல்பவர்களுக்கான
A1 **IELTS** *Life Skills*
இப்பாட நெறியானது எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது. 2015 புதிய விசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
**IELTS** (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
**Hotlines: 0777585913,0777222422, 0714299935**


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.